www.tamilarangam.net

1

கலை-இலக்கிய முத்திங்கள் இதழ்

மே.ஜூன்.ஜூலை 1993



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாவேந்தர் பாரதிதாசன்


(முனைவர் இரா. இளவரசு எழுதிய முன்னுரையிலிருந்து)



போய்த் தொடு வோம் அந்த விண்ணை அமுதத்தைப்
பூமிக் கெல்லாந் தருவோம்
தாய்கொடுத் தாளிந்தச் சத்தியவேல் என்று
தாரணி ஆண்டிடுவோம்.
ஏழைகள் கையிருப் புள்ளவர் என்னும்
இரட்டையை கொன்றிடுவோம்
கூழுக் கொருத்தன் அழும்படி ஆண்டிடும்
கோலை முறித்திடுவோம்.

தமிழ் வேறு தான் வேறு என்றில்லாமல் " நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும் நான். நான். நான் " என்று முழங்கிய தமிழ் அரிமா. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் பாட்டிலக்கிய வரலாற்றில் அழுத்தமான பதிவுகளை ஏற்படுத்தித் தனக்குபின்னே ஒருபாட்டுக் குயில்களின் பட்டாளத்தையே விட்டுச் சென்ற பெருமை அவரின் உரிமை. தன்னேரில்லா தமிழ் மறுமலர்ச்சி பாவலராக விங்கிய அவர் நெஞ்சில் உற்றதைச் செய்கையில் நாட்டச் சிறிதும் தயங்காதவர். இளமைமுதல் இறுதிக்காலம் வரை சூழ்ச்சி, வஞ்சகர், பொறாமை ஆகியவற்றைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை கொண்ட களமறவராகத் திகழ்ந்தவர்.

இன்னார், இனியர் என்னும் வேறுபாடின்றி எந்நிலையினராயினும் தமிழுக்கும் தமிழர்க்கும் எதிரானவரெனத்தான் கருதுவோரை கண்ணோட்டமின்றிச் சாடிய தறுகண்ணாளர். பல இயக்கங்கள் அவரின் பணிகளை பெற்றுச் சிறந்தன. எனினும் அவரே ஓர் இயக்கமாக விளங்கியவர். ஆம் பாவேந்தர் என்பது ஒரு தனிமாந்தரின் பெயர் என்பதை விட ஓர் இயக்கத்தின் பெயர் எனல் சாலும்.



www.tamilarangam.net

*சொட்டுச் சொட்டாய் தேங்கி மடை உடைத்த வெள்ளமென*

காதலில்தான் மௌனம் சம்மதமென கொள்ளப்படுகின்றது.
அங்கே மௌனம் தன் அர்த்தம் இழந்து, நெகிழ்ந்து தன்னிலை மறக்கையில் சம்மதமாகின்றது.
அந்த மௌனப் போதுகளில் கன்னம் மெருகேறி, கண்ணிமைகள் தாழ்ந்து, இதழ்கள் துடித்து மௌனம் மொழியாகின்றது. இப்படி பொய்யாகிப்போன மௌனம் விருப்ப உணர்வாகின்றது.
காதலல்லாத நிகழ்வுகளில் மௌனம் இப்படியெல்லாம் விருப்ப உணர்வாவதில்லை. கோப உறைதலாகின்றது.
மௌனம் கொள்ளாத'சூழல் கைதியை' சமரசங்கள் ஆட்கொள்ள, போர்க்குணம் தணிகின்றது. ஆதலால் மௌனம் தவிர்க்க இயலாத நிகழ்வாகின்றது.
மௌனங்கள் உறைந்து உறைந்துதான் கோபாக்கினியும் மூள்கின்றது. சொட்டு சொட்டாய் தேங்கிய மௌனம் மடை உடைத்து பாய்கையில் எல்லைகள், விலங்குகள் சிதறுகின்றன. கட்டறுந்த சிறகுகள் விரிகின்றன.
நீண்ட ஆழ்ந்த மௌனங்கள் இப்படித்தான் இலக்கியங்களாகின்றன- சாட்சியங்களாகின்றன.
வரலாற்று குருடர்களை புறந்தள்ளி மௌனம் எக்காளமிடுகையில், உலகம் குலுங்குகின்றது. உதயங்கள் எழுகின்றன.
வரலாறு மீள் படைப்பாகின்றது.
தூங்கும் எரிமலையாய், அலை எழா ஆழ்கடலாய், புயல் எழுமுன் சூனியமாய்....
கூட்டு மௌனங்கள்.



மௌனங்களின் சங்கமிப்பு சங்கமாய்....

* * * * * * * * *

மௌனிகளின் பதிவான 'மௌனம்' இருநூறு பிரதிகள் மட்டுமே வெளியிடப்படுகின்றது.
மக்களுக்காக வெளியிடுகின்றோம்- வென்றெடுக்கப் போகின்றோம் என்ற 'மிதப்பு' எதுவும் கிடையாது.
அறிமுகமான வாசக ஆர்வலரில் நேசம்மிக்கோரை சென்றடைதலும், இணைவதுமே இதன் திசையாகும்.
மௌனித்துள்ள கலை இலக்கிய பதிவுகளை, சமூகத்தளங்களை, வரலாற்றின் பக்கங்களை, வெளிக்கொணர முயல்வதே இதன் செயலாகும்.
ஆங்கிலம் படித்து, அதில் சிந்தித்து ஆங்கிலேயருக்கு கற்பிக்கும்- எழுதும் கல்விப் பாரம்பரியத்தையும், கல்விமான்களையும் கொண்ட சமூகத்தில், 'இளக்காரமான தமிழ்பேசும்' மௌனிகளின் இதழ்தான் இந்த மௌனம்.
அந்த பலவீனப்பட்ட சமூகத்தின் தேவையும், அவாவுமோ அளப்பரியவை. மௌனித்து க்கிடப்பவை.
இதற்காய் பூக்கும் நூறு பூக்களில் ஒரு பூவென மௌனமும் புன்னகைக்கும் - தன்னை வடிவமைக்கும்.
பூக்கும் நூறும் சிவப்பு ரோஜாவாய் இருக்கும்படி விதிக்கப்படின்- விமர்சிக்கப்படின், மௌனம் வெவ்வேறு வண்ணங்களில் பூத்தும் காட்டும்! எப்படியாயினும் கலைச்செல்வங்கள் சுமக்கும் பெட்டமாகவும்; மேலே மொழிச்செழுமையை காவும் கடத்தியாகவும்; தமிழை-கலாச்சாரத்தை பரிமாறும் மையமாகவும்; நோய்வாய்ப்பட்ட சமூகத்தின் தாதியாகவும்; இனிவரும் தலைமுறையின் நம்பிக்கையாகவும், இருக்க மௌனம் உறுதி கொள்கின்றது.

மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் புரட்டுமென.....

* * * * * * * * * *


- நண்பர்களுக்கு மட்டும் -

**தொகுப்பாளர்:**
கி.பி.அரவிந்தன்

**இணை தொகுப்பாளர்:**
க.முகுந்தன்

# மௌனம் ❶

கலை இலக்கிய இதழ்

மே, யூன், யூலை'93
வள்ளுவர் ஆண்டு 2024

**கணனி பதிவு:**
பொ.இரவிச்சந்திரன்

**வடிவமைப்பு:**
ஆத்மன் & அநாமிகன்

**வெளியீடு:**
A.F.T.C. சார்பாக பு.விக்னேஸ்வரன்



✉ :
**MOUNAM**
*6, Square du Roule*
*92200 NEUILLY S/SEINE*
*FRANCE*

www.tamilarangam.net

அரச வன்முறையாலும், ஆயுதபாணியானோரின் வன்முறையாலும் கனவுகளுக்காய் கொலையுண்டிறந்தவர்களை 'மௌனம்' நினைவில் கொள்கின்றது. தலைதாழ்த்துகின்றது.
ஆயுதகலாச்சார பரம்பலினால் தற்காப்பு நிலைமாறி தற்கொலைக்கொப்பாய் சமூகம் தள்ளப்பட்டிருக்கிறது. இவ்வாயுத காலச்சாரப்பரம்பலின் பொறுப்பாளிகள் நாங்களல்ல என வேறுபக்கம் கைநீட்டி தப்பித்துக் கொள்ளமுடியாது. 'மௌனிகள்' உள்ளிட்ட சமதலைமுறையினரும், அவர்தம் நாவும், போனாவும் கூடத்தான் என்பதனை வேதனையுடன் மௌனம் ஏற்றுக்கொள்கின்றது.
வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்ததனாலேயே 'போராட்ட குற்றவாளிகள்' அற்றவர்களாய் நாங்கள் மாறியுள்ளோம்- கொல்லாமை, நிலையாமை பற்றிய ஒளிகிடைத்து புனிதத்துவத்தை பெற்றுவிட்டோம் எனும் மார்தட்டலை 'மௌனம்' மறுதலிக்கின்றது.
பொய்மைகளை, கருத்து எழுத்து அழகுகளால் மூடிமறைப்பதனையும் மௌனம் ஏற்க மறுக்கின்றது.
தமது முன்னெடுப்புகள் பலவற்றில் 'மௌனிகள்' தோற்றவர்கள் சிதைந்தவர்கள் என்பதனை அறிக்கை செய்வதுடன், எண்பதுகளின் பிற்பகுதியில் உலகெங்கும் நிகழ்ந்த - நிகழ்ந்த வண்ணம் உள்ள சறுக்கல்களையும், தோல்விகளையும், மாற்றங்களையும் உள்வாங்கி கற்க கடப்பாடுடையவர்கள் என்பதனையும் ஏற்கின்றது.
'கூட்டத்தில் கூடிநின்று கூவிப்பிதற்றலன்றி நாட்டத்தில் கொள்ளாதார்' பற்றி பாரதி கொள்ளும் கவலையை 'மௌனமும்' தனதாய் வரித்தக் கொள்வதுடன், பல்வேறு காரணிகளால் அருகிச் செல்லும் மனிதவிழுமியங்களை மீட்டெடுக்கும் நம் அடையாளத்தை பேணும்- இருப்பை உறுதிசெய்யும்.

'கலாச்சார ஒன்றித்தலிலும்', 'கலாச்சார புத்தமைவிலும்' ஆற்றல் மிக்கோருடன் கைகோர்க்கும்.

**மனிதர்களின் மீது பின்னப்பட்ட சமூகத்தின் சக்தி களையும் ஆற்றல்களையும் எதிர்த்தும், அதோடு இணைந்தும் போராடிவரும் மனித உறுதியின் வெளிப்பாடே சிறந்த படைப்பிலக்கியமாகும்.**

**- ஆர்தர் மில்லர்**






மௌனம் இதழில் பல ஆக்கங்கள் 'சுபமங்களா' இதழில் இருந்து நன்றியுடன் மறுபிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. பத்தோடு பதினொன்றாய் தமிழ்நாட்டில் வெளிவரும் வணிக ஜனரஞ்சக இதழ்களில் ஒன்றாய் 'ஸ்ரீராம் சிட் பண்ட்ஸ்' என்னும் நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்பட்ட 'சுபமங்களா' இதழ் நாடகாசிரியரும், இயக்குநருமான கோமல் சுவாமிநாதன் அவர்கள் பொறுப்பேற்றதுடன் பண்புமாற்றம் பெற்றது. தற்போது தமிழின் தரமான இதழ் 'சுபமங்களா' என பெயர் பெற்றுள்ளது.

தமிழில் தற்போது ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுக்கும், தேடலுக்கும், வளப்படுத்தும் முனைப்புக்கும், 'சுபமங்களா' ஓர் அடையாளம்.

தமிழில் வணிக ஜனரஞ்சக இதழ்களென்று ஒருபிரிவும், வட்டங்கள், உள்வட்டங்களான கனதிகொண்ட சிற்றிலக்கிய இதழ்கள் என்று வேறொரு பிரிவும், இணையாத துருவங்களென இருந்தநிலையில், சிற்றிலக்கிய இதழ்களின் கனத்தையும், வணிக இதழ்களின் உத்தி, நிதி ஆதாரத்தையும் கொண்டு வாசகபரப்பெல்லையை அகலித்த இலக்கிய இதழாய், 'தமிழ்' இதழாய் சுபமங்களா வெளிவருகின்றது.

இந்திய மார்சிஸ்ட் கட்சியை சேர்ந்தவரும், முற்போக்கு எழுத்தாளர் சங்க உறுப்பினருமாக இருந்தவரான கோமல் சுவாமிநாதன் நாடகத்துறையில் இருந்து 'தண்ணீர்தண்ணீர்' மூலம் சினிமாத்துறைக்கு சென்று, 'ஒரு இந்தியக்கனவு' நொறுங்கியதால் பத்திரிகைத் துறைக்கு வந்தார்.

அவரது வருகை 'புதியபார்வை, புதிய சிந்தனை'க்காக ஏங்கி அவாவிய தருணத்துடன் ஒத்து இருந்ததால் இரு வருடத்தையும் தாண்டி பத்திரிகைத்துறையில் நிலைபெற்றுள்ளதெனலாம்.

'சுபமங்களா' வெளிவரத் தொடங்கி இரு வருடங்களின் பின்னாலேயே ஐரோப்பாவில் தமிழ்க்கலாச்சாரம் 'விற்கும் இடங்களில்' வாங்க முடிந்துள்ளது.

டி.ராஜேந்தரின் 'உஷா' சென்னையில் வெளிவந்த உடனேயே இங்கே 'கலாச்சார விற்பனை நிலையங்களில்' உற்சாகமாத் தொங்கும் நிலையில், தமிழ் பற்றியதான 'சுபமங்களா' மூலையில் தன்னும் ஒதுங்கிக்கிடக்க இரண்டுவருடமாகி விட்டது. எது எப்படியாயினும் எம்மவர்களின் கைகளுக்கு இது எட்டியது மகிழ்ச்சிதான்!

*சுபமங்களா:21, மகாலெட்சுமி தெரு, தியாகராய நகர், சென்னை-600 017 ,இந்தியா.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்தாடல்:

# சிறுபத்திரிகை என்றால்.....

● ஆரோக்கியமான கலாச்சாரச் சூழல் பற்றிய அக்கறைதான் சிறு பத்திரிகையின் ஆதாரத்தளம். இத்தகைய கலாச் சாரச் சூழலை அழிப்பதன் மூலம் வணிகக்கலாச்சாரம் முதற்கொண்டு-முதலாளியம், அரசு அதிகாரம், ஏகாதிபத்தியம் எனத் தொடரும் சக்திகள் தம்மை வளர்த்துக் கொள்ளுகின்றன. இச்சக்திகள் மனிதவாழ்வுக்கு ஆதாரமான சூழலை அழிக்கின்றன. இந்த உண்மையைச் சுட்டிக்காட்டுவதும், அழிவுகளுக்கு எதிராக மக்களை குறிப்பாக இளைஞர்களின் அறிவையும், உணர்வையும் தூண்டுவதும் சிற்றிதழ்களின் நோக்கம்.
*நிகழ் - ஞானி*

● ஜனரஞ்சகமானத்திற்கு எதிரானது என்கிறபோது, ஒத்தகருத்துள்ளவர்களை இணைப்பதும், குறைந்த வாசகர்களைப் பெற்றிருப்பதும், லாபநோக்கில்லாமல் ஆசிரியனே குறைந்த முதலீட்டுடன், கட்டுரைகள் தொகுப்பது, புரூப் திருத்துவது, அவனே சந்தாதாரருக்கு அனுப்புவது என்று எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருப்பதும், அதே சமயத்தில் எதற்காகவும் சமரசம் செய்து கொள்ளாதிருப்பதும் தான்.
*மேலும் - நா.சிவசுப்பிரமணியன்*

● படைப்புகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதே நோக்கமாகக் கொண்டு சிறுபத்திரிகைகள் செயல்படுகின்றன. பல சோதனை ரீதியான துணிச்சலான படைப்புக்களை சிறுபத்திரிகைகளில் தான் காணலாம். சிறு பத்திரிகை என்பது ஒரு பயிற்சி ஏடுமாதிரி. ஒரு திறமையான கலைப்படைப்பை சிறுபத்திரிகைதான் அடையாளம் காட்டும்.
*விருட்சம் - அழகிய சிங்கர்*

● சிறு பத்திரிகை என்பது பத்திரிகையின் அளவையோ, வாசகர்களின் எண்ணிக்கையையோ வைத்து நிர்ணயிக்கப் படுவதில்லை. கருத்துப்பலம் தான் சிறுபத்திரிகையைத் தீர்மானிக்கிறது. பெரும்பாலும் தனிமனித எழுச்சிகளே இவற்றின் பின்புலமாக இருப்பதால், இவை சிறுபத்திரிகையாக இயங்குகின்றன. தன்னுடைய மொழியின், கலாச்சாரத் தேவையை உணர்ந்து, அதற்கேற்ப தன்னுடைய பங்கைத் தீர்மானித்துக் கொள்வதும், கடந்தகாலச் சிறப்பம்சங்களின் தடம் தேய்ந்து போகாமல் பார்த்துக் கொள்வதும், கலாச்சாரத்தின் பல பகுதிகளிலும் சிந்தனையைப் பாய்ச்சுவதும், இன்றைய மதிப்பீடுகளை உள்ளடக்கி, புதுமைக்கும், சோதனைக்கும் இடமளித்து, மொழியை வளப்படுத்துவதும் ஒரு சிறு பத்திரிகை தேர்ந்தெடுக்கக் கூடிய வேலைகள் என்று நினைக்கிறேன்.
*வெளி - ரெங்கராஜன்*

● பெரும்பாலும் முதலாளித்துவ ரீதியிலான உற்பத்தி, மையப்படுத்தப்பட்ட வணிக நோக்கிலான விநியோகம், இன்று நிலவும் அரசியல்-கலாச்சார- வாழ்வியல் மதிப்பீடுகளை மறு உற்பத்தி செய்வதான விஷயங்களை முன்வைத்தல் என்பதிலிருந்து விலகி மேற்சொன்னவற்றில் உடைப்பை உண்டாக்க மேற்கொள்ளப்படும் பத்திரிகை முயற்சியே சிறு பத்திரிகை எனலாம்.
*நிறப்பிரிகை - ரவிக்குமார்-வேல்சாமி-அ.மார்க்ஸ்*

நன்றி:- சுபமங்களா

தொகுப்பு: நல்லையா

## அப்படியானால்...

தெறிக்கின்றன
ஒளிக்கதிர்கள்,
உங்கள்
கண்கூச.
நான்
கண்ணாடியல்ல.

ஏற்றப்படுகின்றன
அகல்விளக்குகள்,
உங்களுள்
அணைய, அணைய.....
நான்
அக்கினிகுஞ்சல்ல.

மறுபதிப்பாகின்றன
எழுத்துக்கள்,
உங்கள்
வேர்கிளற.
நான்
புத்தகமல்ல.

உங்களையே
கற்கிறேன்
மாலுட
உருக்கொள்ள.
அப்படியானால்
நான்.....?


கி.பி.அரவிந்தன்
பாரிஸ்14-01-93



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தலைநகரில் தமிழ்ச்சமுதாயம் எப்படி வாழ்கின்றது?**
**GARE DE NORD இலிருந்து FAUBOURG SAINT-DENIS வழியாக LA CHAPELLE வரையிலான பகுதி தமிழர்களின் கொடுக்கல்-வாங்கல்களுக்குரிய சந்திப்பு மையமாகிவிட்டது. பாரிசில் இந்தியர்கள் பற்றிய ஓர் அலசல்:**



*பெண்களாயின் சேலையும் நெற்றியில் பொட்டும், கைகூப்பி வணங்கிடும் பாங்கும் தனித்துவமாக இவர்களை வேறுபிரித்துக் காட்டிடும். இப்படியா னவர்களை Faubourg Saint-Denis யில் நிறையவே பார்க்கலாம்.*

**ஓர் பிரஞ்சுப்பத்திரிகையின் பார்வையில்...**

# பாரிசில் ஓர் "குட்டி இந்தியா"

கடந்த சிலவருடங்களாக புலம் பெயர்ந்த தமிழர்களின் சமூகத்தேவைகளுக்காக, FAUBOURG SAINT-DENIS வீதியில் அமைந்த கடைகள் தமிழர்களது கைக்கு மாறி விட்டன. இது இந்தச் சமூகத்தவர்களின் நடமாட்டங்களுக்கும்,பேச்சுவழக்குத் தொடர்பு சாலையாகி'குட்டி இந்தியா'வாகக் காட்சியளிக்கிறது. மிகத் தெளிவாகச் சொல்வதானால் இது ஒரு பரஸ்பர கொடுக்கல் வாங்கல்களுக்கான சந்திப்பு மையமாகி விட்டது. இத்தமிழர்களுக்கான அத்தியாவசியத்தேவைகளான உணவு, உடை, கலாச்சாரம் என்பன இங்கே கிடைக்கின்றன. அவர்களது தேச வழமையான விருந்தோம்பல்களை இவர்கள் தொடருகின்றார்கள்.

இந்தியாவில் தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, பியூஜி, மொறீசியஸ், றியூனியன் முதல் மடகஸ்கார் வரை, தெற்கு ஆபிரிக்கா, குதலோப், குயான்.... போன்ற பல இடங்களில் தமிழர்கள் வாழ்கின்றார்கள். பிரான்சில் சில தமிழர்கள் மடகஸ்கார், மொறீசியஸ், பிரஞ்சுக்காரராகக் கருதப்படும் றியூனியன், குதலூப் ஐச்சேர்ந்தவர்களும் மற்றும் பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர்களும் தங்கி வாழ்கிறார்கள். ஆயினும் இலங்கைச் சேர்ந்த தமிழர்கள் மிக அதிகமாக புகலிட தரிப்பிடமாக்கி விட்டனர். இங்கு எல்லாமாக 80 000 ற்கு மேற்பட்ட தமிழர்கள் தங்கி வாழ்கின்றார்கள்.

"23 நூற்றாண்டு காலமாக வித்தியாசப்படாத மொழியாகவும், நிச்சயமாக எழுத்துரு கொண்ட மிகப் பழைய மொழியாகவும் உலகில் இடம்பெற்று தனித்துவம் பெறுகிறது தமிழ்" என்று சொல்பவர் பாண்டிச்சேரியைச் சேர்ந்த மேற்குமொழி வல்லுனரான முடியப்ப நாதன் 'தமிழை சமஸ்கிருதத்துடன்தான் ஒப் பிடமுடியும். இம் மொழியின் இலக்கிய வளம்பற்றி பிரான்ஸ் முன்பே அறிந்துள்ளது.' என்று மேலும் அவர் குறிப்பிடுகின்றார்.

சாதீயம் என்பது சமூகரீதியாக வன்மையாகத் தொடரப்படும் ஒரு வழமை, பாரம்பரிய ரீதியாக பிராமணர் அல்லது படித்த அறிவாளிகள் முதன்மை ஸ்தானத்தை மொழியூடாகப் பெறுகின்றனர். பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து இப்போது பேசப்படும் தமிழ்மொழி குறிப்பிடத்தக்க அளவில் விலகியுள்ளதைக் காணலாம். மொழிவளம் பற்றிய தகவல்கள் ஒருபுறமிருக்க, இங்கு வார இதழாக வெளிவரும் 'ஈழநாடு' (பாரீஸ், ஜேர்மன், கனடாப்பதிப்புகளாக) இலக்கியத்தன்மை இல்லாமல் வெறும் தகவல் பரிமாற்றச் செய்திகளைக் காவியவாறு 5000 பிரதிகளை அதிரடியாக விநியோகிக்கிறது.

பாண்டிச்சேரிவாசிகள், இலங்கைவாசிகள் பேச்சுத்தமிழின் ஏற்ற இறக்கங்கள், தந்திரத்தன்மையான தொனி மூலம் வேறுபாட்டைக் கொண்டுள்ளார்கள். இலங்கைவாசிகள் தங்கள் மொழிவழக்கில் 'மிகவும் தூய்மையாகக் கதைப்பதாக' அதாவது 'ஆங்கிலேய ஆட்சியால் பிரதியீடு செய்யப்பட்ட வாக்கிய வடிவங்களை பாண்டிச்சேரியை விடவும் தாம் நன்றாகக் கதைப்பதாக'க் கூறுகின்றனர். இப்படியாக மார்தட்டும் இவர்கள் நேர்மாறாக 'சென்னையிலிருந்து வெளிவரும் சினிமா, பாடல்கள் என்பவையே பாக்குநீரணைக்கு அப்பாலும் இப்பாலும் தரமான தமிழ்' எனவும் சொல்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- "நாங்கள் நிச்சயமாக பிரஞ்சுக் கலாச்சாரமும் இல்லாமல், தமிழ்க்கலாச்சாரமும் இல்லாமல் தத்தளிக்கின்றோம்". - ஒரு பாண்டிச்சேரித்தமிழர்.
- ஒரு பாசுமதி அரிசிச்சாக்கை நிமிர்த்தித் திறந்தால் நாளாந்த பாவனைக்கான உணவாகக்கரையும். ஒரு கூடை காய்கறியும், கறிவேப்பிலை, சமையல் வாசனைத்திரவியங்கள் என்பவற்றால் சமையல் அறை நிரம்பியிருக்கும்.
- புதியதலைமுறையினர் தமிழ்படிக்க நாட்டம் கொண்டுள்ளார்கள். 1992 ம் ஆண்டு உயர்கல்விப் பரீட்சையில் 52 பேர் தமிழ் மொழி வாய்மொழிப் பாடமாகத் தோற்றியுள்ளார்கள்.
- பாண்டிச்சேரி, இலங்கை, மொறீசியஸ் போன்ற இடங்களிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் தொடர்ச்சியாக இசைகேட்பதிலும், ஒரேமாதிரியான படங்களைப் பார்ப்பதிலும் பொழுதைக் கழிக்கின்றார்கள்.
- சில இலங்கைத் தமிழர்கள், தங்கள் மொழிவழக்கில் மிகவும் சுத்தம் காணப்படுவதாகவும் - அதாவது ஆங்கிலேய ஆட்சியில் பிரதியிடு செய்யப்பட்ட வாக்கிய வடிவங்களை பாண்டிச்சேரிக் காரரைவிட நன்றாகக் கதைப்பதாக மார்தட்டுகின்றார்கள். இது பற்றி மேலும் கூறுகையில் சென்னையில் இருந்து வெளிவரும் சினிமா மற்றும் பாடல்கள் என்பவையே பாக்குநீரணைக்கு அப்பாலும் இப்பாலும் 'தரமான தமிழ்' என எதிர்மாறாகவும் சுட்டுகின்றார்கள்.

பாண்டிச்சேரிவாசிகள், இந்தியாவிலிருந்து முதலில் வரும்போது அங்கேயே தாய்மொழியை நிராகரித்து பிரஞ்சுமொழியூடாக வாழ்ந்தவர்களாக இருந்தவர்கள். இவர்கள் நிர்வாக, மற்றும் அதிகார வேலைகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் வரவழைக்கப்பட்டவர்கள். ஆனால் இவர்கள் மீளவும் இந்தியா திரும்ப நாட்டம் காட்டவில்லை. இப்போது இவர்கள் கடந்தகாலத்தை மறுதலித்து எதிர்காலத்திற்காக வினாவி நிற்கிறார்கள்.

ஒருவர் சொல்கிறார்: " நாங்கள் நிச்சயமாக பிரஞ்சுக்க லாச்சாரமும் இல்லாமல் தமிழ்க்கலாச்சாரமும் இல்லா மல் தத்தளிக்கிறோம்." இந்தச் செயல்பாடுகள் கணவன், மனைவியரிடையே விரிசலைத் தோற்றுவிக்கின்றது. குடும்பத்தில் ஆணாகப்பட்டவர் புதிய உலக சஞ்சாரி யாகவும்; பெண்ணாகப்பட்டவர் மிகவும் பழமையான கட்டுப்பட்டித் தனத்துள் மூடிய நினைவுகளுடன் இருக் கவும் வாழ்க்கை அமைகின்றது.

முழுமையான பிரஞ்சுவாழ்வுக்கு மாறிய ஒருவர் அலுவ லகம் செல்ல, அவரது வீட்டு நடவடிக்கைகள் 'தமிழ் வட்டமாக' மூடிவிடுகிறது. வீட்டு நிர்வாகியான பெண் சாதிய மனோபாவங்களைக் கடைப்பிடித்துக்கொண்டு திருமணவிஷயங்களில் முடிவு செய்கிறாள். இது மூடநம் பிக்கைகளும், நவீனத்துவமும் ஒருங்கே கொண்ட வாழ் வின் நீச்சல் போலானது. குடும்பத்தலைவி வேறு சமூகத் தவருடன் தனது மகன் இணைவதற்குத் தடைக்கல்லாக இருப்பதுடன், பூர்வீக பாரம்பரியத்துடனான பெண் தேடி இந்தியாவுடன் தொடர்பு கொள்கிறாள். தன் வாழ்வின் அனுபவங்களை வைத்து மகனின் வாழ்வை வழிகாட்டுவதாக நிர்ப்பந்திக்கிறார்.

புத்திசாலிகள், அதிக சுயாதீன நாட்டம் கொண்டோர் மேற்படியான அமுக்கச் சூழலில் அகப்படாமல் தமது திருமண வாழ்வைத் தீர்மானிக்கிறார்கள். சிலர் ஒருவிதத் தந்திரத்தன்மையுடன் முழுமையான சுதந்திரத்தன்மை யைக் காட்டாமல் சாதீயத்தைக் கடைப்பிடித்துக் கொண்டு காதலிக்கிறார்கள்- குடும்பத்தொடர்புகளை யும் பாரம்பரியங்களையும் விட்டொழிக்காதவாறு மிகவும் உயர் தந்திரத்துடன் செயல்படும் இவர்கள் 'ஈனவும் முடியாமல் நக்கவும் முடியாமல்' தவிக்கிறார்கள். "அடுப் படி அருகில் செல்லும் வேளைகளில் சகலதையும் மறந்து விடுகின்றோம்" என்கிறார் ஒருவர்.

ஒரு குசினியில், பாசுமதி அரிசிச்சாக்கை நிமிர்த்தித் திறந்தால் நாளாந்தப்பாவனைக்கான உணவாகக் கரை யும். ஒரு கூடை காய்கறி, கறிவேப்பிலை, சமையல் திரவியங்களென (சரக்குச்சாமான்கள்) குசினி நிரம்பி இருக்கும்.

### -தட்டிக்கொடுப்பு-

'பத்திரோன்ட'* மனுசிக்கு என்னோடு
சரியான விருப்பம்.
வேலை செய்யும் போதெல்லாம்
முதுகுல அடிக்கடி
வந்து தட்டுவாள்.

நண்பனுக்கு புரியவில்லை.

எங்கள் கிராமத்தில் உழவு வேலை
செய்யும் போது
மாடுகளின் முதுகுகளில் நாங்களும்
இப்படி
அடிக்கடி தட்டுவது உண்டு.

*- துடைப்பான் -*

---

* முதலாளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வகையான பொருட்களை விற்கும் FAUBOURG SAINT- DENIS வீதியிலுள்ள கடைகளை நோக்கி ஸார்செல் (SARCELLES), வில்யர்-லு-பெல் (VILLIERS-LE-BEL), காஜ்-லெ- ஷோகோணேஸ் (GARGES-LES-GONESSE) ஆகிய பகுதிகளில் அதிகளவில் வாழும் பாண்டிச்சேரிவாசிகள் மையப்படுகின்றார்கள். இவ்வகையில் இது 'குட்டி இந்தியா'வாகின்றது. இவ்விடம் வெறுமனே ஒரு சந்தையாக இல்லாமல், இவர்களின் சந்திப்புக்கும், மறந்துபோகும் தமிழர் நினைவுகளை மீட்டெடுக்கும் மையமாகித் திகழ்கிறது.

இலங்கைவாசிகள் தங்களைவிடவும் துணிச்சலானவர்களாக இருக்கிறார்கள்- என்கிறார் ஒரு பாண்டிச்சேரித் தமிழர்-'இவர்களில் சிலர் வருமானமற்றவர்களாக இருந்தால் அவர்களது மனைவியர் வேலைக்குப் போவார்கள்' என்கிறார் இலங்கைத்தமிழர் பற்றிய தனது பார்வையாக வேறொருவர். ஆங்கிலேயக்காலனியில் இருந்துவந்த இலங்கைத்தமிழர், பிரஞ்சுக்காலனியிலிருந்து வந்த எங்களுடன் விரைந்து உறவைப்பலப்படுத்தினார்கள். அவர்கள் மூடப்பட்ட சேரிவாழ்வுக்குள் (GHETTO) முடக்கப்படாமல் இருக்க நாம் வழிகாட்டினோம்-

பாண்டிச்சேரிவாசிகளை நோக்கி ஆழமான தமிழ்க்கலாச்சார ஈடுபாடு கொண்டோர்; இலங்கைத்தமிழர்; இந்துமத ஈடுபாடு கொண்டோர் கவரப்படுகிறார்கள். ஆனால் பாண்டிச்சேரிக்காரரோ 'கடைசிபஸ்சை தவற விட்டவர் கதிபோல்' (கலாச்சார தொடர் வண்டியின் கடைசிப்பெட்டியையும் தவறவிட்டது போல்) பரிதவிக்கிறார்கள்.

மதஈடுபாடு தமிழுணர்வை மீட்படைய வைக்கிறது. இந்துக்களின் இசையின் கடைசியில் தூண்டப்படும் பரவச உருக்கத்தை FAUBOURG SAINT-DENIS இல் அமைந்த விற்பனை மையங்களில் காட்சியிலுள்ள விஷ்ணுவின் கசெற்றுக்கள் காட்டுகின்றன. இந்த சிதறுண்ட சமூகத்தை மீளவும் கட்டியெழுப்ப கலையின் பாகங்கள் உதவுகின்றன.

குட்டி இந்தியாவில் தமிழர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களுடன் ஆயிரக்கணக்கில் அடுக்கி வைக்கப்பட்ட கசெற்றுக்களும் காட்சி அலுமாரிகளில் வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கசெற்றுக்களில் அடங்கும் கதை, பாடல், நடனம் இவற்றை பிரமாண்டமாக உற்பத்திசெய்து விநியோகிக்கும் மையமாக சென்னை இருக்கிறது. பாண்டிச்சேரி, இலங்கை, மொரீசியஸ் தமிழர்கள் தொடர்ச்சியாக இசை கேட்பதிலும், தொடர்ந்து ஒரே மாதிரியான வீடியோ படங்களைப் பார்ப்பதிலும் பொழுதைக் கழிக்கிறார்கள். இவர்கள் தத்தமது விருப்ப கதாநாயக, நாயகிக்கான அணிகளில் (உ+ம்- குஷ்பு ரசிகர்கள்) ஒன்று சேர்கிறார்கள்!

மதரீதியாக புனிதமாகக் கருதப்படும் 'பரதநாட்டியம்' இப்போது சமூக விருப்பத்திற்கேற்ப பலராலும் கற்றுக்கொள்ளப்படுகின்றது. பரதநாட்டியத்தில் நன்கு பயிற்சி பெற்ற பாண்டிச்சேரித் தமிழர்களிடம் றியூனியன், இலங்கையைச் சேர்ந்த சிறுவர், சிறுமியர் பரதநாட்டியம் பயில வருகிறார்கள்.

இச்சந்தர்ப்பங்கள் சிறுவர்களுக்கு தாய்மொழி அறிவை மீளவும் பெற வாய்ப்பாக அமைகிறது. ஆனாலும் சிலர் தவறிவிடுவதுண்டு. இந்த வருடம் (1992) 52 மாணவர்கள் உயர்கல்விப் பரீட்சையில் தமிழை வாய்மொழிப் பாடமாக எடுத்துள்ளார்கள். இந்தப் புதிய- எழுத்து மீதான- ஈடுபாடு முன்னர் அமைதியாக இருந்த இவர்களிடம் தமது பாரம்பரியத்தையும், மூன்றாம் தலைமுறையினரின் வாழ்வையும் நினைவூட்டி ஈர்ப்புறச் செய்துள்ளது.

( 'LE MONDE' இதழில் JEAN-LOUIS PERRIER எழுதிய கட்டுரை தமிழில் சுருக்கமாத் தொகுக்கப்பட்டது.)

தொகுப்பு: பாலன் & அநாமிகன்

## ஈழத்து மலையக இலக்கியம்

*மலையகத்தமிழர்கள் ஈழத்தமிழர்களோடு ஒப்பிடுகையில் புவியியல், வரலாற்று எல்லைகளில் முழுதும் மாறுபட்டவர்கள் என்பதோடு, அரசியற் பொருளாதார தனித்துவங்களையும் கொண்டவர்கள்; பண்பாடு விழுமியங்களிலும் தனித்தன்மை பேணுபவர்கள்; சமூகக் கட்டமைப்பிலும் அதன் வர்க்க அமைவாக்கத்திலும் வர்க்கப் பருமையிலும் ஈழத்தமிழ் சமுதாயமும், மலையகத் தமிழ்ச் சமுதாயமும் அடிப்படையிலேயே வேறுபாடு கொண்டவை; மலையகத்தமிழர்களும் தமிழே தாய்மொழியாகக் கொண்டவர்களாயினும் தம்மை இலங்கையின் தனித் தேசிய இனங்களில் ஒன்றாக அடையாளம் காட்டிக்கொள்ளும் சமூக உளவியலையும் உடையவர்கள். இச்சமூக உருவாக்கத்தின் இந்த மெய் நிலமைகளைக் கருத்தில் கொள்ளாமலும் புரிந்து கொள்ளாமலும் வெறும் 'தனிப்பெருந்'தமிழ் தேசிய இனவுணர்வோடு மட்டுமே இலங்கையின் இனப்பிரச்சனையைப் பார்த்ததன் **விளைவாக** தமிழக அரசியலாளர்கள், ஆய்வாளர்கள், பத்திரிகையாளர்கள் மத்தியில் தவறான நிலைப்பாடுகளும், வெளிப்பாடுகளும், பிரச்சாரங்களும், தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன. இதன்விளைவு மலையகத்தமிழர்களுக்கும், அம்மலையகத்தமிழர்களிலேயே இந்தியப் பிரஜாவுரிமை பெற்று (1964 இந்திய-இலங்கை உடன்படிக்கையின்படி) இந்தியா திரும்பியுள்ள சுமார் ஆறுலட்சம் தாயகம் திரும்பியோருக்கும் (REPARTRIATES) சொல்லொணா பெருந்துன்பம் ஏற்பட்டது. இன்னும் அந்நிலை தொடர்கிறது.*

***இந்நிலையில்,***

*மலையகத் தமிழ் இலக்கியத்தின் தனித்தன்மையை பெ.சு.மணி கோடிட்டு காட்டியிருப்பதும், 'மலையக இலக்கியம் என்னும் மலையக தேசிய இனச் சார்பு இலக்கியப்போக்கு' என்று அவர் குறிப்பிடுவதும் ஆகக் குறைந்தது தமிழக இலக்கிய ஆர்வலர்கள் மத்தியிலாவது இந்த சமூக அறிவியல் உண்மையை தெளிவுறுத்தும் என்று நம்புகின்றேன்.*

**- வீராபாலச்சந்திரன், உதகை-நீலகிரி -**
**நன்றி:- சுபமங்களா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓர் இலக்கியப்பார்வை

பெ.சு.மணி

** மேல் நாடுகளில் புகலிடம் தேடிச்சென்ற இலங்கைத் தமிழர்கள் படைத்து வருவது "புகலிட இலக்கியம்".*

** மலையக இதழ்களும், மலைநாட்டு எழுத்தாளர் மன்றங்களும், புதிய தனித் தன்மை வாய்ந்த மலையக தேசிய இலக்கியத்தை வெளிப் படுத்துகின்றன.*

ஈழத்தின் நவீன தமிழ் இலக்கியப் போக்குகள் தமிழக நவீன இலக்கியப் போக்குகளில் இருந்து சற்று மாறுபட்டவை. ஈழத்து மொழிவழக்கு சமூக பொருளாதார நிலைப்பாடுகள், பண்பாட்டுக் கூறுகள் ஆகியன மாறுபட்ட தளங்களைக் கொண்டுள்ளன.

ஈழத்து நவீன தமிழ்இலக்கியத்திற்கு அங்கீகாரம் அளிப்பதில் தமிழக இலக்கியகர்த்தாக்கள் தயக்கம் காட்டியதும் உண்டு. 1984இல் கூட வண்ணநிலவன், ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் அரசியல் சார்பைக் கண்டித்து, "ஈழம் இந்த வியாதிக்கு உடனடியாக நல்ல கஷாயம் சாப்பிட வேண்டும்" என்றும் கூறியுள்ளார்.

தற்காலத்தில் இலங்கையின் நவீன தமிழ் இலக்கியம், வட இலங்கை, கிழக்கு இலங்கை, மலையகம் என்னும் மூன்று பிரதேசதளங்களைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி தமிழ் தேசிய உணர்வுடன் படைக்கப்பட்டு வரும் ஓர் இலக்கியப்போக்கு, தெற்கே அதை பகிரங்கப்படுத்த முடியாத நிலையில் புலம் பெயர்ந்த தமிழர் பிரச்சனைகள் பற்றிய இலக்கியப்போக்கு, அண்மைக்காலமாக மலையக இலக்கியம் என்னும் மலையக தேசிய இனச்சார்பு இலக்கியப்போக்கு என மூவகைப் போக்குகள் இன்றைய இலங்கை நவீன தமிழ் இலக்கியத்தின் முப்பெரும் பிரிவுகளாக வளர்ந்து வருகின்றன. இத்துடன் மேலே நாடுகளில் புகலிடம் தேடிச்சென்ற இலங்கைத் தமிழர்கள் படைத்துவருவது "புகலிட இலக்கியம்" என்று புதிதாக கிளைத்துள்ளது. இஸ்லாமியத் தமிழ் எழுத்தாளர்களிடையே ஓர் இலக்கிய உத்வேகம் பரவிவருவதை "தினகரன் வாரமஞ்சரி"யில் அறிய முடிகின்றது.

நான் பெற்ற புதிய இலக்கிய அனுபவம் மலையக இலக்கிய வளர்ச்சியைப் பற்றியதாகும். மலையக இலக்கியம் என்று குறிப்பிடும் பொழுது, அது வெறும் பூகோள அடிப்படையாகக் கொண்டதன்று. தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள், மற்றும் அங்கு குடியேறிய இந்திய வம்சாவழியினர் ஆகியோர் உற்பத்தி உறவுகளை அடிப்படையாகக் கொண்ட இலக்கியப் போக்குகளைக் குறிப்பதே மலையக இலக்கியமாகும். இந்த இலக்கியத்தின் வயது எழுபது ஆண்டுகளாகும். மலையக இலக்கியத்தின் தீவிரப் பாய்ச்சல் 1960 களில் தொடங்கிவிட்டது. கோ.நடேசய்யர், சி.வி.வேலுப்பிள்ளை, கே.கணேஷ், மாத்தளை அருணேகர் ஆகியோர் மலையக இலக்கிய முன்னோடிகளாவர். சாரல் நாடனின் "தேசபக்தன் கோ.நடேசய்யர்", அந்தனிஜீவாவின் "குன்றின் குரல்" மற்றும் மலையக இதழ் மூலமும், மலையக இலக்கிய வளர்ச்சியைப் பற்றிப் புரிந்துகொண்டேன். மலையக இதழ்களும், மலைநாட்டுஎழுத்தாளர் மன்றங்களும் புதிய தனித்தன்மை வாய்ந்த மலையக தேசியஉணர்வை மையப்படுத்தி மலையக தேசிய இலக்கியத்தை உருவாக்கி வருகின்றன.

நான் சந்தித்த இலங்கை தமிழ் எழுத்தாளர்கள், தமிழ்நாட்டின் கலை-இலக்கிய சிறு பத்திரிகைகளை மிகவும் நேசிப்பவர்கள். "சுபமங்களா", "கணையாழி" முதலான இதழ்களைப் படிப்பதில் பேரார்வம் காட்டுகின்றனர். சிறுபத்திரிகைத்துறை வளர்ச்சியில் ஐரோப்பா, அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா முதலான இடங்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுடைய பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. இலங்கையின் போராட்டச் சூழல் காரணமாக, உலகமெங்கும் இலங்கைத் தமிழர்கள் பரவி தமிழ் முழக்கம் செய்துவருவதும், புதிய வளர்ச்சியாகும். இந்தத் தமிழ் முழக்கம், இங்கு தமிழ்நாட்டின் வெறும் ஆரவார முழக்கமாக இல்லாமல், ஆக்கபூர்வமான நவீனத்துவத்தைப்பேணும் உலக இலக்கிய உணர்வுகளை உள்வாங்கிக் கொள்ளும் முழக்கமாகும்.

நன்றி = சுபமங்களா (மார்கழி-1992)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொறுப்பாளன் முகத்தில் 'கொலைக்கு - கொலை', 'அடிக்கு - அடி' என்பதை நிறைவேற்றிய இயல்பான உற்சாகம்.

பழி

சிறுகதை

# பழி

பழி

பழி

நாகதிலகன்
(சுவிஸ்)

" நம்மட துரையனை பொடியன்கள் பிடிச்சிற்றாங்களாம். அன்னிச்சையடிக்கு கொண்டு வந்திருக்காம்...." ஊர் முழுக்க துரையனின் கதை வேகமாக பரவியது.

துரையனின் தலைமயிர் குழம்பிக் கிடந்தது. முகத்தில் அடி விழுந்ததற்கான அதைப்பு- பார்க்க பரிதாபமாய்- கைகள் கட்டப்பட்டு இருந்தன.

அனல் பறக்கும் அந்தக் கோடையிலும் அன்னிச்சைமரம் இருண்ட பச்சையாய் அடர்ந்த இலைகளோடு நின்றது. அதன் பரந்த நிழல் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாகவும், கூப்பன் கடைக்கு அருகோடும் அமைந்துவிட்டதால் அன்னிச்சையடி கட்டைப்பறிச்சானில் முக்கிய பொது இடமாகி விட்டிருந்தது. துரையனை சைக்கிளில் அழைத்து வந்த இயக்கப் பொடியன்களின் தோளில் AK- 47 தொங்கி கிடந்தது. "டே அதில போய் இருடா" மீசை அரும்பாத இயக்க பொடியன் ஒருவன் சொல்கின்றான். அன்னிச்சையடியில் கட்டைகளால் செய்யப்பட்ட வாங்கு வெறிச்சென்றிருந்தது. வாங்கடியை நோக்கிச் சென்ற துரையனக்கு "டே வாங்கில இருக்காத நிலத்தில இரு" உறுத்தலாய் உத்தரவு இடப்பட்டது.

நேரம் நாலுமணியை கடந்து விட்டது. இருளுக்கு இடம் கொடுத்து சூரியன் சரிந்து கொண்டு இருந்தான். இன்னும் பொறுப்பாளன் வராததால் இயக்கப்பொடியன்கள் இருவரும் தெருமுனையை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தனர்! அன்னிச்சையடியில் சனம் கூடிவிட்டது. சற்று எட்டமாகவே நின்று கொண்ட சனங்களில் எவரும் எதையும் வெளிப்படையாக பேசவில்லை. மனதுப் பொருமலை அச்சம் உறையிட்டிருந்தது. துரையன் நிலத்தில் அமர்ந்து கட்டப்பட்ட கைகளை மடிக்குள் வைத்து மடித்த முழங்கால் மேல் முகத்தை கவிழ்த்து இருந்தான்.

நிலம் ஈரலித்திருந்தது. குண்டியாலும், பாதத்தாலும் ஈரம் ஏறியது. 'நாசமாய்ப் போன இந்த மழை நேற்றா பெய்ய வேண்டும்! இருபது நாள் முந்திப்பெய்திருக்க கூடாதா? காயும் கதிருமாய் வயல் தண்ணீருக்காய்த் தவிர்த்துக் கொண்டிருந்ததே' துரையனின் மனதில் எண்ணங்கள் ஓடின.

000 000 000 000

'வயல் விதைத்த கடனையும் கொடுத்து அடுத்தவேளாண்மைவரையிலான சாப்பாட்டு நெல்லுக்கும் சமாளிச்சிரலாம்' என்ற நினைவோடு இந்த மழையை நம்பித்தான் இரண்டு ஏக்கர்வயலையும் விதைத்தவன் துரை.

வானத்தில் கருமேகங்கள் சூழத் தொடங்கியிருந்தன. காற்றுக்கூட மழைத்திசையிலிருந்து வந்து கொண்டிருந்தது. தண்ணீர்ப் பிரச்சனை தீரப் போகுது என்ற அளவில்லா மகிழ்ச்சி துரையனைத் துள்ளச்செய்தது.

வயலுக்கு நேரத்தோடு போக நினைத்தான். வரம்புகளைச் சரிபார்க்க வேண்டுமென அவசரம் தட்டிவிட்டுக்கொண்டிருக்க சைக்கிளை வேகமாக மிதித்தான். வயல் செல்லுமுன் அம்மானைத் தரிசித்து செல்வது அவனது வழக்கம். வயல் விளைய மழையையும் அம்மனையுமே நம்பியிருந்தான்.

ஊரின் ஒதுக்குப்புறத்தில் அமைந்திருந்த கோவிலைச்சுற்றி பற்றையும் மரங்களும் வளர்ந்திருந்தன. அது அந்த அம்மன் கோவிலுக்கு அலாதியான அழகு! அம்மன் கோவிலின் அருகே சைக்கிளை உருட்டிச்சென்று ஓரமாய்ச்சாத்தி வைத்துவிட்டு, கற்பூரம் கொழுத்தினான். அந்தச்சிறு கல்லில் தேங்காயை உடைத்து அம்மனைக் குளிர்மைப்படுத்தினான். 'வரும்மழையை நல்லதொரு மழையாய் பெய்ய வை என்ர அம்மாளே!' என மன்றாடி வேண்டிக்கொண்டான்.

அம்மன் சிலையின் குங்குமச் சிவப்பும், நெற்றியில் சந்தனமஞ்சளும் இடையில் சிவந்த பட்டும் கையில் சூலாயுதமும் சேர்ந்து கறுத்த அம்மனுக்கு அச்சமுறும் தோற்றத்தை கொடுத்து கொண்டிருந்தது. வயலை சென்றடைய பின்னேரமாகி விட்டது. காயும் கதிருமாய் வதங்கிக் கிடந்த வேளாண்மைத் தாள்கள் கூட மழை மேகத்திரட்சியின் இருட்டின் குளிர்ச்சியால் செழிப்பாய் தெரிந்தது. "இண்டைக்கு மழை தட்டிவிட்டா போதும் வயல் விளைஞ்சிடும்" வானை அண்ணாந்து பார்த்துக் கொண்டே சொன்னான், அம்மனின் மன்றாட்டத்தில் தப்பே வராதென நம்பினான்.

முழுமையாக இருண்டு விட்டது. மழை இன்னும் இறங்கவில்லை. ஆனால் அங்கு வீசிய குளிர்காற்றும் இடையிடையே படபடத்துச் செல்லும் மழைதுளிகளும் துரையனின் நம்பிக்கையை வளர்த்தெடுத்தன. வயலின் பொது வரம்பால் வந்த அடுத்த வயல்காரர் சுந்தரத்தாரும் " இண்டைக்கு மழை இருக்குப் போல..." என்றது துரையனின் நம்பிக்கையை மேலாக்கியது.

சற்று மகிழ்ச்சியான மனதுடன் மாலுக்குள் சென்று இரவுக்கான சோற்று முடிச்சை அவிழ்த்து விழுங்கிவிட்டு வெளியேவரும்போதுதான் துரையனின் மனதில் சோகம் படர்ந்தது. வானத்தின் மேற்குப்பகுதியில் சில நட்சத்திரங்கள் புகார்களின் ஊடாக மின்னின. புகார்கள் அள்ளுண்டன. மழை கலைந்து விட்டது. காற்றுப்பலமாக அடித்தது.

வானம் வெளிறிக்கிடந்தது. துரையனின் துயரமான மனசு 'நாளை இல்லாட்டி இரண்டொரு நாளில் மழை பெய்யாமலா விடப்போகின்றது.....' பெருமூச்சுடன் பொருமியது.

இராக்காவலைத் தொடர்ந்தான். காலையில், வழமைபோல் குருவிகளின் அட்டகாசம். துரையன் அலட்சியத்துடன் கத்தி துரத்திவிட்டு, வீடு நோக்கி சைக்கிளை மிதித்தான். அம்மன் கோவிலடியை கடக்கும்போது நெஞ்சைக்கையால் தொட்டு 'இன்றாவது மழைபெய்யட்டும் அம்மனே!.... ' என மன்றாட்டம் செய்தான்.

மழை பெய்யாமல் வேளாண்மை வெட்டியாகிவிட்டது. இரண்டு ஏக்கரும் இரண்டு கும்பங்கள் வைத்தன. சூடுஅடித்து பொலிதூற்றும் போது துரையனின் முகம் வெளியாமல் இருந்தது. சிறிய பொலிக்கும்பம் குவிக்கப் பட்டது. வெட்டுக்கூலி, கட்டுக்கூலி, காணிஆயம் என்று அளக்கப்பட்டது. மிச்சப்பொலிகளெல்லாம் கூட்டிச் சேர்க்கப்பட்டு சாக்குகளில் கட்டப் பட்டது.

களத்தில் கிடந்த வண்டியை தள்ளி வந்து ரூட்கம்பில் நிறுத்தினான். நாலைந்து பதக்கடைச்சாக்கும் இரண்டு நல்ல நெற்சாக்குமே மிச்சமாக ஏற்றப்பட்டன. களத்தில் தீர்க்கப்படாத கடன்களுக்கு வழியில்லை. துரையனின் மனதில் கவலையும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிச்சலும் நிறைந்தது. வண்டிலை வளவின் கடப்பைப் பிரித்து முற்றம் வரை கொண்டு சென்றான். துரையனின் வண்டில் சத்தம் கேட்டு மனைவியும், பிள்ளைகள் இரண்டும் வண்டிலடிக்கு ஓடிவந்தனர். மாடுகளை அவிழ்த்துக் கட்டினான் துரையன். " இவ்வளவு தானா மிச்சம்? ....." அவள் கேட்டாள். அவன் எதுவும் பேசவில்லை. அவள் மீண்டும் "இவ்வளவுதானா.... சொல்லுங்க". துரையனுக்கு ஏனோ சினம் வந்தது. வண்டிலில் ஏறிக்குதித்து சத்தமிடும் பிள்ளைகளைச் சினந்தான். நெல்சாக்குகளை பறித்து வீட்டு விறாந்தைகளில் போட்டான்.

அன்றிரவு நித்திரை கூட சரியாக இல்லை. 'அம்மனுக்கு பாடம் படிப்பிக்க வேண்டும் அதை நாளைக்கே முடிக்க வேண்டும்', என்ற எண்ணம் பலமாக மனதில் எழுந்தது. அடுத்த நாள் காலை, சுத்தியல் ஒன்றை பையில்போட்டு கையில் எடுத்துக் கொள்ளுகின்றான். வழமையாக அம்மன் கோவிலுக்கு எப்போதாவது தான் ஒருசிலர் வந்துவிட்டுப்போவார்கள். ஆனால் முக்கியமாக வெள்ளிக்கிழமையில் தான் அதிகம் பேர் வருவார்கள். அன்று சனிக்கிழமை ஆதலால் பகலில் கூட்டம் இல்லை. பூட்டை உடைத்துவிட்டு வருவதற்கு துரையனுக்கு ஒரு பிரச்சனையும் இருக்கவில்லை.

கோவிலின் பின்புறத்தால் அம்மன் கோவில் வளவுக்குள் நுழைகின்றான். தெருவால் யார்போனாலும் அம்மன்கோவில் வளவை சட்டெனப்பார்க்க முடியாமல் ஓரங்களில் முச்செடிகள் வளர்ந்து கிடந்தது வசதியாக இருந்தது. கட்டிடத்தை நெருங்கும்போது திறந்து கிடந்த வழியால் அம்மனின் முகம் பளிச்சிட்டது. ஒரு கணம் கால்கள் தடுமாறின. அந்தக்கறுத்த அம்மன்சிலையின் கண்களின் குங்குமச்சிவப்பும், சிவந்த பட்டும், நெற்றியில் சந்தன மஞ்சளும், கையில் சூலாயுதமும் கொண்ட அச்சமூட்டும் அந்தத் தோற்றம் துரையனின் துணிச்சலின் முன்னால் வழமையான பக்தியை ஊட்டவில்லை.

துரையன் இறுகிய மனத்துடன் அச்சிலையை நெருங்குவதற்காக படியில் காலை வைக்கிறான். நெருங்கிவிட்ட அவன் யோசிக்கவேயில்லை. அவன் சுத்தியலை இரண்டு கையாலும் ஓங்குகின்றான். மீண்டும் ஒருகணம் மனதில் சற்றுதடுமாற்றம் பயவுணர்வு. 'இந்த அம்மன் பழிவேண்டும்! பொல்லாதது....' எண்ணங்கள் ஓடின. 'பொய்த்த மழை- காய்ந்த நெல்வயல்- விளைச்சல் தனது வேண்டுதலை புறக்கணித்த சாமியை அழித்துவிட வேண்டும்'.

சுத்தியல் தடாரென கீழ் இறங்கியது முதல்தரம்.... அம்மனின் கை உடைந்து தெறித்துவிழுந்தது. அடுத்து, கால்பாகங்கள் துண்டாகி விழுந்தன. மீண்டும் மீண்டும் தாறுமாறாக நாலைந்து பலம்கொண்ட அடிகள்.... அம்மன் சிலை நொறுங்கிவிட்டது. ஏனோ வியர்த்துக்கொட்ட துரையன் வெளியே வருகின்றான். எதையும் பார்க்கும் யோசிக்கும் மனநிலை இல்லை. முடுக்கிய பொம்மைபோல் கோவிலின் பின்புறத்தால் வீடுவந்து சேர்ந்தான்.

அடுத்த நாள் அம்மன் உடைந்த கதை அடிபட்டது. எங்கும் பரபரப்பு. யார் செய்தது? சனங்களுக்கு ஒன்றுமே பிடிபடவில்லை. "இம்முறை சரியாக மழைபெய்யாட்டிக்கு.... அம்மன் உடைபடுவாள்...." துரையன் என்றோ ஒருநாள் யாரிடமோ சென்னது அவர்களின் நினைவை எட்டியது.

ooo ooo ooo ooo

கூடிவிட்ட சனங்களில் எவரும் எதையும் வெளிப்படையாகப் பேசவில்லை. ஆனாலும் சனங்கள் மத்தியில் அச்சத்தினூடே சில குசுகுசுப்புக்கள்..... 'உண்மையான அம்மன் என்றால் அதிலேயே பழிவாங்கியிருக்க வேண்டுமெல்லவா?'

தாபால் கந்தோரடியில் நாலைந்து சைக்கிள்கள் வந்துகொண்டிருந்தன. திடீரென அமைதி. கூடிநின்றவர்கள் தெருவைப்பார்த்து ஒதுங்கினர். இது பொறுப்பாளர் வருவதன் அடையாளம். சைக்கிள்கள் வந்து நின்றன. ஆறெழு இயக்கப்பொடியள், ஒருவனது இடுப்பில் கைத்துப்பாக்கி, கைக்குண்டு தொங்கிக் கிடந்தன. அவன்தான் பொறுப்பாளன் போலும்! ஏனையவர்களின் கையில் AK- 47.

"டே துர இஞ்ச வா... " பொறுப்பாளனின் மிடுக்கு வார்த்தைகளின் தொனிப்பில் இருந்தது. கைகள் கட்டப்பட்ட நிலையில் என்னநடக்கப் போவதென்பதை அறியாதவனாய் பயந்து கூனிக்குறுகி அவர்கள் அருகில் சென்றான் துரை.

" இவன் என்ன செய்திருக்கிறான் தெரியுமா? " கூட்டத்தைப்பார்த்து வார்த்தைகளை நிதானித்து சொல்லுகின்றான். "அம்மனைச்சுத்தியலால் அடித்து உடைத்திருக்கின்றான் அதற்கான தண்டனையை நாங்கள் இவனுக்கு கொடுக்கப்போகின்றோம்." கூட்டத்தினரிடம் எந்தச் சலசலப்பும் இல்லை. என்ன நடக்கப் போகிறதோ! எதிர்பார்ப்பு முகங்களில் கோடிட்டிருந்தன-

துரையின் கட்டுகள் அவிழ்க்கப்பட்டது அருகிலிருந்த பாறாங்கல்லுக்கு இழுத்துச்சென்றார்கள் பொடியன்கள்.

அவனது கை பாறாங்கல்லோடு சேர்த்துக் கட்டப்பட்டது. தன்னை அடித்துக் கொன்றுவிடுவார்களோ என்ற பீதியில் துரை கெஞ்சுகிறான். பொறுப்பாளன் சுத்தியலை எடுத்து ஓங்குகின்றான். "என்னை அடிக்காதங்க. விட்டிருங்க ஐயா...." கெஞ்சல் ஓலமாய் பரிதாபமாக இருந்தது.

அடிமேல் அடி விழுந்தது.. துரையிடமிருந்து மரண அலறல்.... உடல் நடுங்கியது. கண்களில் இருந்து கண்ணீர்... முழங்கைக்கு கீழ் உடைக்கப்பட்டுவிட்டது. மறுகைக்கும் இதேநிலை தான். இருந்தும் கைகளோடு முடியவில்லை. கால்களும் காலின் பாதப் பகுதியும் கல்லோடு இழுத்து வைக்கப்படுகிறது.

"ஐயோ என்னை விட்டிருங்க அம்மாளே... " துரையின் வாயில் இருந்து வேதனையின் கெஞ்சல். ஆனால் அடி மேல்அடி விழுகின்றது. அடியின் கோரத்தில் கால் நசிந்து இரத்தம் கொப்பளிக்கின்றது. துரையின் அலறல்களும், முனகல்களும்.... அங்கு நின்றவர்கள் வாயடைத்து விறைத்துப்போயினர்.

பொறுப்பாளன் முகத்தில் 'கொலைக்கு - கொலை', 'அடிக்கு - அடி' என்பதை நிறைவேற்றிய இயல்பான உற்சாகம்.

'முன்னர், அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்ற கதை ஒன்று உண்டு. ஆனால் இன்றோ தெய்வங்கள் எங்களையல்லவா அரசர்களாக்கி விட்டிருக்கிறது!' என்று சொல்வதைப்போல பொடியன்களின் பார்வைகளும் நடத்தைகளும் புலப்படுத்தின.

சைக்கிள்கள் மறைகின்றன. இப்படியானதொரு தண்டனையை சற்றும் எதிர்பார்க்காத மக்கள் கூட்டம் என்ன செய்வதென்றறியாமல் திகைத்து நின்றது. துரையன் விழுந்து கிடந்தான். கையும் காலும் உடம்பில் இருப்பதன் உணர்வே அவனிடம் இல்லைபோலும். அவனால் எழுந்திருக்க முடியவில்லை. பல்லைக் கடித்துக்கொண்டு ஏதோ எத்தனிப்பதாய் - எழும்புவதற்கு முயற்சிப்பதாய் அவனது செய்கை பரிதாபகரமாக இருந்தது.

குனிந்த நிலையில் காலை ஊன்றி எழ அவன் கொண்ட முயற்சி பலிக்கவில்லை. 'ஓ......' அந்த அலறல் கூட்டத்தினரை கிலிபிடிக்கச் செய்தது. அவனால் முடியவில்லை. கண்கள் சொருக வாயில் வீணீர் வடிய.... சுருண்டு கிடக்கிறான் துரையன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிய வார்ப்பென அமெரிக்க சமூகம் வனையப்படுகின்றது– என்ற புனைந்துரை கடந்த ஆண்டு மே மாதத்தில் லொஸ்எஞ்சல் (LOS ANGELS) நகரம் எரியூட்டப்பட்ட போது பொய்த்துப் போனது.

## வெண்திரையில் ஒரு கறுவல்

### MALCOLM 'X'



இவ்வாழ்க்கை விவரணச் சித்திரத்தில் அமெரிக்க கறுப்பின மக்களின் போர்க்குணாம்சம் மிக்க தலைவனான MALCOLM X ஐ நமக்கு அறிமுகம் செய்து நேசிப்புறச் செய்கின்றார் இயக்குநர் ஸ்பைக்லீ (SPIKE LEE).

படம் தயாரிப்பு நிலையில் இருந்த 1992ம் ஆண்டு கோடைகாலத்தின் போதே பத்திரிகைகளின் சினிமாப் பக்கங்களை இளங்கறுவல் இயக்குநரான ஸ்பைக்லீ ஆக்கிரமித்துக் கொண்டார்.

கலப்புத்திருமணம் செய்து கொள்ளும் இளம்தம்பதியினரின் பிரச்சனையை ஆராயும் இவரது 'JUNGLE FEAVER' என்னும் திரைப்படம், 1991ம் ஆண்டு கான் (CANNE) திரைப்பட விழாவில் காட்டப்பெற்று பரிசினைப் பெறாத போதும் விமர்சகர்களின் பாராட்டைப்பெற்றதுடன் சினிமா ஆர்வலர்களின் கவனத்தையும் ஈர்த்தது.

தனது சிந்தனைப் போக்கையும் செயல்வழியின் திசையையும் மாற்றியமைத்தது MALCOLM X இன் வாழ்க்கை வரலாறு நூல் எனக்கூறும் இயக்குநர் ஸ்பைக்லீ; அவர் இலட்சிய நோக்குடன் இயக்கிய MALCOLM X திரைப்படத்தில், MALCOLM X இன் நண்பன் SHORTY யாக

புதிய வார்ப்பு இப்படி கீலம்கீலமாய் வெடித்திருப்பதைக் கண்டு அமெரிக்க கனவாளர்கள் வெட்கித்தான் போனார்கள். றொன்டிகிங் (RONDY KING) என்ற அமெரிக்க கறுப்பு மனிதன் பொலிஸ்கார வெள்ளையரால் நடுத்தெருவில் வைத்து தாக்கப்படுவதை தற்செயலாய்ப் படம் பிடித்த 80 செக்கன்ட் வீடியோப்படம் பெருமிதமிக்க அமெரிக்காவின் ஜனநாயக அழுகலை வெளிச்சமிட்டு காட்டியது.

தன்னைத் தாக்கிய பொலிசாருக்கு எதிராக வீடியோ பட சாட்சியத்துடன் றொண்டிக்கிங் தொடுத்த வழக்கில், பொலிசாருக்கு சார்பாக வெள்ளையரான நீதிபதிகள் அளித்த தீர்ப்பு, அமெரிக்க வெள்ளையரின் கரிய மனத்தை, நிறவெறியை தோலுரித்துக் காட்டியபோது லொஸ் எஞ்சல் நகரம் 80 மணிநேரம் எரிய வேண்டியதாயிற்று.

1992 நவம்பர் மாதத்தில் அமெரிக்காவில் திரையிடப்பட்டு கடந்த பெப்ரவரியில் பாரிசில் வெளியான 'MALCOLM X' என்ற திரைப்படமும் இவ் வீடியோக் காட்சியையே தன் முன்னுரையாக கொள்வதுடன், திரைமுழுவதையும் அடைத்திருக்கும் அமெரிக்க தேசியக்கொடியினை தீயின்நாவுகள் பொத்தலாக்கி பற்றிமூள்வதுடன் காட்சிகளை விரிக்கின்றது.

1940 ம் ஆண்டு பொஸ்ரன் (BOSTAN) நகரப் பின்னணியில் பத்தொன்பது வயதான MALCOLM X ம், அவனது நண்பன் SHORTYயும் அன்றைய அமெரிக்க கனவான்களின் ஆடை அலங்காரத்துடன் தெருவில் ஆடிநடந்துவரும் சிரிப்பு ஏற்படுத்தும் காட்சியுடன் அமெரிக்க கறுவல்களின் தரிசனம் தொடங்குகின்றது.

சுயாதீனப் பத்திரிகையாளரான அலெக்ஸ் ஹாலி(ALEX HALEY) க்கு MALCOLM X கூற எழுதப்பட்டதான 'தன்வரலாறு' (AUTOBIOGRAPHY) நூலினை அடிப்படையாகக் கொண்டு திரைக்கதையமைத்து தயாரிக்கப்பட்ட படம்தான் MALCOLM X .

■ ■ ■ ■ ■

முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மீரா நாயரின் 'மிசிசிப்பி மசாலாவில்' தரைவிரிப்புகள் சுத்தம் செய்யும் (CARPET CLEANER) கறுப்பின இளைஞனாக வந்து இந்தியப் பெண் மீனாவைக் காதலிக்கும் கதாநாயகனான டென்சில் வோசிங்டன் MALCOLM X இன் பாத்திரத்தை ஏற்றுநடித்துள்ளார்.

இவரது நடிப்புத்திறத்தால் MALCOLM X மீளவும் உயிர் பெற்றார்- என விமர்சகர்களால் பாராட்டப்பட்ட டென்சில் வோசிங்டன், ஆஸ்கார் விருதுக்கு சிபாரிசு செய்யப்பட்டு நடிப்புபோட்டிக்கான ஐவரில் ஒருவராய் தெரிவு பெற்றபோதும் விருது அவருக்குத்தவறிப்போனது.

40 வயதுவரை வாழ்ந்து அமெரிக்க கறுப்பர்களின் வரலாற்றின் சிறப்புமிக்க நாயகனாய் இடம்பெறும் MALCO–



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

LM X இன் எதிரும்புதிருமான வாழ்வனுபவங்களை கலைஞர்களான ஸ்பைக்லீயும், டென்சில் வோசிங்டனும் மீள்படைப்பாக்கம் செய்ததன் மூலம் 'கறுவல்களின் சினிமா இயக்கமொன்றை தொடக்கி வைத்துள்ளார்கள்' எனவும், 'சிறப்புமிகு கறுவல்களின் வாழ்க்கையையும், அவர்கள் காலப்பின்னணியையும் கறுப்பர்களின் கண்ணோட்டத்தில் மீளவும் சொல்வது அவசியம் - காலத்தின் தேவை' எனவும் DEWAYNE WILKHAM என்னும் 'U.S.A. TODAY'நாளிதளின் எழுத்தாளர் குறிப்பிடுகின்றார்.

1925 ம் ஆண்டில் பிறந்த MALCOLM X இன் வாழ்வுச் சூழலும், வளர்ந்த விதமும் நாம் கற்பனை பண்ணும் 'வானத்தில் இருந்து குதிக்கும் தலைவர்கள்' போல் அமைந்திருக்கவில்லை. கிறிஸ்தவமத போதகரான தந்தைக்கும், தந்தையை அறியாத கலப்பினத் தாய்க்கும் மூன்றாவது குழந்தையாகப்பிறந்த MALCOLM X தாயைப் போன்றே கறுப்பல்லாத நிறத்திலும், தந்தையைப் போன்ற உடலமைப்பிலும் இருந்தார்.

MALCOLM X இன் சிறுவயதில் அவரது தாய் "உனது நிறம் எனது தாயை வன்முறையால் கர்ப்பிணியாக்கிய வெள்ளைப்பேயைப்போல் இருக்கின்றது. இந்த நிறம் அடிமைச்சின்னம்" எனக்கூறி வெயிலில் நிற்க வைக்கின்றார் தோல் கறுக்க.

'ஆபிரிக்காவுக்கு திரும்புதல்' இயக்கத்தை நடத்திய மார்க்ஸ் கார்வேயின் (MARCUS CARVEY) சிந்தனையிலும், இயக்கத்திலும் ஈடுபாடு கொண்ட தந்தையார் 'KU.KLAX.KLAN' என்னும் வெள்ளையரின் இரகசிய அமைப்பினரால் தாக்கப்பட்டு இறந்து போனதை தற்கொலையென பொலிசார் அறிவிக்க, தாயார் மெல்ல மனநோயாளியாக மாற குடும்பம் சிதறுகின்றது.

படிப்பைத்துறந்த MALCOLM X பொஸ்டன், நியூயோர்க் என பெருநகரங்களில் தறுதலையாக அலையத் தொடங்குகின்றார்.

தனது 21வயது வரையில் உணவுவிடுதிகளில் கோப்பை கழுவுபவராகவும் புகைவண்டி உணவகத்தில் வேலையாளராகவும், போதைப்பொருள் விற்பவராகவும்-அதற்கு அடிமையானவராகவும், விலைமாதர்களின் மாமாவாகவும், இரவுவிடுதிகளின் நடனக்காராகவும் சமூகத்தின் இருண்டபக்கங்களில் வலம்வரும் MALCOLM X பின்னர் நண்பன் SHORTY யுடனும் தங்கள் வெள்ளை நிறக்காதலியருடனும் கூட்டாக வீடுகளுக்குக் கன்னமிடும் கொள்ளையராக மாறியபோது கைதாகிச்சிறைத்தண்டனை பெறுகின்றார்.

சாகசமும், துணிச்சலும் கொண்டதான ஒழுங்குமீறிய வாழ்க்கையில் இளவயதை செலவிட்ட இவரை சிறை வாழ்வு ஒழுங்குபடுத்துகின்றது. தனது வாழ்க்கை வரலாற்று நூலில் தனது இளவயதின் அத்தனை சம்பவங்களையும் பதிவுசெய்துள்ளமை அவரது உளச்சுத்தியான சுயவிமர்சனமாகவே அமைகின்றது.

கிறிஸ்தவமத போதகரின் மகனான MALCOLM X; 'NATION OF ISLAM' என்னும் மத இயக்கத்தின் நிறுவனரான 'கடவுளின் தூதுவர்' எனத்தன்னை அழைத்துக்கொள்ளும் 'ELIJAH MUHAMMAD' என்பவரின் சிந்தனைகளால் கவரப்பட்டு இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொள்ளுகின்றார்.

கிறிஸ்தவம் அடிமைப்படுத்தும் மதம், நீலக்கண்கொண்ட வெள்ளைப்பிசாசுகளின் மதம் என்பதனை ஏற்றுக்கொண்ட MALCOLM X சிறையில் படிக்கத்தொடங்குகின்றார். தன்னுள்ளாற்றலை விரிவடையச் செய்கின்றார். அடிமைப்பட்டுக்கிடக்கும் கறுப்பர்கள் எழுச்சி கொள்ள ஓரணிப்படுத்த இஸ்லாம் மதமாற்றமே வழியென முடிவுக்கு வருகின்றார். தன்னை அர்ப்பணிக்க தீர்மானம் கொள்கின்றார்.

சமூகப்பிரச்சனைகளுக்கு மதமாற்றம் வழியாக இருக்குமா என்ற அனுபவம் எல்லா சமூகசிந்தனையாளருக்கும் தோன்றும்போலும்! தமிழ்நாட்டில் சமூகச்சிந்தனையாளரான ஈ.வெ.ரா. பெரியார் அவர்களும் நால்வர்ணம் என்னும் சாதிப்பிரிவினையைக் கற்பிக்கும் இந்துமதத்தைக் கைவிட்டு பெளத்த மதத்தில் சேரவேண்டுமென சூத்திரருக்கு கற்பித்தார். ஆனால் பின்னர் அவர் இதனை தீவிரமாய் கைக்கொள்ளவில்லை.

1952ம் ஆண்டில் சிறைத்தண்டனையில் இருந்து விடுவிக்கப்படும் MALCOLM X 'சினமிக்க அமெரிக்க கறுவல்' என்றே தன்னை மக்கள்முன் அறிமுகம் செய்து கொள்கின்றார்.

நாவன்மையும், தர்க்கிக்கும் பேச்சாற்றலும், செயல் ஆளுமையும், இயல்பான துணிச்சலும் அமெரிக்க கறுப்பரிடையே MALCOLM X இன் செல்வாக்கை ஓங்கச்செய்கின்றது.

'NATION OF ISLAM' அமெரிக்க கறுப்பர்களின் ஓரணி என்னும் நிலையை தன் அயராத உழைப்பால் கட்டியெழுப்பிய MALCOLM X, அதன் 'TEMPLE' என்னும் வழிபாட்டுத்தலங்களை கறுப்பின மேம்பாட்டு நிலையங்களாகவும் மாற்றினார். இவ்வாலயங்களில் கறுப்பின இளம் ஆண், பெண் என இருபலாருக்கும் கராத்தே, யூடோ போன்ற தற்காப்பு கலைகளில் பயிற்சிபெற ஏற்பாடு செய்தார். இப்பயிற்சி முறையை நிறுத்த வேண்டுமென பொலிசார் முயன்ற போது வை.எம்.சி.ஏ. போன்ற கிறிஸ்தவ மத நிறுவனங்கள் பயிற்றுவிப்பதை ஏன் தடுக்கவில்லையென கேட்டார்.

அவரது ஒழுங்குபடுத்தலில் மக்கள் எப்படி பயிற்றுவிக்கப்பட்டார்கள் என்பது படத்தில் அற்புதமாக காட்சியாக்கப்பட்டுள்ளது. தமது உறுப்பினர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டதை அறிந்து, பொலிஸ் நிலைய முற்றுகையும், வைத்தியசாலை நோக்கிய அணி வகுப்பும், நியாயம் தெரிந்ததும் பின்வாங்கி கலைதலும் என்னும் நிகழ்வுகள் அவரது கட்டுக்கோப்பின் உதாரணங்களாகின்றன. இக்காட்சியிலெல்லாம் டென்சில் வோசிங்டன் தனது நடிப்பாற்றலின் அற்புதங்களை நமக்கு காண்பிக்கின்றார்.

படத்தின் பிற்பகுதி MALCOLM X ன் கூட்டங்கள், பேச்சுக்கள் என்றே நிறைந்துள்ளது. இவர் பற்றிய குறிப்புக்களை பதிவுசெய்துள்ள கலைக்களஞ்சியங்கள் (ENCYCLOPEDIA) 'போர்க்குணம் மிக்க அமெரிக் கறுப்பினத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*லைவன். கிளர்ச்சியூட்டும் நாவன்மை மிக்கவன்' என்றே குறித்துள்ளன (AMERICAN BLACK MILITANT LEADER. AN EXTREMELY EFFECTIVE ORATOR).*

*இயக்குநர் ஸ்பைக்லீ அவர்களும் படத்தில் MALCOLM X இன் இவ்வாற்றலை வெளிப்படுத்தும் காட்சிகளில் தீவிரகவனம் செலுத்தியுள்ளார்.*

*ஒரு கூட்டத்தில் மக்களைப்பார்த்து அவர் கேட்டார்,*
*" அமெரிக்க வெள்ளையர் உன்னை ஏன் வெறுக்கின்றனர், ஏளனப்படுத்துகின்றனர் தெரியுமா? "*
*" ஏனெனில் உன்னை, உனது முகத்தை அவர்கள் பார்க்கும் ஒவ்வொரு தடவையிலும் அவர்கள் இழைத்த குற்றத்தை காட்டும் கண்ணாடியாய் நீ இருக்கின்றாய் என்பதே."*

*அடிமைப்படுத்தப்பட்ட அமெரிக்க கறுப்பரின் அதுவரையான தலைவர்களில் MALCOLM X முற்றிலும் மாறுபட்ட தன்மைகளை கொண்டிருந்தார்.*

*மார்க்கஸ் கார்வே (MARCUS CARVEY) 'ஆபிரிக்காவுக்கு திரும்புதல்' என்பதனை கோட்பாடாக கொண்டியங்கினார்.*

*மார்டின் லூதர் கிங் 'நான் ஒரு கனவு காண்கிறேன், ஆடும் ஓநாயும் ஒன்றாய் நீர் அருந்துவதை' என்ற மிதவாத காந்திய கோட்பாட்டை கொண்டிருந்தார்.*

*ஆனால் MALCOLM X "அமைதியாய் இரு, மரியாதையாக இரு, சட்டத்திற்கு கீழ்படி, ஒவ்வொருவனையும் மதித்து நட, ஆனால் உன்னில் ஒருவன் கை வைப்பானாகில் அவனை சவக்காலைக்கு அனுப்பி வை" என்றார்.*

*" சுதந்திரத்தை எவரும் வழங்குவதில்லை, சமத்துவத்தையும் யாரும் வழங்குவதில்லை. நீ ஒரு மனிதனாய் இருப்பின் அதை, நீயே எடுத்துக்கொள்."*

"மால்கம் எக்ஸ் வாழ்ந்த அறுபதுகளின் முன்னருக்கும், இன்றைக்கும் அமெரிக்க கறுப்பினமக்களின் வாழ்க்கைத் தரத்தில் மாற்றம் உள்ளதென்றால் குடியுரிமைகளை பெற்றிருக்கின்றோம் என்பதுதான். ஆயினும் பொருளாதாரப்பிரச்சனைதான் இன்றைய நிலையில் அடிப்படையானது.
வேலை, வாழ்விடம், சுகாதாரம் இவற்றுடன் போதைபொருள் அடிமையென எல்லாமே எம் சமூகத்தை அழித்தவண்ணம் உள்ளது. ஆனால் இந்த ஏழ்மை கறுப்பினமக்களுக்கே உரியது எனக்கூறமுடியாது. அமெரிக்காவின் எல்லா சிறுபான்மையினருக்கும் உரியது."

*(பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றிற்கு 'மால்கம் எக்ஸ்' திரைப்பட இயக்குநர் ஸ்பைக் லீ அளித்த பதில்)*

*அமெரிக்க கறுப்பர்களின் சுய அடையாளத்தை காண்பித்ததில் MALCOLM X முன்னணிவகிக்கின்றார். அமெரிக்காவில் கறுப்பர்களுக்கான தனிமாநிலம் தேவை எனவும் கூட அவர் கோரிக்கை எழுப்பி இருந்தார்.*

*அறுபதாம் ஆண்டு அமெரிக்க கறுப்பின மக்களின் எழுச்சியில் MALCOLM X அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அறுபதாம் ஆண்டுகளில் இடம்பெற்ற கொலைகளின் வரிசையில் கெனடியின் கொலைக்குப் பின்னாலும், மார்டின் லூதர் கிங்கின் கொலைக்கு முன்னாலும் இவர் கொல்லப்படுகின்றார்.*

*MALCOLM X படம்பற்றி எழுதிய பிரெஞ்சு பத்திரிகைகள் 'மீளவும் ஒரு 'MALCOLM X' தோன்றுவரா? அது பிரான்சில் சாத்தியமா? என்ற கேள்வியில் ஒரு அச்சம் இழையோடி இருந்தது.*

*தேவைகள் கேள்வியானால்*
*நிரம்பல்களை யார் தடுப்பது?*
**- கறுத்தான் -**

## குஞ் சரம்

**பாரீஸ்**

தகவல்:- கமலேந்திரன்

அயோத்தி சம்பவமும், அதனைத் தொடர்ந்து பம்பாய் கலவரமுமாக மனிதம் மரணித்த வேளை, உலகின் சகல தொடர்புசாதனங்களும் செய்திகளை கொட்டிக் கொண்டிருந்தன.

எல்லாமே முடுக்கிய இயந்திரமாய் நடமாடும் பாரீஸ் நகர மனிதவாழ்வின் வாராந்த நாளொன்றின் மாலை-

நான் நண்பனைச் சந்திக்க அவனது வியாபார ஸ்தாபனத்திற்குச் சென்றிருந்தேன். வழமைபோல் கூட்டம். நண்பன் வேலையாக இருந்தான். வெவ்வேறு வண்ணங்கள், வடிவங்களில் முகங்கள்..... நான் ஓரமாக வேடிக்கை பார்த்தேன்.

சாதாரணமாக என்னை, எனது நண்பர்களே பாகிஸ்தானி என்று கேலி செய்வதுண்டு. என் வித்தியாசம் அந்தக் கறுப்பு ஆபிரிக்கரைக் கவர்ந்திருக்க வேண்டும்! நேசபாவத்துடன் அறிமுகம்- கைகுலுக்கல். பேச்சு எமது பிறந்த இடங்கள் பற்றி போனது.....

இந்தியா, இலங்கை பற்றியும் பம்பாய், சென்னை, டெல்லி போன்ற இடங்களில் 50களில் தான் வருகைதந்தபோது பார்த்தவை அறிந்தவை பற்றியும் மகிழ்வுடன் சொன்னார் ஆபிரிக்கர். இலங்கைத்தீவின் அழகை வர்ணித்தார். மாலைப்பொழுது இனித்தது.

"நீங்க என்ன மதம்?" என்றார் பேச்சுவாக்கில்.
"ஹிந்து,நீங்க?....." என்றேன் ஆசுவாசமாக
"Don't kill Musleems" என்றார் திடீரென்று முகம் விறைப்பாகியது. அதிர்ந்தேன். "நாங்கள் இந்தியர்களல்ல..... இலங்கையர்.... எம் நாட்டில் அப்படியாக ஒன்றுமில்லையே...." ஒருவாறு சமாளித்தேன்.

"I know Srilanka is a beautiful country. I am sorry,you are nice people."என்று சிரித்தவாறு கைகுலுக்கி விடைபெற்றார்.

என் காலின் கீழ் பூமி நழுவியது! ஸ்ரீலங்காவில் உண்மைச் சம்பவங்கள்...... மனக்கண்ணில் ஓடின. கூனிக் குறுகிப் போனேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு**

- தவத்திரு தனிநாயகம் அடிகள் -

## பண்பாடு என்றால் என்ன?

மக்களியல் வல்லுநர் (ANTHROPOLOGISTS) பண்பாடு எனும் சொல்லைக் கையாளும் பொருள்களைப்பற்றி நாம் குறிக்கவேண்டியதில்லை. அவர்களின் கருத்துப்படி பழைய மக்களின் வாழ்க்கையை விளக்கும் எல்லாத்துறைகளும் பண்பாடு என்னும் சொல்லில் அடங்கும். சென்ற நூற்றாண்டில் மத்தியு ஆர்னல்ட் ( MATHEW ARNOLD ) எனும் நூலாசிரியர் தாம் எழுதிய ஒரு நூலில் இக்காலத்திற்கு ஏற்றவாறு பண்பாட்டுத்துறையை விளக்கினார். இந்த நூற்றாண்டு டி.எஸ்.எலியட் ( T.S.ELIOT ) எனும் ஆங்கிலப் புலவர் 'பண்பாட்டின் வரையயைபற்றிய குறிப்புகள்' எனும் நூலில் பண்பாட்டை இன்னும் விரிவாக விளக்கினார். பண்பாடு என்பது இனிமையும், ஒளியும் என்றும், சிந்தனையின் தொழில் என்றும், அழகிலும் மனித உணர்ச்சியிலும் ஈடுபாடு என்றும் கூறியுள்ளார். நம்மிலக்கியத்தில் பண்பாடு என்னும் சொல் இந்நூற்றாண்டில் தான் ஆங்கிலமறிந்த தமிழறிஞரால் உண்டாக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இன்று நாம் பண்பாடு எனும் சொல்லால் குறிப்பிடும் துறைகளை நம் முன்னோர் பண்பு, பண்புடைமை, சால்பு, சான்றாண்மை முதலிய சொற்களால் குறித்துள்ளனர். இச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் வேறு சில பண்பாட்டுடன் தொடர்புள்ள பொருட்களைக் குறித்தாலும் பல இடங்களில் பண்பாட்டையே கருதுகின்றது. கலித்தொகையில் 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுவது' என்றும் வள்ளுவத்தில் 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்றும் வருவதைக் காண்க. பண்பாடு உடையவரைச் சான்றோரென்றும்,ஒழுக்கமுடையோரென்றும், ஒளியோரென்றும், மாசற்ற காட்சியுடையோரென்றும் அழைத்தனர். ஆங்கிலத்தில் CULTURE எனப்படும் சொல்லிற்கு தமிழில் பண்பாடு என்று குறிப்பிடுகின்றோம். ஆங்கிலச்சொல் எவ்வாறு இலத்தீன் சொல்லாகிய CULTURE AGRI நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து பிறந்ததோ அது போல தமிழ்ச் சொல்லாகிய பண்பும் நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். உழவுத்தொழில் எவ்வாறு நிலத்தைப் பண்படுத்துகிறதோ அவ்வாறே மனத்தையும் மக்களையும் பண்படுத்துவது பண்பு. இச்சொல்லைத்தான் பண்பாடு என்னும் பொருளில் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் நூலாசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

பண்பாடு என்றால் ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கைமுறைகள், பழக்கவழக்கங்கள், சமூகச் சட்டங்கள், சமயங்கள், வழிபாட்டு முறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை புறத்திணை மரபுகள், இலக்கிய மரபுகள், அரசியலமைப்புகள், ஆடைஅணிகலங்கள், திருவிழாக்கள், உணவு,பொழுதுபோக்கு விளையாட்டுகள், இவற்றையெல்லாம் குறிக்கும். ஓர் இனத்தாரின் பண்பாட்டை நாம் அறிந்து கொள்வதற்கு உயர்ந்த இலக்கியம் பயன்படுவதுபோல நாடோடி இலக்கியமும் பயன்படுகின்றது. அதனை நாட்டுப்பாடல்களிலும், நாடோடி இலக்கியங்களிலும் பழமொழிகள், முதுமொழிகளிலும், இசையிலும், நாடகத்திலும், நாட்டியத்திலும், செந்தமிழ் கொடுந்தமிழ் அமைப்பிலும், வளர்ச்சியிலும் காணலாம். மேலும் ஓவியம், சிற்பம், கட்டிடகலை முதலிய கலைகளிலும் ஓரினத்தாரின் பண்பாடு தோன்றும்.

> 1980ம் ஆண்டு ஏப்பிரல்
> மாதத்தில் நிகழ்த்திய
> செல்வநாயகம்
> நினைவுச் சொற்பொழிவிலிருந்து-

தமிழர் பண்பாட்டை ஈராயிரத்தி ஐந்நூறு ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் வளர்த்துவந்த இலக்கியங்களும், கவின்கலைகளும் எடுத்துக் காட்டுகின்றன. ஆயினும் ஒரு சில நூல்களைமட்டும் தமிழர் பண்பாட்டின் களஞ்சியங்களாகக் குறிப்பிட வேண்டுமாயின் ஐந்து நூல்களைக் குறிப்பிடுவேன். அவை தொல்காப்பியப் பொருளதிகாரம், குறுந்தொகை, புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம் என்பன. தமிழர் பண்பாடு கால அடைவில் சிறிது மாறி வந்துள்ளது. ஆனால் அதனுடைய அடிப்படைக் கொள்கைகள் இத்துணை நூற்றாண்டுகளாக மாற்றங்கள் அடையவில்லை. ஆரியர் தமிழ் நாட்டிற்கு வந்த காலத்தில், சிறப்பாக அவர்களுடைய சமய-சமூகக் கொள்கைகள், தமிழ் நாட்டிலும் பரவின. சமணர், புத்தர், ஐரோப்பியர் தமிழ்நாட்டுடன் கொண்ட தொடர்பாலும் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும் பிறநாட்டுச் சமயங்களும் மக்களும் தமிழ்நாட்டில் புகுந்த காலத்தில் தமிழ்மரபைக் காத்துவரப் பயின்றனர். தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகள் சமணர். தமிழொழுக்கத்தின் களஞ்சியமாகிய வள்ளுவத்தை இயற்றியவர் சமணர் என்று சிலர் கூறுகின்றனர். தொல்காப்பியரும் சமணரென்பது பேராசியர் வையாபுரிப்பிள்ளையின் கருத்து. ஆனால் அக்கருத்துக்கு அவர் போதிய சான்றுகள் தரவில்லை. இந்நூலாசிரியரும் வீரமாமுனிவர் போன்ற மேனாட்டாரும் தமிழ் மரபையே தழுவி வாழவும் பாடவும் முயன்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நம் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டே எக்காலத்திலும் புலவர்கள் பாடியிருக்கின்றனர். பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டில் தமிழின் மறுமலர்ச்சிக்குக் காரணமாயிருந்த எழுத்தாளர் பலர் ஆங்கிலத்தை நன்கு அறிந்திருந்தாலும், மேல்நாட்டு இலக்கியங்களையும், வரலாற்றையும் நன்கு பயின்றிருந்தாலும் அவர்கள் தமிழ்ப் பண்பாட்டை இழக்கவில்லை. மாற்றவில்லை. மயிலாடுதுறை வேதநாயகம்பிள்ளை, சுந்தரம்பிள்ளை வி.ஜி.சூரியநாராயணசாஸ்திரி என்னும் பரிதிமால் கலைஞன், பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை, பேராசிரியர் மு.வரதராசன் போன்றவர்கள் தம் ஆங்கிலப்பயிற்சியால் தமிழர் பண்பாட்டை விளக்கினாரொழிய அதனை மாற்றவில்லை.

நாகரிகம் என்னும் சொல்லும் பண்பாடு எனும் பொருளில் இக்காலத்தில் கையாளப்பட்டு வருகின்றது. திருக்குறளிலும், நற்றிணையிலும் முதல் முதல் தோன்றுமிச் சொல் நகரவாழ்க்கையின் அமைப்பையும் பயனையும் குறிக்கிறது. ஆங்கிலத்தில் Civilization என்று கூறப்படும் பொருளைத்தான் நாகரிகமும் குறிகின்றது. City, Citizen, Civilization என்ற சொற்கள் இலத்தீன் மொழியின் Civitas, Civis, Civilis atio எனும் சொற்களிலிருந்து தோன்றியவை. அதேபோல இந்த இலத்தீன் சொற்கள் எக்காலத்தில் தோன்றினவோ அக்காலத்திலேயே நகர், நகரநம்பியர், நாகரிகம் என்ற சொற்களும் தோன்றின. சங்க இலக்கியத்தில் நகர், நகரைக் குறிப்பதுடன் ஒரு பெரும் இல்லத்தையும் குறிக்கும். நகரில் சீரடைந்த மக்களை நகரநம்பியர் குறிக்கும். சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் நகரநம்பியர் வருவதைக் காண்க. நகர் என்ற சொல் திராவிடச் சொல்தான். வடமொழிச் சொல் அன்று. ஆரியர் வட இந்தியாவைக் கைப்பற்றிய காலத்தில் திராவிட மக்கள் பெரும் நகர்களில் வாழ்வதைக் கண்டு வியப்பு அடைந்தனர். திராவிட மக்களிடமிருந்தே நகர்களை அமைக்கவும் ஆரியர் கற்றுக் கொண்டனர்.

இந்நூற்றாண்டில் நாகரிகம் என்னும் சொல்லையும் பண்பாடு என்ற பொருளில் கையாளுவது மரபாயிற்று. ஆனால் நாகரிகம் நகர வாழ்வையும், நகர வாழ்க்கையால் பெறப்படும் நலன்களையும் குறிப்பதுடன் அறிவியல் துறையால், பொருளியல் துறையால் மக்கள் அடைந்துவரும் மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் குறிக்கத்தான் பயன்படுத்தப்பட வேண்டும். சில வேளைகளில் பண்பாடு எது, நாகரிகம் எது என்று பிரித்து கூறுவது எளிதாக இராது. ரேணர் (Turner) என்பவர் The Great Culture Traditions என்ற நூலில் உலகின் பெரிய நாகரிகங்களையும், பண்பாடுகளையும் விளக்கியுள்ளார். ஆர்ணல்ட் ரொபின்பி (Arnald Toynbee) என்பவர் The Great Civilizations எனும் நூலில் பண்பாட்டையும், நாகரிகத்தையும் சேர்த்து விளக்கியுள்ளார். இவ்வாறு தமிழர் பண்பாடும், நாகரிகமும் என்று கூறுவதும் இயல்பாயிற்று. பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களில் இந்துநாகரிகம் (Hindu Civilization) கிறிஸ்தவ நாகரிகம் என்று கூறும்பொழுது பொரும்பாலும் பண்பாட்டையே கருதுகின்றனர். ஆதலால்தான் பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் Culture and Civilization என்று இணைத்து பாடத்திட்டத்தின் தலைப்பை வெளியிடுகின்றனர். ஆனால் இயன்றமட்டும் இவ்விருதுறைகளையும் பிரித்து நோக்குவது பண்பாட்டினை ஆழ்ந்து ஆராய்வதற்கு வழி வகுக்கும்.

## தமிழர் பண்பாடு

தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் சிலவற்றைச் சுருக்கமாகக் கூற விரும்புகின்றேன். அவற்றை நம்மிலக்கியங்கள் பலவற்றில் தெளிவாகக் கணலாம். பரந்த உலக மனப்பான்மை ஒரு கொள்கை ஆதலால்தான் புறநானூற்றில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும் வள்ளுவத்தில் 'யாதானும் நாடாமால் ஊராமால்' என்றும் குறிப்பிட்டுள்ளன. விருந்தோம்பல் ஒரு சிறந்த கொள்கை. பிறரன்பு, ஈகை, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனும் கோட்பாடு, என் கடன் பணிசெய்து கிடப்பதே, அகத்திணை புறத்திணை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல் எனும் கொள்கை, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிகரற்ற மனநிலை, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் உயர்ந்த இலட்சியம் என்பன தமிழர் பண்பாட்டின் அரிய சில கோட்பாடுகளென்றே கூறலாம்.

இவ்விலட்சியங்களைத் தமிழ் இலக்கியங்களில் பன்முறை தேற்றம் கொடுத்து வற்புறுத்துவதைக் காண்கின்றோம். எடுத்துக்காட்டாகப் புறநானூற்றில் வரும் 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற செய்யுளும் 'இம்மைக்காவது மறுமைக்காமென' என்ற செய்யுளும் குறிப்பிடத்தக்கவை.

நம்மிலக்கியங்களை நன்கு ஆராய்ந்தால் அவை பண்பாட்டுத் துறைகளை நன்கு பயன்படுத்துவதைக் காண்கின்றோம். தொல்காப்பியர் கருப்பொருளில் பண்பாட்டுத் துறைகள் சிலவற்றைக் கூறுகின்றார். அவற்றுள் வழிபாடும், இசையும், இசைக்கருவிகளும் சில. அகத்திணையியலில் 20ஆம் சூத்திரத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*இவ்வாறே பண்பாட்டின் கொள்கைகளும், இலட்சியங்களும் எல்லாக்காலத்து இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன.*

*தமிழர் பண்பாடு கால அடைவில் மாற்றங்கள் அடைந்துள்ளதா எனும் வினாவிற்கு மாற்றம் அத்துணை அடைந்ததில்லை. ஆனால் வளர்ச்சி அடைந்துள்ளது என்றே கூறுதல் வேண்டும். வட ஆரியர் தமிழ்நாட்டிற்கு வந்த காலத்திலும்,சமணர் ஐரோப்பியர் ஆகிய பிறநாட்டார் செல்வாக்கடைந்த காலத்திலும் தமிழர் பண்பாடு அடிப்படைக் கொள்கைகளில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை. பிறசமயங்களைப் போதித்த பார்ப்பனரும், சமணரும், புத்தரும் ஐரோப்பியக் கிறிஸ்தவரும், மகமதியரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர். இந்து சமயத்தின் வழிபாட்டு முறையும், இலக்கியங்களும் தென்னாட்டுத் தத்துவங்களால் வளம்பெற்றன. வடமொழியிலுள்ள சமய இலக்கியங்கள் பல சங்கரர், இராமானுஜர், மாதவர் போன்ற தென்னாட்டவரின் மூலமாகத் தென்னாட்டுத் தத்துவங்கள் வடமொழியில் இடம்பெற்றன. சுநீதிகுமார் சட்டர்ஜி, இந்தியபண்பாட்டின் எழுபத்தைந்து விழுக்காடு-திராவிட பண்பாடு என்று குறிப்பிட்டுள்ளார். சமணர் இயற்றிய சிலப்பதிகாரத்தையும், பௌத்தர் இயற்றிய மணிமேகலையையும், வீரமாமுனிவரியற்றிய (1) தேம்பாவணியையும், உமாறுப் புலவர் (2) இயற்றிய சீராப்புராணத்தையும் ஆராயுங் காலை இவர்கள் தம் சமயங்களின் கோட்பாடுகளைக் கூறினாலும் தமிழர் பண்பாட்டை எங்ஙனம் விளக்கியுள்ளாரென்பதும் புலனாகிறது.*

(1) வீரமாமுனிவர்- பெஸ்கி அடிக்கள் எனும் இத்தாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட கிறீஸ்தவப் பாதிரியார். ('தமிழ்மாணவன்' என்று கல்லறையில் எழுதி வைக்கக் கோரியவரும் இன்றைய தமிழ் எழுத்துக்களை வடிவமைத்த மூலகர்த்தாவுமாவார்.)

(2) இஸ்லாமியர்.

# பிரஞ்சுத் தொலைக்காட்சியில் ஒரு அலைவரிசை

-வரன்

காசுகட்ட தேவையில்லாத சாதாரண ஆறுஅலைவரிசைகளை கொண்ட பிரஞ்சு தொலைக்காட்சி சேவையில், கடந்த வருடம் ஐந்தாவது அலைவரிசை (LA CINQ) நின்றுபோனது.

வியாபார முடக்கத்தினால் நின்று போன அந்த ஐந்தாவது அலைவரிசையை இத்தாலிய பணமுதலை ஒன்று வாங்கி நடாத்த முயன்ற போதும், பிரான்சின் நிதி மூலதன நகர்வு பற்றிய சட்ட ஒழுங்குகள் சரிவராததனால் அம்முயற்சி கைவிடப்பட்டது.

அவ் வேளையில் தான் பிரான்சின் கலாச்சார அமைச்சர் Jack LANG கைவிடப்பட்ட ஐந்தாவது அலைவரிசையில் புதிய ஒளிபரப்புக்கு ஏற்பாடு செய்ததன் மூலம் "மறைக்கப்பட்ட கலாச்சாரங்களை" பார்வையில் படச்செய்தார்.

மாலையில் 7 மணி தொடங்கி இரவு 1 மணிவரையான ஒளிபரப்பாக கடந்த செப்டம்பரில் இருந்து " ARTE " என்னும் அலைவரிசை ஒளிபரப்பாகின்றது. 1.2 பில்லியன் பிரஞ்சு பிராங்குகள் அல்லது 240 மில்லியன் டொலர் நிதி மூலதனம் தொடக்க ஆண்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய இணைவு பற்றியதான முயற்சிகள் செயல்வேகம் பெற்றிருந்த வேளையில், ஜேர்மனி சென்ற பிரஞ்சு அதிபர் மித்தரோந்த், ஜேர்மன் அதிபர் கெல்மட் ஹோலுடன் மேற்கொண்ட உடன்படிக்கைகளில் ஒன்றாக இவ் ஒளிபரப்புசேவை தொடங்கப்பட்டது இதன் சிறப்பம்சமாகும். அவ்வுடன்படிக்கையில் பிராங்கோ-ஜேர்மன் இராணுவக்கூட்டுஅமைக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இர ண்டாம் உலகயுத்தத்தின் போது ஜேர்மனின் ஆக்கிரமிப்புக்கு பிரான்ஸ்தேசம் உள்ளாகியிருந்தது என்பதும் நினைவில் கொள்ளவேண்டியதாகும். இணைந்த ஐரோப்பாவின் செயல்மொழியாக ஆங்கிலம் வரக்கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில், பிரஞ்சு-ஜேர்மன் கூட்டு ஒளிபரப்புசேவை தொங்கப்பட்டது நிதானித்து யோசிக்க வேண்டியதே.

பல்மொழிச்சேவையென அழைக்கப்படும் Arte எனும் இவ்வொளிபரப்பு சேவையில் ஒளிபரப்பாகும் விடயங்கள் மூலமொழி மாற்றம் செய்யப்படாமல் ஒளிபரப்பாவதுடன், பிரஞ்சு, ஜேர்மன் மொழி எழுத்துக்களில் அடிக்குறிப்பாக காட்டப்படுகின்றன.

"பார்வையாளரை பெருமளவில் கவராத" சலிப்பூட்டும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதாக சலித்துக் கொள்ளும் விறுவிறுப்வைத் தேடும் எமதுமொழி பார்வையாளர்கள், இந்த அலைவரிசையை ஒதுக்கிவிடுவதனைக் கவனிக்க முடிகின்றது.

அழிந்து போன எகிப்திய அகழ்வாராச்சி பற்றி, அமெரிக்காவாக தொலைந்துபோன மாயா, இன்கா நாகரீகம்பற்றி, மெக்சிக்கோவின் அமெரிக்க பூர்விககுடிகளான செவ்விந்தியரின் வாழ்க்கைபற்றி சித்தரிக்கும் விவரணப்படங்களுடன்; நகரக்கலாச்சார சீரழிவுபற்றியும், சுற்றுப்புற சூழல்பற்றியும், உலகம் கவனம் கொள்ளாத மக்கள்பற்றியும், ஐரோப்பாவுக்குள்ளேயே நகர நாகரீகம் தீண்டாத கிராமங்கள் பற்றியும், கிழக்கு ஐரோப்பிய கலாச்சாரங்கள் பற்றியும், பேசும் இன்னோரன்ன விடயங்கள் இவ் அலைவரிசையில் ஒளிபரப்பாவதை அமைதியுடன் உட்கார்ந்து காணமுடிகின்றது.

மெதுவாக நகரும் கறுப்பு, வெள்ளைப் படங்கள், பரிசோதனை முயற்சி சினிமாக்கள், கலைஞர்களின் வாழ்க்கை, கருத்து சித்தரிப்புக்கள், விவாதங்கள் என்பனவும், பாசிசத்திற்கு எதிரான றொக் இசைபற்றி, இந்தியஇசை பற்றி என்று இன்னோரன்ன நிகழ்ச்சிகள் தொகுத்தளிக்கப்படுகின்றன.

*ஆறு மணிநேரத்தில், கலாச்சார பரிவரித்தனையால் உலகத்தை உள்வாங்கி மானுடர் நாமென உறுதிபெற முடிகின்றது. இந்தியா, இலங்கை போன்ற பல்கலாச்சார தேசங்கள் உலக கலாச்சாரத்தை பரிவர்த்தனை செய்யாவிட்டாலும், தங்களுக்குள்ளான கலாச்சாரங்களை பரிவர்த்தனை செய்யும் ஒளிபரப்பு சேவையை மேற்கொண்டால், இன்றைய இரத்தம் சிந்துதலை தவிர்த்திருக்க முடியுமா ? என ARTE ஒளிபரப்பை பார்க்கும் போதெல்லாம் ஏக்கத்துடன் எண்ண வைக்கின்றது.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஒட்டச்சிவிங்கி

ஸ்லவோமிர் ப்ரோஸெக்

தமிழில் :

மனசு

நன்றி: IMPRINT

போலந்து கதை

('பாலம்' இதழில் இருந்து மறுபிரசுரமாகிறது)

பொடியன் ஜோவுக்கு தலைமுடி முன்வாக்கில் தாழ்வாரமிட்டிருக்கும். அவனைப்பார்த்தாலே சிரிப்பு வரும். அவனுக்கு இரண்டு மாமா உண்டு. இரண்டுபேருக்கும் ஒத்துப் போகாது. ஆளுக்கொரு திசை.

கன்னிகா ஸ்திரி மடத்தையொட்டி ஒடுக்கமான சந்தில் பெரியமாமா குடியிருந்தார். கீழ்த்தளத்தில் விசாலமான அறை. அவர் சொல்லுவார்:

'ஐயா எனக்கு கீழ்த்தளமே போதும். மாடமாளிகையெல்லாம் ஓங்களுக்குச் சரி.'

அந்த அறை முழுக்க புஸ்தகம்தான். பெரிசு பெரிசாக பாதி செல்லரித்து அலுமாரிகளில் அடைந்து கிடக்கும்.

ஒரு சமயம் அவரைப் பார்க்க வந்த ஜோ அலுமாரியில் இடித்துக் கொண்டான். கனத்த புஸ்தகம் விழுந்து மண்டையைப் பதம் பார்த்து விட்டது. அவர் தினமும் மருந்துக் கடைக்கு நடந்து கட்டுத்துணி வாங்கிவர வேண்டியதாயிற்று. அந்த புஸ்தகத்தின் பெயர் என்ன தெரியுமா? 'பொருளுக்கு எதிரான ஆற்றல்'

மாமா அந்த அறையை விட்டு வெளியே தலைகாட்டியதில்லை. சாய்வு மேஜையும் உண்டு அவரும் உண்டு. சதா எழுதிக் கொண்டிருப்பார். அப்படித் தான் அவர் காலம் கழிந்தது.

அவர் எழுதுகிற சமாசாரம் சுவாரசியமாகத்தான் இருக்கணும். அதையே நாற்பது வருஷமாக எழுதிக்கொண்டிருக்கிறாரா சும்மாவா..... அதென்னமோ, அந்த விஷயத்தின் சாராம்சம் இதுதான். ஏகாந்த உலகத்தைப் பற்றிய சிறு விளக்கம் அல்லது பூமி உருண்டையாக இல்லாவிட்டால் உலகம் எந்தமாதிரி கண்ணுக்குத் தெரியும் அல்லது உலகம்...

ஒரு நாள் ஜோ அவரிடம் கேட்டான். ' ஒட்டைச்சிவிங்கி எப்படியிருக்கும் மாமா'. அந்த மிருகம் எப்படியிருக்கும்? அவருக்கு ஒன்றும் பிடிபடவில்லை.

பாவம் அவர் என்ன செய்வார். இருபது வயசிலேயே மாபெரும் எழுத்துப் பணியில் மூழ்கி விட்டார். அதனால் நாலு சுவரைத் தாண்டிப் போக முடியாத நிலைமை. அவருடைய படிப்பெல்லாம், மேற்படி மண்டையைக் குறி வைத்த புஸ்தகம்; அதை விட்டால் தத்துவ விசாரக் கட்டுரைகள்- முழுமையான கருத்துருவம், உலகத்தைப்பற்றிய கருத்து முதல் வாதம், ஆன்ம நித்தியவாதம் இப்படி. அத்துடன் சரி.

அதிருக்கட்டும், இருபது வயசு வரை என்ன செய்தாராம்?

அதுவா, இருபது வயசை எட்டும் வரை முகத்திலிருந்த பருவை நோண்டுவதற்கே சரியாக இருந்தது. கண்ணாடிக்கு முன்னால் மணிக்கணக்கில் தவங்கிடந்தும் அது மறைந்தபாடில்லை.

மிருகக் காட்சி சாலைக்குப் போயிருக்கலாமென்றால் அதுவும் தோதில்லை. சே, மிருகங்களுக்கு கொஞ்சமாச்சும் அடக்கம் பணிவு வேண்டாமா. அதுகளை பார்த்துத் தொலைத்தால் வீண் வம்பு. அதனால் தான் அந்தப் பக்கமும் எட்டிப் பார்க்கவில்லை.

இருந்தாலும் மருமகன் கேட்டானே ஒரு கேள்வி. அவருக்கு ஆச்சரியம். ஆனாலும் காட்டிக் கொள்ளவில்லை.

அவர் ஒன்றும் பெரிய லோகாயதிவாதியில்லை. கேவலம் அப்பட்டமான கருத்து முதல்வாதி. வாழ்க்கை முழுக்க அவர் படித்த படிப்பிலிருந்து ஒரு முடிவுக்கு வந்திருந்தார். அதாவது, மனுஷ அறிவுக்கு எட்டியவரை, இந்தப்பிரபஞ்சம் ஏகாந்தமானது. அப்படி இருக்கையில் ஒட்டைச்சிவிங்கியைப் பற்றி தெரிந்து கொள்வதா முக்கியம். அதெல்லாம் வெறும் தகவலாகும்.

அவர் ஜோவிடம் சொன்னார்.

'நாளைக்கு வாயேன் சொல்றேன்.'

ஜோ போய் விட்டான். அவர் திரைச்சீலைகளை இழுத்து மூடி மெழுகுவர்த்தியைக் கொளுத்தினார். சாய்வு மேஜை மேல் மனுஷ மண்டையோட்டை வைத்தார். அதற்கு முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்தார். விழுந்தவர் நடுச்சாமம் வரை எழுந்திருக்கவில்லை. சாமத்திற்கு மேல் படிப்பில் மூழ்கி விட்டார்.

அடுத்த நாள் ஜோ பழைய கேள்வியுடன் வந்தான்.

அவர் பேச ஆரம்பித்தார்.

www.tamilarangam.net

'ஓட்டைச்சிவிங்கி எப்படியிருக்கும்னா கேட்ட. அதுக்கு மூணுகாலுருக்கும். தலையில ஒரு கொம்பு மொளச்சிருக்கும். குதிரையைப் போல வாலுருக்கும். காளான்தான் அதுக்கு சாப்பாடு. தெரிஞ்சுக்கிட்டயா, நீ போகலாம்.'

'குளிர் காலத்துல காளான் மொளைக்காதே அப்ப எதத் திங்கும் மாமா.'

'பழைய காளான் குளிர்ல ஊறிக் கெடக்குமில்ல அதைச் சாப்பிடும்.'

ஜோ அவருக்கு நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்டான். இந்த மாமாவிடம் அவனுக்கு எப்போதுமே கொஞ்சம் பயம் தான். அதனால் மரியாதையாக நடந்து கொள்வான். இருந்தாலும் அவர் சொன்னது திருப்தியாயில்லை. ஓட்டைச்சிவிங்கி விவகாரம் தீர்ந்த பாடில்லையே. பாழய்ப்போன காளான்தான் முக்கிய காரணம்.

அதுக்கென்ன சின்னமாமாவிடம் கேட்டால் போயிற்று.

எல்லாக்குடும்பங்களிலும் நடக்கிறதைப் போல இரண்டு மாமாவுக்கும் எந்த விதத்திலும் சரிப்பட்டு வராது. ஒருவருக்கொருவர் தெரியாதவர் போலக்கூட நடந்து கொள்வார்கள்.

.................

சின்னவருக்கு அலைந்த பிழைப்பு. பத்திரிகை ஆசிரியர். ஓடியாடி செய்தி சேகரிக்கணும். ஆளை வீட்டில் பிடிக்கவே முடியாது. ஜோ பத்திரிகை ஆபீசுக்கு போன் பண்ணினான்.

'ஹலோ மாமாவா, ஜோ பேசுறேன்.'

'என்ன வேணும் தோழர்'

'ஒண்ணுமில்ல, ஓட்டைச்சிவிங்கி எப்படியிருக்கும்னு தெரியல. அதான் ஓங்ககிட்ட கேக்கலாம்னு நெனச்சென்.'

'விரிவுரையாளர்களுக்கான குறிப்புகள்ல பாரேன்.'

'அந்த புஸ்தகம் எங்கிட்ட இருக்குது. அதப் பத்தி ஒரு வார்த்தைகூட இல்லையே.'

'அப்படின்னா பாயர் பாக்ல இருக்குமே.'

'பள்ளிக் கூடத்துல படிச்சது. அதுலயும் இல்ல.'

'அப்ப டூரிங்குக்கு மறுப்புல பாரு.'

'அதும் எங்கிட்ட இருக்குது. பிரயோசனமில்ல.'

'அதுல இருந்தாகணுமே.'

'இல்லையே.'

அதெப்படி, இருந்துதான் ஆகணும். நீ ஏதோ கற்பனை பண்ணுற.'

மாமா போனை வைத்து விட்டார்.

ஜோவைப் போல அவர் சின்ன பையனாக இருந்த போது ஓட்டைச்சிவிங்கியை படத்தில் பார்த்தது. சிக்கரி வியாபாரிகள் கம்பனி ஓசியாகக் கொடுத்த விளம்பரப்படம். அந்த நினைவில் ஓட்டைச்சிவிங்கி எப்படியிருக்குமென்று பருவெட்டாக யூகிக்க முடிந்தது. அதற்காக அறிவு யுத்தத்துக்கு முந்தின முதலாளித்துவ காலத்துக்குத் திரும்புவதை எப்படி அனுமதிக்க முடியும்.

யாரும் என்னைத் தொந்தரவு பண்ணக்கூடாது என்று கறாராகச் சொல்லிவிட்டு, மார்க்ஸின் புஸ்தகங்களை அலச ஆரம்பித்தார். ஜோ சொன்னது சரிதான். லுத்விக் பாயர்பாக், ஜெர்மானிய தத்துவ ஒளி, டூரிங்குக்கு மறுப்பு ஏன் மூலதனம் எந்த புஸ்தகத்திலும் ஓட்டைச்சிவிங்கியைப் பற்றிய பேச்சே இல்லை. மருந்துக்குக் கூட அந்த வார்த்தை தட்டுப்படவில்லை.

மேற் கொண்டு ஆராய்ச்சி செய்தும் பலனில்லை அவருக்கு ஓரே மண்டைக் குடைச்சல்.

சிக்கரி விளம்பரத்திலிருந்து தெரிந்துகொண்டதை ஏற்பதா? கூடாது. ஏற்றுக் கொண்டால் சுய அந்தஸ்து துறைந்து விடுமே. யுத்தத்துக்கு முந்தி சிக்கரி வாங்கக் கூட வக்கில்லாமலிருந்து ஆயிரக்கணக்கான ஜனங்களின் அந்தஸ்தை விட அல்லவா தாழ்ந்து விடும்.

அப்படியானால், ஓட்டைச்சிவிங்கியைப் பற்றி எதுவும் தெரியாதென்று சொல்லி விடலாமா, அதுவும் கூடாது. அப்புறம் புகழ் என்னாவது. ஒருவன் வெளியுலகத்தை உணர்வதைப் பற்றிய ஆராய்ச்சிக் கொள்கையை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டால், அவனுக்கு எல்லாம் தெரியும் என்று தானே அர்த்தம். ஏதோ கொஞ்சம் தெரியாதென்று வைத்துக்கொண்டாலும் அதை ஒத்துக்கொள்ள முடியாது.

கடைசி வழி. மிருகங்கள் சம்பந்தமான புஸ்தகத்தில் ஓட்டைச்சிவிங்கியைப் பார்க்கலாம். அது நல்லதல்ல. அந்தக் காரியத்தை செய்தால் ஓரே விஷயத்தை துருவிப் படிக்கிற குறுகல் தன்மையை மதிப்பதாக ஆகிவிடும். அப்புறம், அதுவே வெளியுலக விஞ்ஞானத்திற்கு வேட்டு வைத்து விடும்.

---

பாரிஸ்

குஞ்சரம்

14 வது இலக்கிய சந்திப்பு.

பல முகங்கள்.

அழகிய முகம் ஒன்று. எனக்கு அம்முகம் சந்தோஷத்தைக் கொடுத்தது. முதல் சந்திப்பிலே ஒரு நேசத் தன்மை அப்பெண் ஒரு கவிஞை.

"ஏன் உங்கள் எல்லோருக்கும் மார்க்ஸிய தத்துவம் தொடர்பாக இந்தளவு வெறுப்பு நிலை? " நான் கேட்டேன்.

"அப்படியில்லை. எனக்கு மார்க்ஸியம் நல்லாப்பிடிக்கும்"

நீலக் கலர் சாறி பிடிக்கும். வைர அட்டியல் பிடிக்கும். இடியப்பம் சொதி பிடிக்கும். ரஜனி படம் பிடிக்கும்.....

என்று என் கிராமத்து பக்கத்து வீட்டு கந்தையாவின் வெகுளிப் பெண் சரசு கதைக்கும் கதையின் தொனி எனக்கு ஞாபகம் வந்தது.

- துடைப்பான் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜோ மறுபடியும் ஒட்டைச்சிவிங்கியைப் பற்றி விசாரிக்க போன் பண்ணினான். சட்டென்று பதில் வந்தது.

'ஒட்டைச்சிவிங்கின்னு ஒண்ணு கெடையாது.'

'என்ன.. என்ன சொல்றீங்க மாமா. அப்படி ஒண்ணு கிடையாதா.'

'அப்படியொரு உசுப்பிராணியே இல்ல, வேணும்நா நாயோ முயலோ எப்படியிருக்கும்னு சொல்றென்.'

'வந்து... ஒட்டச்சிவிங்கி... ஏன் மாமா இல்லன்னு சொல்றீங்க.'

'இல்ல அதனால தான். மார்க்ஸ், எங்கல்ஸ் இப்படி பெரிய பெரிய அறிவாளிக யாரும் ஒட்டைச்சிவிங்கியப் பத்தி எதுவும் சொல்லேல. இதுலருந்தே தெரியவேணாமா அது இல்லன்னு.'

'ஆனா...'

'ஆனாவது கீனாவாது... நான் சொல்றென்.....'

ஜோ போனை கீழே வைத்தான். அவனுக்குள்ளிருந்து பெருமூச்சு வந்தது.

ooooooooooooooo

பிறகு அவன் மாணவர் படைத் தலைவனுடன் கலந்து பேசினான். தலைவன் சாதாரண இளைஞன், ஜோவிடம் சொன்னான்.

'ஞாயிறு வரைக்குப் பொறுத்துக்கோ. மிருகக்காட்சி சாலைக்குப் போயி ஒட்டைச்சிவிங்கியப் பாப்போம். கவலையை விடு.'

அவர்கள் மிருகக் காட்சிசாலைக்குப் போனார்கள். ஒட்டைச்சிவிங்கியைப் பார்த்தார்கள். அதைப்பற்றி நிறையப் பேசினார்கள். ஜோ அந்த இளைஞனுக்கு நன்றி சொல்லிவிட்டு வீடு திரும்பினான்.

வருகிற வழியில் பள்ளிக்கூடப் பையை விற்றான். உடனே பூக்கடைக்கும் புஸ்தகக் கடைக்கும் போனான்.

ooooooooooooooooo

மறுநாள் மதியம். செய்தியாள் பத்திரிகை ஆபீசுக்குப் போய் ஒரு ரோஜாச் செண்டையும் சிறுகடிதத்தையும் கொடுத்தான். கடிதம் இப்படி இருந்தது:

அன்புள்ள தம்பி!

'நீ ஏன் என்னைப் பார்க்க வருவதேயில்லை. நமது இளமைப் பருவம், குடும்பம், சிறுவன் ஜோ, ஒட்டைச் சிவிங்கி... என்று பேசலாமே.

கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக. உனது பாசமிக்க அண்ணன்.

ooooooooooooooooo

பெரிய மாமா ஜோவைச் சந்தித்த பின் மீண்டும் தமது மாபெரும் எழுத்துப் பணியைத் தொடர்ந்த போது மைக்கூட்டில் எலி செத்துக் கிடப்பதைக் கண்டார்.

பொடியன்களுக்கு எப்போதாவது தான் இரண்டு ரோஜாச்செண்டு வாங்க காசு கிடைக்கிறது.

********

## விரும்பும் மொழியில் படம் பார்க்கலாம்

இயக்குனர் மீரா நாயரின் "சலாம் பாம்பே" டெல்லியில் ஆங்கிலத்திலும், கல்கத்தாவில் வங்காள மொழியிலும், பாம்பேயில் மராத்திய மொழியிலும், புவனேஸ்வரியில் ஒரியா மொழிலும், சென்னையில் தமிழ்மொழியிலும் மொழிமாற்றம் செய்த உப தலைப்புகளுடன் ( sub-titles ) ஒளிபரப்பாகி தொலைக்காட்சி நேயர்களை மகிழ்வித்தது.

எப்படி ?......

"சிடாக்"- என்று சுருக்கமாக அழைக்கப்படும்"Centre for Development of Advance Computing " என்ற நிறுவனம் பல்வேறு மொழிகளைத் தெரிந்து கொள்ள எளிதான தொழில்நுட்பம் ஒன்றை உருவாக்க முயற்சி செய்தது. இதன் பயனாக 'லிப்ஸ்' அதாவது "Language independent programme sub-titles" என்பதை இந்தியாவில் முதன்முதலாகக் கண்டிபிடித்துள்ளது. இதன்மூலம் "சலாம் பாம்பே" திரைப்படம் வெவ்வெறு மொழிகளில் தனித்தனியே உபதலைப்புகளுடன் ஒளிபரப்பாக வழியாயிற்று.

தனிப்பட்ட முறையில் வீட்டில் கம்பியூட்டர் வைத்துள்ளவர்கள் Graphics and Intelligence face Script என்ற கார்டை அதில் செருகி உரிய Converter ஒன்றைப் பொருத்திவிட்டால் போதும் எந்த வேற்றுமொழிப் படத்தையும் உங்கள் தாய்மொழியில் பார்க்கலாம்.

பொம்மை இதழிலிருந்து தகவல் திரட்டி தருபவர் :- பயஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*ஐரோப்பிய மண்ணில், பிரஞ்சுப்பெண்மணி ஒருவர் தமிழ்ப்பணியாற்றுகின்றார் என்றால் எம்மைப்போன்றவர் ஈர்க்கப்படுவதில் வியப்பில்லைத்தான்! எழிமையான சுபாவமுடைய திருமதி.எலிசபெத் பாரிஸிலுள்ள சேர் போன் பல்கலைக்கழக 'தமிழ்' விரிவுரையாளர். உதயணன் என்ற இலங்கைத் தமிழரை வாழ்க்கைத்துணையாகக் கொண்ட இவர், வித்தியா என்ற பெண்குழந்தையின் தாய்-*

# ** பிரஞ்சுப்பெண்மணி எலிசபெத்-உதயணன் **

*சந்திப்பு:- கி.பி.அரவிந்தன் & வரன்*

பாரிஸ்நகரின் பரபரப்பான மையப்பகுதி அமைதியாக கிடந்தது.

ஞாயிறானதால் கடைகள் சாத்தப்பட்டு ஆளரவம் குறைந்திருந்த அந்தமாலை நேரத்தில் குளிருடன் காற்றுமாய் உடலை சிலிர்க்க செய்தது.

19ம் நூற்றாண்டு கட்டிடக்கலை அழகை கொண்டிருந்த குடியிருப்பு கட்டிடத் தொகுதியில் இலக்கத்தைதேடி நண்பனும், நானும் நடந்து கொண்டிருந்தோம்.

மரப்படிகள் வழியே ஆறாம் மாடிவரை ஏறி, களைப்பாற நின்று சுதாகரித்தபின் கதவைத்தட்டினோம்.

வாங்கோ, வாங்கோ... என கைகொடுத்து வரவேற்றார் இலங்கைத்தமிழ் உச்சரிப்பில் உதயணன். களைமிக்க முகத்தில் கண்ணாடிக்குள் கண்கள் பளிச்சிட்டன. தலையும் முடியின்றி பளபளப்புடன் இருந்தது.

வீடியோ, டெக், ஸ்டீரியோ செட், எதுவும் கண்ணில் படாத வரவேற்பறையில் புத்தகங்கள், புத்தகங்களாய் சுவர்பக்கம் முழுதும் தொற்றி இருந்தன. கம்பியூட்டர் ஒன்று சின்னமேசையில் அமர்ந்திருந்தது.

இடஆக்கிரமிப்பு கருதி ஓரமாய் சாத்தியிருந்த மடக்கப்பட்ட கதிரைகளை விரித்து உட்கார்ந்த போதுதான் கவனித்தேன் மெல்லிய ஒலியில் அறையில் தவழ்ந்து கொண்டிருந்தது பாரதி பாடல், ஆச்சரியம்தான்.

அறிமுகங்கள் பரிமாறி, பாரிஸ்வாழ்க்கை பற்றி சலித்து தமிழ்பரப்பில் நுழைய தொடங்கிய போதுதான் வணக்கம் என வந்தமர்ந்தார் பிரஞ்சுப்பெண்மணி எலிசபெத் உதயணன்.

'சுபமங்களா'வில் தான் இவர் பற்றிய குறிப்புகளை படித்தேன். அப்போதே சந்தித்து உரையாட எண்ணம் கொண்டிருந்தேன். பிரஞ்சு-ஆங்கில சொற்கள் கலக்காமல் முடிந்தவரை உச்சரிப்பு சுத்தத்துடன் அவர் உரையாட, நான் யாழ்பாண பாணியில் ஆங்கில சொற்கள் விரவ உரையாடினேன். உணர்ந்த போது தவிர்க்க முயற்சித்த போதும் பழக்கதோஷம் விடமாட்டேன் என்றது. வெட்கமாய் இருந்தது.

அவர் கூறினார் இலங்கைத் தமிழர் தன்னைச் சந்தித்ததும் கேட்கும் முதல் கேள்வி 'நீங்கள் ஏன் தமிழில் ஆர்வம் கொண்டீர்கள்?' என்பதுதான். பலரது சந்திப்புகளின் பின்னே இக்கேள்வி வேறுபாட்டை தான் உணர்ந்ததாய் தெரிவித்தார். எழுந்து சென்றவர் சுடச்சுட பகோடாவுடனும், போளித்தோசையுடனும் வந்து 'சாப்பிடுங்கோ' என்றார். பிஸ்கட், கேக், நம்மவர் என்ற எண்ணம் ஏனோ வந்தது.

இந்திய தத்துவ இயலில் ஆர்வம் கொண்ட தந்தையாரின் தூண்டுதலினால், சமஸ்கிருதம் படிக்க ஆர்வம் கொண்ட எலிசபெத், வகுப்பில் தற்செயலாக தமிழ் உரையாடல் ஒன்றை கேட்டபோது அதன் உச்சரிப்பு கவர, இந்த உச்சரிப்புக்கு எழுத்துண்டா என்ற சந்தேகத்தில் தமிழை தெரிந்து கொள்ள முயற்சித்தபோது, காதல் மிகுந்து தமிழ் மாணவியானார். பக்தி இலக்கியமான தேவாரம், திருவாசகத்தில் சிறப்பு கவனம் கொண்டு-ஆராச்சியாளரானார். தெலுங்குமொழியையும் அறிந்துள்ள இவர் கர்நாடக இசையிலும் ஆர்வம் கொண்டவர்.

பாரிஸ் சேர்போன் பல்கலைக்கழகத்தில் தமிழ் போதனாசிரியராய் பணியாற்றும் இவர் பெண்குழந்தை ஒன்றுக்கு தாயாருமாவார். மகளுக்கு 'வித்தியா' என பெய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரிட்டுள்ளனர்- குழந்தைக்கு இப்போதே தமிழ்கற்பிக்க தொடங்கிவிட்டனர்.

நாடுவிட்டு வந்து ஒரு தசாப்தத்திற்குள்ளேயே, தாய் மொழியை மறந்தும், குழந்தைகளின் பெயரை மாற்றியும், எம்மவரின் சிறுமைத்தனம் கண்டு வெம்பிய மனத்திற்கு உற்சாகமாய் இருந்தது.

தமிழ் மொழித் தொடர்பை தொழில் என்ற மட்டில் ஏற்றுக்கொண்ட அவரின் துணிச்சல் தான். தமிழ்பற்றியும், இலக்கியம் பற்றியும் உரையாடல் திரும்பியபோது சில சஞ்சிகைகள் நூல்களை பார்வைக்கு தந்தனர்.

பிரான்சில் வதியும் தமிழர்கள், அறிந்தும், கேட்டுமிராத, 'சுபமங்களா'. 'சலனம்', 'யுனெஸ்கோ கூரியர்', 'வெளி', 'தினமணிக்கதிர்', 'தற்கால தமிழ் அகராதி', இப்படி எத்தனையோ சஞ்சிகைகள், நூல்கள் நான் மௌனித்து இருந்தேன். சுவரை மறைத்திருந்த புத்தக அடுக்குகளில் பார்வை படர்ந்தது.

சங்க இலக்கியப்படைப்புகளை, கி. ராஜநாராயணன், சுந்தர ராமசாமி, தி.ஜானகிராமன். இப்படி... இப்படி.

'இலங்கைத் தமிழரின் படைப்பொன்றை பிரஞ்சில் மொழிபெயர்க்க வேண்டும் என்ற ஆர்வம் நேரம்தான் கிடைக்கவில்லை' என்ற அவரிடத்தே, சிலகேள்விகளை நான் தொடுத்தேன். எனது கேள்விகள் தமிழ்-பிரஞ்சு மொழி உறவுகள், மொழிபெயர்ப்பு பற்றிய பிரச்சனைகள், சமூக இயல்புகள் என பல்வேறு கோணங்களில் அமைந்திருந்தன. பெரும்பான்மையான கேள்விகளுக்கு அவர் பதில் சொல்லதயங்கினார். தவிர்த்தார். அக்கேள்விகளை தான் பணியாற்றும் சேர்போன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தலைவர் பேராசியர் குரோவிடம் கேட்பது, தெளிவது பொருத்தம் எனக் கூறினார். தன் னடக்கம் காரணமாய் இருக்கலாம்.

மொழிபெயர்ப்பு பற்றி கூறும்போது இரு மொழிகளின் இலக்கண அறிவுமட்டும் மொழிபெயர்க்க போதாது. மொழி சார்ந்த சமூகமும், அதன் மொழிவழக்காலும், எண்ணப்பாடும், சடங்குமரபும், இலக்கிய அறிவும் என மிக எளிமையான உதாரணத்தை இதற்கு கூறினார். மாமா பிள்ளைகள் மச்சான்-மச்சாள் முறையாகவும், பெரியப்பா சித்தப்பா பிள்ளைகள் சகோதரர்முறையாகவும் தமிழில் வழக்கத்தில் உள்ளன. ஆனால் பிரஞ்சில் இரண்டும் ஒரே சொல்லிலே உறவுமுறை அமைகின்றது. அத்துடன் தமிழில் 'தாய்மாமன்' கடமைகள் குடும்ப உறவுகளில் கடைப்பிடிக்கப்படுகின்றன. பிரஞ்சில் இல்லாத, அறியாத இவற்றை புரியவைப்பது கடினமானவை என்றார்.

தமிழில்- குறிப்பாக திருமணமான பெண்கள்- அவர், அவங்க, என பேச்சில் பெயர் சுட்டாமல் ஒரு நாவல் முழுவதுமே பாத்திரம் பேசும். ஆனால் பிரஞ்சில் பாத்திரங்கள் பெயர்களாலேயே சுட்டப்படும். இவை சின்ன விடையங்கள். இப்படித்தான் பலவேறு விடயங்கள் மொழிபெயர்ப்பில் சிக்கலாகின்றன.

என்னைப் பொறுத்தவரை 1976ம் ஆண்டில் மொழிகற்க தமிழ்நாடு சென்றேன். அங்கு நான் பலரது வீடுகளில் தங்கி இருந்து படித்தேன். மின்சாரம் இல்லாத வீடுகளில் சிம்னிவிளக்கில் படித்தும், கட்டில் இல்லா வீடுகளில் தரையில் படுத்துறங்கியும், தமிழ்நாடு ஆடைகளை அணிந்தும், தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளும், பின்னர் விட்டு விட்டு அங்கு சென்றும் வந்ததால், தமிழ் மொழியுடன் நெருங்கிய உறவு கொள்ளவும், மொழிபெயர்க்கவும் உதவியாக இருக்கின்றது எனக் கூறினார்.

1991ல் தமிழ்நாடு சென்றிருந்த போது தான் கொஞ்சம் ஏமாற்றமடைந்ததாயும், அதேபோது ஆச்சரியமுற்றதாயும் குறிப்பிட்ட அவர் ஒரு சம்பவத்தை நினைவுகூர்ந்தார். தான் முதல்முறையாக இந்தியா சென்றிருந்த வேளையில் (1976) வட இந்தியநகரான 'பனாராஸ்' சென்று திரும்புகையில் பஞ்சாபி ஆடை அணிந்திருந்த தாராம், அப்போது தன்னை ரயில்நிலையத்திற்கு அழைக்கவந்த நண்பர்கள் 'ஏன் இந்தமாதிரி ஆடை அணிந்துள்ளீர்கள்' என முகம்சுழித்துக் கொண்டார்கள், கடைக்கு அழைத்துசென்று சேலைவாங்கித் தந்ததார்கள், ஆனால் 1991ல் அங்கு நான் மீண்டும் அவர்களைச் சந்தித்த போது, அவர்கள் மிக இயல்பாக பஞ்சாபி ஆடையுடன் இருந்தார்கள். இதிலிருந்து பெரிய அளவில் மனமாற்றம் நடந்துள்ளதை கவனிக்க முடிந்தது எனக்கூறினார்.

பாரீஸ்

## சரம்

குஞ்

*வழமைபோல் வகுப்பறையில் ஒருநாள்.*

*என்னுடன் படிக்கும் தமிழ் பெண்ணைப்பார்த்து ஆசிரியை கேட்டார் 'பொட்டு' ஏன் இடுகிறீர்கள்?'*

*'அது எங்கள் கலாச்சாரம்' பதில் இயல்பாக வந்தது.*

*'அது ஸ்ரீலங்காவின் கலாச்சாரமல்ல' எனத் திடீரென மறுத்துரைத் தான் எனது சிங்கள நண்பன்.*

*என் நெற்றி சுருங்கியது. அவனைப்பார்த்தேன்.*

*உடன்படிக்கும் பெண்ணும் விட்டுக் கொடுக்கவில்லை. 'இது எங்கள் கலாச்சாரம், தமிழர் கலாச்சாரம்' என்றார் அழுத்தம் திருத்தமாக.*

*'எம் ஊரில் சிறுகுழந்தைகளுக்கு பொட்டிடுவது வழக்கம். ஆனால் பெரியவர்கள் அப்படி இடுவதில்லை. தமிழர்கள் பெரியவர்களான பின்பும் அப்படி இடுகிறார்கள்' நண்பன் தெளிவுபடுத்தினான்.*

*நான் ஒரு புதியபார்வையைத் தரிசித்தவனாய் வெறுமனே.....*

*தகவல் :- சின்னையா*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அண்மையில் இந்தியா சென்று திரும்பிய எலிசபெத்தின் தந்தையார் இந்தியா இரண்டாம் உலகப்போருக்கு முந்திய பிரான்ஸ் போன்றுள்ளது ஏதோ ஒன்று அங்கு நிகழப்போகின்றதெனக் கூறினாராம். எனக்கு இரண் டாம் உலகப்போருக்கு முந்திய பிரான்ஸ் தெரியாது. ஆனால் அப்பா கூறியவற்றை வைத்து பார்த்தால் தமிழ் நாட்டில் தானும் இதனையே 1991ல் கவனித்ததாயும் கூறிய எலிசபெத் இருந்தும் இந்திய கலாச்சாரத்தின் கூறுகள் தமிழ்நாட்டில் தான் காணமுடிகின்றது என்றார்.

'இதயம் பேசுகின்றது' மணியன் போன்ற பயணக்கட் டுரை எழுத்தாளர்கள் பற்றி கவலையை வெளிப்படுத்திய எலிசபெத் பாரிசின் 'PIGALLE' பகுதியை மட்டும் பார்த்து விட்டு பிரஞ்சு சமூகம் முழுமையுமே விபச்சாரம் செய் கின்றது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றார் கள். இது தவறு எனச்சுட்டிக்காட்டினர்.

பிரஞ்சு குடும்ப உறவுகள், மணவாழ்க்கை, வாழ்க்கை அமைப்பு பற்றி கூறியபோது தமிழில் இவைபற்றி எழுதும் படி கேட்டேன்- தனது பட்டப்படிப்புக்கான ஆய்வை தயாரித்துக் கொண்டிருப்பதாயும், ஒய்வு கிடைக்கையில் எழுதுவதாய் கூறிய அவர், மோர்க்குழம்பு, வாழைக் காய்க்கூட்டு, கத்தரிக்காய் பச்சடி, ரசத்துடன் உணவு பரிமாறினார்.

இவ்வகை உணவு தயாரிக்கும் வேளைகளில், தான் மனத்தால் இந்தியா -தமிழ்நாடு செல்ல முடிவதாக திருப்தியடைகின்றார். மே மாதத்தில் பேராசியர் குரோவை சந்திக்க ஏற்பாடு செய்வதாகவும், அவரிடம் ஆழமானவிடயங்கள் பற்றி நீங்கள் பேசலாம் எனவும் கூறினார். மகிழ்ச்சியுடன் நாமும் விடைபெற்றோம்.

முடிந்தால் அடுத்த இதழில் குரோவுடனான சந்திப்பை யும், அவரிடம் பெற்ற தகவல்களையும் தருகின்றோம்.

## மாப்பாசான்

புதுமைப்பித்தன் சிறுகதைகளை திருடி எழுதி னாரா என்ற விவாதம் இப்போதுதான் நடந்து முடிந்தது.

அவர் பிரஞ்சு எழுத்தாளர் 'மாப்பாசான்' (MAU PASSANT) கதைகளை திருடி எழுதினார் என் பதே குற்றச்சாட்டாகும். புதுமைப்பித்தனுடைய படைப்புக்களையும், மொழிபெயர்ப்புக்களையும் வேறுபடுத்தாமல் புத்தக வெளியீட்டாளர்கள், தொகுப்பதில் ஏற்படுத்திய குழப்பத்தால் ஏற்பட் டவிளைவு இது என புதுமைப்பித்தனின் வாழ்க்கை வரலாற்றாளர் தொ.மு.சி.ரகுநாதன் முடிவு கூறியுள்ளார்.



இவ்வாண்டின் பிரான்ஸ் இலக்கிய நிகழ்ச்சிநிர லில் மாப்பாசான் முன்னிடம் வகிக்கின்றார்.

உலகின் சிறுகதை வித்தகர்களில் தலைசிறந்தவர் என புகழப்படும் மாப்பாசான் அவர்கள் இறந்த நூறாவது நினைவு வருடம் இது.

1880ம் ஆண்டில் எழுத்துலகில் அடியெடுத்து வைத்த மாப்பாசான் 1891ம் ஆண்டுவரையான பதினொரு ஆண்டுகளில் முன்நூறு சிறுகதைக ளையும், ஆறு சிறுநாவல்களையும், சில நாடகங் களையும், பயணக்குறிப்புகளையும் எழுதி பிரஞ்சு இலக்கியத்திற்கு வளம் சேர்த்தார்.

1891 ம் ஆண்டின்பின் மனநோயாளராய் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 18 மாதங்க ளாய் சுயநினைவு திரும்பாமலேயே 1893ம் ஆண் டில் மரணித்துப் போனார். 'PHYCHOLOGICAL REALISM' என்ற இலக்கிய போக்கின் உதாரண ராகவும், கர்த்தாக்களில் ஒருவரெனவும் புகழப் படும் மாப்பாசான், ஐரோப்பா உள்ளிட்டதல் லாமல் உலகளாவிய நிலையில் இலக்கியவாதிக ளிடையே பாதிப்பையும், செல்வாக்கையும் கொண்டிருந்தார். புகழ்பெற்ற ரஷ்ய சிறுகதை யாளரான 'அன்டன்செகால்' ரஷ்ய மாப்பாசான் எனச்சிறப்பிக்கப்பட்டார். இப்படியே உலகெங் குமான சிறந்த சிறுகதையாளர்கள் சிறப்பிக்கப் பட்டனர்.

நூற்றாண்டு சிறப்பு நிகழ்ச்சியாக மாப்பாசானின் சிறுகதைகள் உயிர்பெற்று உலாவரும் காட்சியை பிரெஞ்சில் உள்ளவர்கள் காண உள்ளார்கள்.

பிரெஞ்சு தொலைக்காட்சியின் மூன்றாவது அலைவரிசையான 'FRANCE 3' விரைவில் தொலைக்காட்சித் தொடராக ஒளிபரப்ப உள் ளது.

இதனை எழுத்தாளரும், இயக்குநருமான 'CLA UD SANTELLI' இயக்குகின்றார். இவர் ஏற்க னவே புகழ்பெற்ற இலக்கியவாதிகளான,'VICT OR HUGO' வின் 'LES MISERABLE', CHARLS DICKENS இன் 'COPPER FIELD' ஆகியவற்றை இயக்கியுள்ளாராம்.

மாப்பாசானின் இலக்கியப் போக்கினை தமிழில் ஜி.நாகராஜனின் சிறுகதைகளில் காணலாம் என பா.வசந்தகுமாரா என்னும் இலக்கிய ஒப்பாய்வா ளர் குறிப்பிடுகின்றார்.

இவர் மாப்பாசானின் 'ஓர் தோற்றம்' (APPARIT ION) எனும் சிறுகதையையும் ஜி.நாகராஜனின் 'டெர்லின் ஷர்ட்டும் எட்டுமுழ வேட்டியும் அணிந்த மனிதர்'என்ற சிறுகதையையும் ஒப்பீட் டாய்வு செய்துள்ளார்.

'குறத்தி முடுக்கு' என்னும் குறுநாவலையும் 'நாளை மற்றுமொரு நாளே' என்னும் நாவலை யும், கண்டதும் கேட்டதும் எனும் சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ள ஜி.நாகராஜ னின் வெளிவராத வேறு கையெழுத்துப்பிரதி களும் உள்ளதென அவர் கூறுகின்றார்.
மாப்பாசான் போன்றே 1981ம் ஆண்டு ஜி.நாக ராஜனும் மாநோயாளியாக இறந்து போனார்.

கறுத்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெடிக்கும் தருணத்தில் ஓர் எரிமலையாக

## ஸார்செல்ஸ் (SARCELLES)

**இங்கு வாழ்ந்து அனுபவித்து சுவைகண்டுள்ள பலதேசத்தைச் சேர்ந்த இனங்கள் சிறுகுழுக்களுக்கான வடிவத்தைப் பெற்றுவிட்டன. இங்கிருந்து அடித்து நொருக்கி விரட்டினாலும் அந்தந்தக் குழுவடிவங்களை மீளவும் தக்கவைக்கவே இக்குழுக்கள் நாட்டம் காட்டும் ஆக, பிரஞ்சு சமூகத்துடன் இரண்டறக் கலக்காமல் இக்குழுக்கள் தனித்தே இருக்கும்.**

*நம் தமிழர்களின் கனவு நகரமான லண்டனில் 'குட்டி இந்தியா'வாகக் குறிப்பிடப்படும் சவுத் ஹோல் (SOUTHALL), லண்டன் புறநகரப் பிரிவில் தனித்துவமாக இருப்பது அறியப்பட்டதொன்று.*

*பாரீஸின் புறநகரப்பிரிவில் வெளிநாட்டுப் புலம்பெயர்ந்தவர்களால் கவரப்படும் பகுதி ஸார்செல்(SARCELLE) என்றால் பொருத்தம்.*

*நாளாந்தம் ஏதோ சண்டை, சச்சரவு, கடத்தல்..... குற்றங்களுக்குப் பஞ்சமில்லை. தவிர புலம்பெயர்ந்தவர்களுக்கிடையே பல்வேறு கோஷ்டிமோதல்கள்.... தமிழர்கள் அன்பாகப் பெயரிட்டு அழைக்கும் அடையார், கறுப்பர், யூதர் இவர்கள் பற்றி கொஞ்சமேனும் அறிய வேண்டாமா?*

*புலம்பெயர் வாழ்வில் பொருள் தேடலில் மட்டுமே முழுமையாக நாட்டம் காட்டும் நம்மவர், எம்மைச் சுற்றியுள்ள சூழலையும் வாழ்வையும் அறிந்து மதிப்பிட வேண்டாமா?*

*நியூயோர்க் கறுப்பு-வெள்ளை மோதல்களால் பிரசித்தி பெற்றநகரம். அவ்வாறு எதிர்காலத்தில் பிரான்சில் எதிர்பார்க்கப்படும் நகரம் ஸார்செல்.*



*நாம் விரட்டப்படுபவர்கள்*
*எமக்கு திறந்த புகலிடம் ஸார்செல்.*
*எம்முள்ளேயே அடங்கிய*
*தனித்துவமான குணாம்சங்கள்*
*இங்கு இயல்பாகவே உருக்கொள்ளுகின்றன.*

***வல்துவாஸ் ( VAL-D'OISE ) என்ற நிர்வாகப்பிரிவில் ஸார்செல்- பாரிசின் புறநகர்பகுதியில் அமைந்த இந்த நகரம் பெரும்பாலும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த குடியேற்றவாசிகளை உள்ளடக்கி ஏனைய நகரங்களில் இருந்து வேறுபட்டு நிற்கிறது. பொதுவில் பிரான்சிலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் எதிர்கொள்ளப்படும் பொருளாதாரப் பிரச்சனையானது இங்கு குடியேறியுள்ள பல்வேறு தேச, இனத்தவர்களுக்கிடையே ஒரு எச்சரிக்கையாகவும், அவர்கள் மீதான காழ்ப்புணர்வுகளாகவும் வெளிப்படுகின்றன.***

இனக்குழுக்களுக்கிடையிலான மோதல்களைக் காணும் போது நியூயோர்க்குடன் ஒப்பிடாமல் இருக்கமுடியாது- ஒருவித்தியாசம், நியூயோர்க்கில் ஆயுதங்கள் பாவிக்கப் படுகின்றன; இங்கு ஆயுதம் இன்னமும் வரவில்லை! நியூயோர்க் போன்றே கறுப்பர்களும், யூதர்களும் அடுத்தடுத்து நெருக்கமாகவே குடியிருப்புகளைக் கொண்டுள்ளனர்.

'அரசல் புரசலாக இதுவரை காணப்பட்ட மோதல்கள் போலல்லாமல் இப்போது வெடித்துச் சிதறும் அபாய நிலையிலுள்ளது'என்று கூறுபவர் ஆய்வாளர் மார்சல் (MARSHALL). இத் தொகுதியில் அரைவாசிப் பகுதியில் 100ற்கும் மேற்பட்ட இனக்குழுக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இங்கு போதுமான அளவில் பொலீஸ் நிலையங்கள் இல்லை. அது மட்டுமல்ல குடியேற்றவாசிகள் பொலீஸாருக்கு ஒளித்துப் பிடித்து விளையாடும் வகையில் நடந்து கொள்கிறார்கள்.

1993 புதுவருட தினத்தன்று இத் தொகுதியில் அமைந்த நகரமான வில்லியே-லு-பெல் (VILLIERS-LE-BEL) இல் இளைஞர் கழகமொன்று வருங்காலச் சந்ததியினரால் எரியூட்டப்பட்டுள்ளது.

**ஆர்மோவில் (ARMOUVILLE)** என்ற பகுதி 1920ம் ஆண்டுகளில் ஆர்மேனியாவிலிருந்து வந்தவர்கள் பெரும்பாலும் குடியேற்றப்பட்ட இடமாகும். அன்று தொடக்கம் தம்மை அமைதியான வாழ்வில் அடையாளம் காட்டியுள்ளனர். இப்போது நடைபெற்ற தேர்தலின் போது இவர்கள், சோவியத்தின் மாற்றங்களால் நாட்டங்கொண்டுள்ள தம் விருப்பத்தை வெளிப்படுத்தி ஆர்மேனியாவிற்கு உதவும்படி வேட்பாளர்களை நிர்ப்பந்தித்துள்ளார்களாம்!

1950-60 களில் சிறிய கிராமமாக இருந்த இப்பகுதி இன்று புறநகரமாக வளர்ச்சி பெற்றுள்ளது. பெரிய 'கான்கீரீட்' தூண்களால் உருவாகியுள்ள கட்டிடங்களில் திட்டமிடலில்லாமல் நிகழ்ந்த குடிவரவுகளால் இன்று கட்டிடங்களுள் வெடித்துச் சிதறும் பூகம்பங்களாக பிரச்சனைகள் குமுறுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸார்செல் பற்றி சற்று பின்னோக்கி பார்வை செலுத்தி முன்வருதல் பொருத்தமாக அமையும். இங்கு ஆர்மேனியவாசிகளின் ஆரம்பக்குடியேற்றத்தின் பின் உலகவாசிகளின் நுழைவு ஆரம்பமாகியது. 1956 களின் சூயஸ் கால்வாய்ப் போரில் வெளியேறிய எகிப்திய யூதர்களும், பின் அல்ஜீரிய சுதந்திரத்தால் வெளியேறிய PIEDS-NOIRS (கறுப்புப்பாதக்காரர்) என்ற பிரஞ்சுப் பிரசைகளும், துனிஸ் யூதர்களும், அல்ஜீரிய யூதர்களும், அல்ஜீரியப்பிரசைகளும், மக்கிறபன்[1] (MAGHREBIN) களும் இங்கு குடியேறினார்கள்.

இது ஒருபுறமிருக்க, அதிகரித்துவரும் நிலவாடகையை ஈடுகொடுக்க முடியாத பாரிசைச் சேர்ந்த ஏழை உழைப்பாளிகளும் தவிர்க்க முடியாதவாறு தம் வதிவிடங்களாக இப்பகுதியை மாற்றத் தொடங்கினர். அந்தியே[2] (ANTILLAIS) என அழைக்கப்படும் பிரான்சுக்கு வெளியேயுள்ள பிரஞ்சு டிப்பார்ட்மென்டுகளிலிருந்து வறுமையின் காரணமாக வந்தவர்களும் இவ்விடத்தையே தம் பிரிய வாசஸ்தலமாக்கினர்.

ஆபிரிக்க நாடுகளிலேற்பட்ட வறுமையால் புலம்பெயர்ந்த கறுப்பர்களுக்கு இந்த இடம் திறந்த வரவேற்பை அளித்தது. ஸ்ரீலங்காவில் சிங்கள இனவாத அரசின் தாக்கத்தால் வெளியேறிய தமிழர்களும் பெருமளவில் இங்கேயே குடியேறினர். துருக்கிய முஸ்லீம் அரசதொல்லையால் விரட்டப்பட்ட துருக்கிய கிறிஸ்தவர்களும், ஐரோப்பியக் கனவுலக நினைவுகளால் தூண்டப்பட்டு வந்த பல்வேறு தேசத்தவர்களும் இவ்விடமே விரும்பிய குடியேற்றப்பூமியாகியது. பாகிஸ்தானிகளும் நிறையவே காணப்படுகின்றனர்.

ஸார்செல் வாசிகள் பற்றிய வரலாற்றை அறியும்போது அங்கு வாழ்ந்துவரும் பிரசைகளின் கருத்துக்களை கேட்பது பொருத்தமானதாக இருக்கும்.

லாமுயத் (LA MUETTE) என்ற நகரம் இங்கு பேர்போன சூடான பகுதியெனலாம். இங்கே குடியேறியுள்ள அரபுக்களின் புதிய தலைமுறையினர் பழக்கவழக்கங்களில் 'இருதலைக்கொள்ளி'யாகக் காணப்படுகின்றனர். இவர்கள் போதைவஸ்து தொடர்பானவர்களை அடித்துவிரட்டுகின்றனர். முதியோரையும், பெரியோரையும் மதியாது தன்வழியே செல்கின்றனர். ஒருவிதத்தில் பார்த்தால், கட்டுப்பாடு இல்லாதவர்களாக கட்டாங்காலிகளாக தனித்துவம் பேணுகிறார்கள். இவர்களின் ஆளுமை வட்டம் இந்த நகரம் சார்ந்த பகுதி மட்டுமே. "இந்த அரசாங்கங்கள் எங்களை ஒதுக்கி வைத்து ஓரம்கட்டியது. இப்போது மட்டும் ஏன் கிட்டே வருகின்றீர்கள்?" என்ற



வினாவுடன் சொல்பவர் 32 வயதான முறாட் (MOURAD) என்ற இளைஞர் அணித்தலைவர். இவர் மேலும் கூறுகையில் "அரசாங்கம் எமக்குத் தரும் வசதிகளை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இந்த இடம் எமது பூமி." என்று அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகிறார்.

பெரிய மீசையுடன் காணப்படும் தேனீர்க்கடை வைத்துள்ள துருக்கிய தேசத்தவர் ஸார்செல் பிரச்சனைகள் பற்றி கூறுகையில், "CORA" என்ற பல்பொருள் சிறப்பங்காடி (L'HYPERMARCHE) யின் காவல்காரர்கள் அந்த இளைஞர்களுடன் மோதுகின்றார்கள்!" என்று தன் அறிவுக்கெட்டிய மதிப்பீட்டை வெளிப்படுத்துகிறார்.

WATTEOU DE SARCELLE என்ற இடத்தில் வசிக்கும் டாக்டர் JEAN RISMONDO ஸார்செல் பற்றி சுவாரஸியமாகவே குறிப்பிடுகிறார். "நாம் எமது நாடு அல்லது பிரதேசங்களில் இருந்து விரட்டப்பட்டது ஸார்செலில் குடியேறத்தான்! இங்கு வந்ததுமே ஸார்செலுக்கேயுரியதான தனித்துவமான ஒழுங்குகளின் (!) ஆளுமைக்குக் கட்டுப்பட்டு ஈர்க்கப்படுகிறோம். எமது ஊரை அல்லது எமது பிரதேசத்தையொட்டிய பாரம்பரிய செயல்பாடுகளை நாம் தொடர இங்கே நிறைய வாய்ப்பு கிடைக்கிறது. இதை அடிகோலியே எம் எதிர்கால வாழ்வின் நம்பிக்கைக் கோட்டை அஸ்திவாரமாகிறது. இன்று நாம் வாழும் இடமான 'நவீன தொடர்மாடிச்சேரி'[3] (LES GHETTOS)யை இடித்து நொறுக்கினால்தான் பிரச்சனைகள் தீர்வாகுமென்று சிலர் சொல்வதை நான் முற்றாக மறுக்கிறேன்."

---

1
மக்கிறபன் (MAGHREBIN) ஆபிரிக்காவின் வடமேற்குப் பகுதியாகும். மெரிடேறியன் கடல்பகுதிக்குக் கீழே சகாரப்பாலைவனம் வரையிலும், எகிப்து, லிபியா, துனீஸ், மொறோக் போன்ற நாடுகளை உள்ளடக்கிய பகுதியாகும். 50-60 களில் தேசிய விடுதலைப்போரட்டம் கூர்மைகடைந்து நாடுகள் விடுதலை பெற்றுவரும் வேளையில் அந்நாடுகளில் இருக்க முடியாது ஓடிவந்தவர்கள், இங்கே குறிப்பிடப்படுகிறார்கள்.

2
அந்தியே (ANTILLAIS) பிரான்சின் வெளியேயுள்ள பிரான்சின் இடங்களை (நவீன காலனிகள் எனக் கருதப்படும் இடங்களை) இங்கே குறிப்பிடப்படுகிறது. GUADELOUPE, MARTINIQUE போன்ற அத்திலாண்டிக்கடலில் அமெரிக்க மத்திய பகுதியில் கொலம்பியாவுக்கும், வெனிசூலாவுக்கும் மேலே இருக்கும் இடங்கள்.

3
LES GHETTOS கீப்புறு மொழியில் GHET என்பது விவாகரத்து எனப்பொருள்- இத்தாலி மொழியில் சில இடங்களில் யூதர்களை தனிமைப்படுத்தி வைப்பதற்கு ஏற்பாடான 'திறந்த வெளிச்சிறை' எனப்படுகிறது. 16ம் நூற்றாண்டுப் பகுதியிலிருந்து இத்தாலி, ஸ்பெயின், பிரான்சுக்கூடாக யூதர்களின் குடிவரவுகள் இருந்தபோது மேற்படி 'திறந்த வெளிச்சிறை' ஏற்பாடானது. இங்கே இரவுநேரங்களில் கடுமையான பாதுகாப்புக்குள்ளாக்கப்பட்டதுடன் வெளியுலகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. பிரஞ்சுப்புரட்சியின் பின் 18ம் நூற்றாண்டின் போது பிரான்சில் GHETTOS முறை நீக்கப்பட்டது. இதற்கு மாறாக ஜேர்மனியில் GHETTOS தொடரப்பட்டு வந்தது. இங்கே யூதமக்கள் அதனைச் சகித்து வாழ்ந்து வந்தனர். ஜேர்மனியில் JUDENGASSEN என்றே இதனை உள்ளார்ந்த அர்த்தமாகக் கொள்ளலாம். இன்று 20ம் நூற்றாண்டின் கடைசியிலும் கூட இத்தகைய வடிவங்களை பல முஸ்லீம் நாடுகளிலும் நடைமுறையிலுள்ளதைக் காணலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நான் 1958ல் இங்கு வந்தபோது, இங்கு வாழ்ந்த மக்கள் மத்தியில் ஒரு கூட்டு ஐக்கியம் காணப்பட்டது. நாம் வாடகை உயர்வுக்கு எதிராகவும், விலைவாசி உயர்வுக் கெதிராகவும் கம்யூனிட் கட்சியுடன் இணைந்து போராடினோம். அவ்வேளையில் கம்யூனிட் கட்சி வலுவாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இப்போது இக்கட்சி வலுவிழந்தே காணப்படுகின்றது" என்கிறார் ஒருவர் கவலையுடன்.

இங்கு வாழ்ந்து அனுபவித்து சுவைகண்டுள்ள பலதேசத்தைச் சேர்ந்த இனங்கள் சிறுகுழுக்களுக்கான வடிவத்தைப் பெற்றுவிட்டன. இங்கிருந்து அடித்து நொருக்கி விரட்டினாலும் அந்தந்தக் குழுவடிவங்களை மீளவும் தக்கவைக்கவே இக்குழுக்கள் நாட்டம் காட்டும் ஆக, பிரஞ்சு சமூகத்துடன் இரண்டறக் கலக்காமல் இக்குழுக்கள் தனித்தே இருக்கும்.

பழைய குடியேற்றவாசிகள் புதியகுடியேற்றவாசிகளுடன் முரண்படுவதை அடிக்கடி காணலாம். குறிப்பாக பழைய குடியேற்றவாசிகள் புதிதாகக்குடியேறியவர்கள் பற்றிய தகவல்களைத் தரும்போது (முன்பு யூதர் இருந்த இடங்களில்) இங்கே கறுவல், இங்கே பாகிஸ்தானி, அங்கே தமிழன்.... என்று எரிச்சலுடன் காழ்புணர்வுபொங்க சுட்டிச் சொல்வதைக் காணலாம்.

ஸார்செலில் வாழ்ந்து பட்டம்பெற்ற அறிவாளிகள், டாக்டர்கள் இன்று இவ்விடத்தைவிட்டு அகன்றுள்ளார்கள். இந்த வசதியானவர்கள், ஒதுக்குப்புறமாக அமைந்துள்ள உயர்குடியினர் குடியிருப்புப்பகுதிகளில் தமது புதிய வாசஸ்தலங்களை அமைக்கின்றனர்.

"நான் 1958ல் இங்கு வந்தபோது, இங்கு வாழ்ந்த மக்கள் மத்தியில் ஒரு கூட்டு ஐக்கியம் காணப்பட்டது. நாம் வாடகை உயர்வுக்கு எதிராகவும், விலைவாசி உயர்வுக் கெதிராகவும் கம்யூனிட் கட்சியுடன் இணைந்து போராடினோம். அவ்வேளையில் கம்யூனிட் கட்சி வலுவாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இப்போது இக்கட்சி வலுவிழந்தே காணப்படுகின்றது" என்கிறார் ஒருவர் கவலையுடன்.

BEVERLY HILLS எனக்குறிப்பிடும் பகுதியில் அதிக யூதர்கள் வாழ்வதை எரிச்சலுடன் ஆபிரிக்கர் சுட்டிக் காட்டுவர். 'LES BRONX' என்றபகுதியில் மிகவும் வறுமையில் உள்ளவர்கள் வாழ்கின்றனர். குடும்ப, அரச இயந்திர, சமூக அமைப்பு ஒழுங்குகளுக்கூடாக நெறிப்படாமல் வளர்ந்துள்ள கட்டுப்பாடில்லாத குடியேற்றவாசிகளின் புதியதலைமுறையினர் வேலையில்லாத் திண்டாட்டங்களுக்குள்ளாகியுள்ளனர். பொருளாதார நெருக்கடிகளாலும், தாண்டவமாடும் ஏழ்மையாலும் ஒதுக்கப்பட்டு அல்லது ஒதுங்கி வாழும் இவர்கள் தங்களுக்குள்ளாகவே முடங்கி வாழப்பழகி விட்டனர். இந்த முடக்கநிலை ஒரு ஆபத்தான நிலையாகும். மௌனமாகக் குமுறும் இத்தாக்கம் வெடிக்குமாயின் பிரான்சில் தேசிய இனமோதல்களைத் தோற்றுவிக்கலாம் என அரசு நியாயமாகவே பயம் கொண்டுள்ளது. பிரச்சனைகளை அணுகமுடியாமல் தனது கையாலாகாத் தனத்தை அரசு உணர்ந்துள்ளது. இதற்கு பிரதானமாக இரண்டு சமூகப்பிரிவினரின் செயல்கள் காரணங்களாகின்றன.

யூதர்கள்: இவர்கள் 1970ம் ஆண்டளவில் யூத அரசினால் (இஸ்ரேல் அரசினால்) ஊக்குவிக்கப்பட்டு வறுமையிலிருந்து மேலே வருவதற்குக் கைகொடுக்கப்பட்டார்கள். சுமார் 30 வருடங்களின் பின்பு இவர்களுக்கிடையே நிறையவே பாரம்பரிய மதவேறுபாடுகள். ஆனாலும் இவர்களின் முன்னேற்றம் விரிந்துள்ளது. 'SYNAGOGUES' என்ற மதநிறுவனம் இவர்களின் வளர்ச்சிக்கும் ஒன்றிணைப்பிற்கும் துணையாக இருந்துள்ளதெனலாம்.

பிரஞ்சு டிப்பாட்மென்டுகளைச்சேர்ந்த கறுப்பர்கள்: முன்னைய காலங்களில் தமது சமூகக் கொண்டாட்டங்களையும், இசை நிகழ்வுகளையும் பிரஞ்சுடன் கலந்து கொண்டு பிரஞ்சு மக்களுடன் விசுவாசமாக வாழத் தலைப்பட்டவர்கள்.

மேற்படி இரு சமூகத்தவரும் இப்பகுதியிலிருந்து வெளியேறியதால் அரசு நிர்வாகத்தில் ஒரு வெற்றிட வெறுமை தோன்றியுள்ளது. இவர்களே முன்னர் தொடர்பாளர்களாக ஸார்செல் வாசிகளுடனும் அரச நிர்வாகத்துடனும் இருந்து வந்திருந்தனர்.

ஸார்செலில் இப்போது வசிப்பவர்களில் ஆபிரிக்கக் கறுப்பர்களும், 'அந்தியே' யின் இளைய தலைமுறையினரும் தம்மை கறுப்பர்களாக வெளிக்காட்ட விளைவதால், 'கறுப்புத்தோல் இனவாத உணர்வால்' கவரப்பட்டுள்ளனர். பாரம்பரிய ஏழை முஸ்லீம் கறுப்பு இனத்துவ உணர்வால் உந்தப்படுகின்றனர். இவர்களின் வெளிப்பாடுகளாக முன்னர் ஒழுங்கமைக்கப்பட்ட இசைவடிவங்களான பாடல்கள், இப்போது உணர்ச்சிக் கொந்தளிப்பாக 'ராப்'(RAP) இசையாக கொட்டப்படுகின்றன. இதனூடாக பிரச்சனைகள் தெருக்களிலேயே வெளியே விசப்படுகின்றன.

ஒரு பாடசாலையில், கறுப்பு மாணவன் ஒருவனின் வெள்ளைச் சினேகிதியுடனான தகராறில் ஈடுபட்ட மூன்று கறுப்பர்களுடன் நியாயம் பேசிய கறுப்பு மாணவனை நோக்கி'நீ கறுப்பனாக இருந்தாலும் ஏன் எம்பக்கமில்லாமல் எதிர்ப்பக்கம் சாய்ந்து பேசுகிறாய்' எனக் கேட்டு மோதியுள்ளனர்.

முன்னர் வெளிப்படையான நடமாட்டங்களைக் கொண்டிருந்த இனக்குழுக்கள் இப்போது காணப்படவில்லை. ஆனால் சம்பவங்கள் கோரமானவையாக நடக்கின்றன. ஆக குழுக்களின் தலைமறைவு நடவடிக்கைகளை ஊகிக்க முடிகிறது. புதிய பிரச்சனைகள் வெடிக்க ஆரம்ப அறிகுறிகள் தெரியத் தொடங்கிவிட்டன.

## வெடிக்கும் தருணத்தில் ஓர் எரிமலையாக.....

## ஸார்செல் (SARCELLES)



நன்றி: L'EVENEMENT

CLAUDE ASKOLOVITCH இன் கட்டுரையைத் தழுவி தொகுத்தவர்கள்:- வரன் & அநாமிகன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை



என்.கே.ரகுநாதன்

# நிலவிலே பேசுவோம்

மாலையிலே மது ஒழிப்புக்கூட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த அந்த மாபெருங்கூட்டத்திலே ஆண்சிங்கம் போலத் தோன்றி, மதுவினால் ஏற்படும் தீமைகளையும் அது ஒழிக்கப்பட வேண்டிய அவசியத்தையும், அதற்கான வழிவகைகளையும் அள்ளி விளாசி, இடையிடையே காந்தியத்தைப் பூசி, அழகு தமிழிலே அனல் பறக்கப் பேசிவிட்டுச் சற்று முன்பு தான் வந்திருந்தார் ஸ்ரீமான் சிவப்பிரகாசம் அவர்கள்.

அப்போது மணி எட்டு இருக்கும். அவருக்குப் பசி. அத்துடன் கூட்டத்திற்பேசிய களைப்பு வேறு.

சாப்பிட்டு முடிந்ததும், அறுசுவை உண்டியின் ருசியில் நாவைத் திளைக்கவிட்டபடியே உள்ளே இருந்த "ஓர்குலம்" பத்திரிகையைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். விறாந்தையின் மூலையொன்றில் கிடந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு ஜகஜ் ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த மின் விளக்கின் ஒளியில் பத்திரிகையைப் புரட்டிப் படிக்கத் தொடங்கினார்.

ஒரு பந்திகூட வாசித்திருக்க மாட்டார். வெளியே வாசற் பக்கமாகச் சிலர் பேசுவது கேட்டது. பத்திரிகையில் படிந்திருந்த பார்வையைத் திருப்பி அங்கே நோக்கினார்.

யாரோ பத்துப் பன்னிரண்டு பேர்கள் நசித்துப் போன கூட்டம் அதாவது "உழைத்தாற்றான் உணவு" என்ற நிலையிலிருக்கும் உழைப்பாளி வர்க்கம்! அவர்களில் ஒருவன், தயங்கித் தயங்கி இவரண்டை வந்தான். மற்றவர்கள் அங்கேயே நின்றுவிட்டார்கள். சிவப்பிரகாசம் எழுந்து, இரண்டடி முன்னே நடந்து, வந்தவனை உற்றுப் பார்த்தார்.

"அடடே! நீயா கந்தா! என்ன சேதி" என்றார்.

"உங்களைக் காணவேண்டுமென்று வந்தோம். இந்த மதுவிலக்கு சம்பந்தமாக...." என்று தயக்கத்துடன் சொன்னான்.

"ஆகா! அதற்கென்ன, நல்லாய்ப் பேசலாமே! " என்று சொன்னார் சிவப்பிரகாசம்.

"இன்னும்சிலர் வந்திருக்கின்றார்கள். அப்படியானால் அவர்களையும் கூப்பிட்டு....." வார்த்தையை முடிக்காமல் வாசற்பக்கம் திரும்பி அங்கே உள்ளவர்களைக் கூப்பிட எத்தனித்தான் அவன்.

சிவப்பிரகாசம் ஒருகணம் திக்கு முக்காடினார். மனத்திலே ஒரு பரபரப்பு தடுமாற்றம்! தலையைச் சொறிந்து, நெற்றிப் புருவங்களை உயர்த்தி ஏதோ யோசனை செய்தவர், திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தார்.

"வேண்டாம் கந்தா, கூப்பிடாதே! இதெல்லாம் இரண்டாம் பேர் அறியக் கூடாதவிடயங்கள். மனைவி, மக்களென்றாலும் இந்தக் காலத்தில் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதென்று யாருக்குத்தெரியும் அதோபார் வெளியே நல்லநிலவு! அத்துடன் பால் போன்ற மணல், அங்கே போய்ப 'பேசிக் கொள்ளலாம் வா! " என்று அவன் பதிலை எதிர்பார்க்காமலே, கீழே இறங்கி நடந்தார். அவன் பின் தொடர்ந்தான்.

பின் வாசலில் நினறவர்களையும் அழைத்துக் கொண்டு, சற்றுத்தூரம் போய் நல்ல இடத்தில் அமர்ந்து பேசினார்கள்.

*1951ல் எழுதப்பட்ட சிறுகதை என்பது இதன் சிறப்பு. இன்று தமிழில் சிறுகதைகள் அடைந்துள்ள வடிவமாற்றங்களை இக்கதையுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்..*

*எப்போதும் இரண்டு விதமான தலைவர்கள் உண்டு. ஒருவர் தனது ஆட்டு மந்தையை இட்டுச்செல்வதில் குறியாக இருப்பர். மற்றவர் ஆட்டு ரோமத்தில் கண்ணாயிருப்பார்.*

*- ஃபுல்டன். ஜே.ஷீன்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்தவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். கள் சேர்ப்பது அவர்கள் தொழில். ஊர்முழுதும் "மது ஒழிக! " என்ற கூச்சல். இந்த நிலையிலே அவர்கள் கதி.....?

மது ஒழிப்புக் கூட்டத்திலே சிவப்பிரகாசம் காரசாரமாகப் பேசியதை அவர்களும் கேட்டார்கள். எனவே அவரிடம் வந்து சேர்ந்தார்கள், தமது ஜீவப்பிரச் சனைக்கு ஆலோசனை கேட்பதற்கு.

"நாங்களும் மதுவிலக்குக்கு ஆதரவு தருகிறோம். மதுவினால் உலகத்திற்கே ஆபத்து என்பது நமக்குத் தெரியும். நமக்குக் கூட அது ஒரு மகிழ்ச்சியான தொழிலல்ல. ஊர் மக்களிடம் வசை கேட்கிறோம். 'எக்ஸைஸ்' உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்துக்கு மேலே 'கிம்பளம்' கொடுத்தும் ஒளித் தோடுகின்றோம்.... அது மட்டுமா? ஒவ்வொரு நொடிப் பொழுதும் உயிரைப் பணயம் வைத்துத் தான் வாழ வேண்டியிருக்கிறது. ஆகாயத்தை அளாவி நிற்கும் மரங்களில் இருக்கும் போது, நமது நிலைமையை எண்ணிப் பாருங்கள். மிகப் பயங்கரமான தொழில் தானே! என்றாலும்...?" என்று இழுத்தான் அங்கு வந்திருந்த ஒரு வாலிபன்.

"ஏன் இழுக்கிறாய்? சொல்லு தம்பி! " என்று வற்புறுத்தினார் சிவப்பிரகாசம்.

"நமக்கு வேறு தொழில் வேண்டுமே! "

சிவப்பிரகாசம் சிரித்தார். "இதென்ன பிரமாதம்? " இந்தப் பரந்த உலகில் தொழிலுக்கா பஞ்சம்? என்றார்.

"எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன தான் என்றாலும் நாம் செய்வது சாத்தியமா?"

"ஏன்?"

"ஒரு தேனீர்க் கடை வைத்தால் யாராவது நம்மிடம் வந்து தேனீர் குடிப்பார்களா? அல்லது ஒரு பலசரக்கு கடை வைத்தால் கூட நம்மிடம் வந்து சாமான் வாங்குவார்களென்பது என்ன நிச்சயம்? ஏன் ஒரு இரும்புக் கடையில் கூட நம்மவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள மாட்டார்களே இரும்புப் பொருட்களில் தீட்டு ஒட்டிக் கொள்ளுமென்று! அதிகம்வேண்டாம் என்னை உங்கள் வீட்டில் ஒரு கூலியாக வைத்துக் கொள்ளுங்கள் என்றால் சம்மதிப்பீர்களா? இந்த நிலைமையில்....." என்று வந்த வாலிபன் மிகவும் உணர்ச்சியுடன் பேசிவிட்டு அவர் முகத்தைப் பார்த்தான்.

"அப்படிச் சொல்லாதே தம்பி! அதெல்லாம் வேறு விஷயம். இவைதான் தொழில்களா? வேறு கைத்தொழில் செய்கிறது."

வாலிபன் பேச வாயெடுத்தான். அவனைத் தடை செய்துவிட்டு இதுவரை மௌனமாக இருந்த ஒரு நடுத்தர வயதினன் கோபத்துடன் கேட்டான்.

"ஆமாம்! அதெல்லாம் வேறு விடயங்கள். உங்களுக் கென்ன எத்தனையோ சொல்வீர்கள். இதோ பாருங்கள்! நான் இருக்கிறேன், எனக்கு இப்போது ஐம்பது வயதாகிறது. இந்தவயதில் நான் வேறு புதுத்தொழில் பழகித் தேர்ச்சியடைவதற்கும் காலன் வந்து என் கழுத்தில் கயிறு போடுவதற்கும் சரியாக இருக்கும். தொழில் பழகிற காலத்திலே நல்ல ஊதியம் கிடைக்குமா? அவ்வளவும் நானும் என் பெண்டாட்டி பிள்ளைகளும் பட்டினி கிடக்க வேண்டியதுதான். அப்படித்தானே உங்கள் திட்டம்? "

சிவப்பிரகாசம் ஆபத்தான கட்டத்தில் அகப்பட்டுக்கொண்டார்.

எனினும் சமாளித்துக் கொண்டு, "ஆத்திரப்படாதீர்கள்! நீங்கள் ஒருங்கே திரண்டு உங்கள் தேவைகளை அரசாங்கத்திடம் கேளுங்கள். நீங்கள் கள்ளுச்சேர்க்க வேண்டாம். கருப்பநீர் இறக்குங்கள். ஒரு சீனித்தொழிற் சாலை நிறுவித்தரும்படி உங்கள் தொழில் அமைச்சரைக் கேளுங்கள். கவனிக்காமல் விட்டு விடப் போகிறார்களா?" என்று நொண்டிச் சமாதானம் கூறினார்.

கூட்டத்திலிருந்து ஒரு புதிய எழுச்சிக்குரல் கேட்டது.

"அதொன்றும் வேண்டாம். மதுவினால் நன்மையோ!தீமையோ! நமது சாதி கொஞ்சம் முன்னேறி வருகிறது. அது உங்களுக்குப்பிடிக்க வில்லை. ஆனபடியால் தான் மதுவிலக்கு வேண்டும் என்கிறீர்கள் நீங்கள் மதுவை ஒழியுங்கள். காந்தி மகாத்மாவின் பெயரைச் சொல்லிக் கொண்டே எங்கள் வாழ்வைப் பறியுங்கள். நாங்கள் பசிகிடந்து சாகிறோம். தீண்டாமை ஒழிய வேண்டுமென்று மகாத்மா காந்தி சொன்னாரல்லவா? நாம் ஒழிந்து விட்டால் தீண்டாமையும் கொஞ்சம் ஒழிந்து விடும். உங்களுக்கு ஒருகல்லில் இரண்டு மாங்காய். அதே நேரத்தில் 'ஜின்னும்', 'பிரண்டியும்' மருந்துக்கடைகளில் விலைப்படுட்டும் மருந்து என்ற பெயரில்!"

"சைச்சை! இது தவறானவாதம்! அப்படி எண்ணவே கூடாது!"

"பின் எப்படி எண்ணுவது? காந்தியின் பெயரைச் சொல்லி மதுஒழிக்கக் கிளம்பிவிட்டீர்களே, முதலில் தீண்டாமையை ஒழிக்க வேண்டாமா?" என்றது அந்தக் குரல்.

சிவப்பிரகாசம் சிலையாய் விட்டார். இப்படிப் பேசுவார்கள் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை.

வந்தவர்கள் எழுந்தார்கள்.

"நாங்கள் போய்வருகிறோம். சிந்தித்து நல்லதைச்செய்யுங்கள். மதுவிலக்கு அவசியம் வேண்டும்! அதேநேரத்தில் நாம் மகிழ்வுடன் வாழ வேண்டும். இந்த அடிப்படையிலே தொண்டாற்றுங்கள், உங்களுடன் நாமும் சேர்ந்து கொள்கிறோம்" என்று சொல்லி விட்டு நடந்தார்கள்,

*'வெளியே நல்ல நிலவு அங்கே போய்ப் பேசிக் கொள்ளலாம்!' என்று சிவப்பிரகாசம் சொன்னதன் அர்த்தத்தை புரிந்து கொள்ள அவர்களுக்கு அதிக நேரம் செல்லவில்லை.*

~1951

## இலங்கையில் முதல் தமிழ் நாவல்-

*1885ல் சித்தி லெப்பை மரைக்கார் எழுதிய"அசன்பே சரித்திரம்" என்ற நாவல்தான் இலங்கைத்தமிழ் வரலாற்றில் முதல் நாவல்-*

*மிசர் தேசத்து அரசுகுமாரரான அசன்பே என்னும் சிறுவனின் கதை- சித்திலெப்பை தன் புனைக்கதையை "அசன்பேயுடைய கதை" என்ற தலைப்பிலேயே 1885 ஆம் ஆண்டில் கொழும்பில் 'முஸ்லீம் நேசன்' அச்சகத்தில் பதிப்பித்துள்ளார்- பின்னர் இந்நூல் இந்தியாவில் பதிப்பிடப்பட்ட போது 'அசன்பே சரித்திரம்' என மாற்றமடைந்தது.*

*ஒரு நூற்றாண்டின் பத்து நாவல்கள்- அந்தனிஜீவா*

நன்றி- அவுஸ்திரேலியமுரசு தகவல்: ஃபேடினன்ஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நயீராவின் கண்ணீர்க் கதை - அல் மிஸ்கின்

*20 ம் நூற்றாண்டின் கடைசித் தசாப்தத்தின் ஆரம்ப வருடங்கள்.....*

*உலகின் சகலரது கவனத்தையும் ஈர்த்த பகுதி ஈராக்-குவைத். இதுவரை HOLLYWOOD கனவுலக சிற்பிகளாலும் காட்டாத நிஜ அழிவுகளை உலகின் சகல செய்தித் தொடர்புச் சாதனங்கள் வாயிலாகவும் தரிசிக்கமுடிந்தது! ஆம்... அந்த நிகழ்வுகள் நடந்து இரண்டுவருடங்களாகியும் விட்டன.*

*விளையாட்டுகள், இசைவிருந்துகள், நாடுகளின் தேசிய நிகழ்ச்சிகள், சில விழாக்கள், நாட்டுத் தலைவர்களின் சந்திப்புக்கள் என்பவை பற்றி நேரடி ஒளிபரப்புகளையும், வர்ணணைகளையும் அறிந்திருக்கின்றோம்.*

*இவையெல்லாம் நாட்டிற்கு நாடு வேறுபடலாம். ஆனால் உலகின் மூலைமுடுக்கெல்லாம் ஒரே விடயத்தை பற்றியே தொடர்ந்து வெளிப்படுத்தும் சம்பவங்கள் அரியதாகவே கிட்டிடும். அப்படியாக அமைந்த மனிதர்களின் கோர அழிவுகளை வர்ணணையுடன் தரிசித்த நிகழ்வை யாராலும் மறந்திருக்க வாய்ப்பில்லை.*

*வெளியே காட்டப்பட்ட காட்சிப் பதிவுகளின் பின்னேதான் எவ்வளவு உண்மைகள் ! போடப்பட்ட குண்டுகளுடன் எவ்வளவு நிஜங்களும் புதையுண்டிருக்கும்?*

*காலத்திற்குக்காலம் ஜனநாயக மகோன்மியர்களென மார்தட்டி அதன் பாதுகாவலர்களாக தம்மை வெளிப்படுத்தும் வெள்ளை மாளிகைக் கதாநாயகர்களின் மேற்பார்வையுடன் கச்சிதமாக அரங்கெறிய 'அரங்கமில்லாத நாடகம்' பற்றிய உண்மைக்கதை இது.*

---

மூன்றாம் உலகச் செய்திக்குறிப்பு வெளியிட்ட பிரசுரத்திலிருந்து அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகின்றது .

---

இராக் படை வீரர்கள், குவைத் மருத்துவ மனையில் நுழைந்து " இன்குபேட்டரி"ல் இருந்த இளம் சிசுக்களை தூக்கி எப்படி வெளியே எறிந்தார்கள் என்பதையும், அம்மழலைகளை எப்படி கொடூரமாகக் கொன்றார்கள் என்பதையும் நயிராவின் கண்ணீர் நிறைந்த வாக்கு மூலம் விவரித்தது. அதிபர் புஷ், இந்த நிகழ்ச்சியை போரின் தேவைக்கு ஒரு நிரூபணமாகக் காட்டினார்.

ஆனால் இந்த மர்மப் பெண், வேறு யாருமல்ல. அவர் அமெரிக்காவிற்கான குவைத் நாட்டு தூதரின் மகள் தான் என்பதையும் அம்பலப்படுத்தி(நியோர்க் டைம்சில், ஜான் மக்ஆர்தரின் கட்டுரையில் துவங்கி) பல கட்டுரைகள் வெளிவந்தன. அதிலும் குறிப்பாக, பரவலாக பிரசுரிக்கப் பட்ட, குழந்தைகளைக் கொல்லும் இராக்கியர்களைப் பற்றி செய்தி வெறும் கட்டுக் கதைதான் என்பது இப்போது தெளிவாகிவிட்டது. உலகளவில் பெருமளவு விளம்பரமாகிய, பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்த இக்குற்றச்சாட்டு, ஜோடிக்கப்பட்ட ஒரு பொய்க்கதையாகும்.

ஹில் & நோல்டன் நிறுவனத்தின் வல்லுனர்கள் நயிராவின் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர்கள். அவரது வாக்குமூல ஒளிநாடா பரவலாக விநியோகிக்கப்படுமாறு அவர்கள் பார்த்துக் கொண்டனர். இது போன்ற பயங்கரக் கதைகள் மக்கள் மீது ஏற்படுத்தும் விளைவுகளை கவனமாக கண்காணித்தபின், அமெரிக்க மக்களின் உணர்வுகளை தட்டியெழுப்புவதில் இந்த இன்குபேட்டர் கதை மிகவும் முக்கியபங்கு வகிக்கும் என்று அவர்கள் முடிவுக்கு வந்தனர். அவர்கள் நயிராவையும், இராக்கிய அட்டூழியங்களை நேரடியாகக் கண்டதாக கூறிக்கொண்ட சாட்சிகளையும் நன்றாக பயிற்றுவித்ததுடன், அவை அனைத்து தகவல் தொடர்பு சாதனங்கள் வழியே மக்களைச் சென்றடைவதையும் உறுதி செய்து கொண்டனர்.

இராக்கிய அரசு தன் குடிமக்கள் மீதும், குவைத்தினர் உள்ளிட்ட பிறரின் மீதும் பல அட்டூழியங்களை புரிந்துள்ளது என்பதில் எந்தச் சந்தேகமும் கிடையாது. சமீபகாலம் வரை நண்பராக இருந்த'சதாம் ஹுசேன்' "பாக்தாத்தின் கசாப்புக் கடைக்காரர்" என வெள்ளைமாளிகையில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும் வரை, இதே அரசு செய்த கொடுமைகளைப்பற்றி அமெரிக்க தகவல் சாதனங்கள் எவ்வளவு தூரம் ஆர்வம் காட்டின என்பதும், ஹில் & நோல்டன் ஊழல் கிளப்பிவிட்டிருக்கிற விவாதத்திலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதை வெளிப்படுத்துவதிலும் அவை எவ்வளவு ஈடுபாடு செலுத்தின என்பதும் வெளிப்படையாகத் தெரிந்த விஷயங்கள் எனினும் வியப்பிற்குரியவையே.

அதிகம் பிரலப்படுத்தப்படாத மத்திய கிழக்கு தொடர்பான மற்றொரு கதையும் உண்டு. இராக்கிற்கு எதிராக அமெரிக்கா நடத்திய போரில் இறந்த இராக்கியர்களின் எண்ணிக்கை குறித்து, ஒரு இளம்அறிஞரின் கணக்கெடுப்பு புஷ் நிர்வாகத்தை சங்கடப்படுத்தியது. இதைத் தொடர்ந்து அவரைத் தூக்கியெறிய மார்ச் மாதம் அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை முயன்றது. வெளிப்படையான காரணங்களுக்காக, அமெரிக்க நிர்வாகம், இராக்கிய இழப்புக்கள் பற்றி பேச மறுத்து வந்ததுடன், இப்பிரச்சனை மீதான பொதுவிவாதம் எதுவும் உருவாகாமல் பார்த்துக் கொண்டது. எனவே தான் 1 3000 பொதுமக்களும், 40 000 இராக் படையினரும் போரில் கொல்லப்பட்டதாக, தனது கணிப்புகளை ஒரு நிருபருக்கு செல்வி. பெத் ஒஸ் போர்னே தபோந்த் அறிவித்த போது அவரது தலைமை அதிகாரிகள் மகிழ்ச்சி அடையவில்லை.

மேலும், இராக்கிய நீர் நிலைகளையும், மின் அமைப்புக்களையும் தகர்த்தெறிந்த குண்டுவீச்சுகளின் விளைவாக 70 000 குடிமக்கள் இறந்தனர் என்றும், பாத் ஆட்சியை எதிர்த்து நடந்த உள்நாட்டு கலகத்திற்கு பிந்தைய எழுச்சிகளின் போது அரசபடையினரால் மேலும் 3500 பேர் கொல்லப்பட்டனர் என்றும் அவர் கூறினார். இப்படியாக இறந்த மொத்த 1 58 000 பேரில், சுமார் 32 000 பேர், அதாவது 20% குழந்தைகள்.

அவதூறைக் குறைத்துக் காட்டும் முகமாக கணக்கெடுப்புத் துறை, வேறொரு கணிப்பின் மூலம், இறந்த எண்ணிக்கை மொத்தமாக வெறும் 5000 தான் என்ற முடிவிற்கு வந்தது. தபோந்தை நீக்குவதன் மூலமாக பிற ஊழியர்களுக்கு எச்சரிக்கை விடுவதற்கு, அத்துறை முயன்றது. தபோந்த், கணக்கெடுப்புத் துறையின் வழக்கமான ஆய்வுகளை பின்பற்றவில்லை என்று அது கூறிக்கொண்டது. ஆனால் தபோந்த் துறையின் பிற மதிப்பீடுகள் உட்படுத்தப்படும் அதே ஆய்வுகளுக்கு தமது கணிப்பீட்டையும் உட்படுத்தியதாக வலியுறுத்துகிறார்.

குறிப்பு:-

Third World Network Features
மூன்றாம் உலக ஒருங்கிணைப்பின் செய்தித் தொகுப்பு
No 306/6 Belly area, MADRAS 600040, INDIA

## வேண்டுதல்

- கிறிஸ்டின் -

*உன்னைச் சுட்டெரிப்பதாய் நீ உணரும்போது*
*நான் முறைப்புடன் பார்க்கவில்லை*
*பற்களை நறநறவென்று கடிப்பதையும்*
*முஷ்டியை ஓங்கி தரையின்மீது*
*அடிக்கடி குத்திக்கொள்வதையும்*
*இனி இருட்டிலேயே வைத்துக்கொள்கிறேன்*
*உனது செவிகளும் கிரகிக்கமுடியாதபடி*
*உன்னைப்பற்றி ஒரு வார்த்தையேனும்*
*நான் உச்சரிக்கப் போவதில்லை*
*மௌனம் கொள்வேன்*
*என்மௌனம் புயலாக - எதுவாகவேனும் மாறும்வரை*
*மௌனம் கொள்வேன்*
*ஆயினும்.....*
*என்னை ஆட்கொண்டு அழுத்தும் கண்ணீர்*
*கரைவதாய் நான் உணர*
*என் வேதனை சொட்டுச் சொட்டாய்*
*தீர்ந்து கொண்டிருப்பதாய் நான் உணர*
*ஒரு கணமேனும் அழவிடு*
*என்னை*
*கதறிக்கதறி கதறிக்கதறி*
*அழவிடு.*

நன்றி:- ஆகவே

**தோன்றி வளர்ந்து சிதைந்து அழிந்து மறுபடியும் மறுபடியும் புதியன தோன்றும் 'ஆகவே' எந்தவொரு வாய்ப்பாடுகளுக்குள்ளும் தன்னை சிறைப்படுத்திக் கொள்ளாது அவ்வப் போதைய கலைஇலக்கிய போக்குகளை உள்வாங்கி நகரும் எனக்கூறும் "ஆகவே" தொடர்புக்கு;**

***M.I.A.JABBAR***
***71, Rajawarodhayam Road, TRINCOMALEE, SRILANKA.***

### யாழ்

### கு
### ஞ்
### சரம்

***தேசத்தின் எல்லை குறுகி வீட்டுவாசல்வரை வந்துவிட்டது என்பது இப்போதும் வெறும் கவிதைவரியாக இல்லை.***

***எனினும் கம்பன் விழாக்களும், பட்டிமன்றங்களும், கோயில் திருவிழாக்களுக்கும் குறைவில்லை. போதாக் குறைக்கு நாடகம்,நாட்டியம், நடனம், மிருதங்கம் என்று பல்வேறு அரங்கேற்றங்கள், பொருட்கள் பண்டங்கள் விலைஉயர்வு பற்றி நான் எழுதத்தேவையில்லை.***

***இத்தனைக்கும் மத்தியில், இங்கொரு மக்கள் கூட்டம் வாழ்கின்றனர் என்பது அதிசயந்தான்!***

***அவர்களது அடிப்படை நம்பிக்கைகள் என்ன என்பது தொடர்பான ஆராய்ச்சியில் என் எண்ணமும் இப்போது செல்கின்றது.....***

**(இப்படித் தொடர்கின்றது யாழ்ப்பாணக் கடிதமொன்று...)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"அமெரிக்காவை கொலம்பஸ் கண்டுபிடித்தான்" என்றே எமது பாடப்புத்தகங்களில் இருந்து கற்றுக் கொண்டோம். ஆனால் வடதுருவத்தில் இருந்து தென்துருவம் வரைக்கும், ஆசியாவுக்கு கிழக்கே பசுபிக்மாகடலுக்கு அப்பாலும், ஐரோப்பாவுக்கு மேற்கே அத்திலாந்திக் மாகடலுக்கு அப்பாலும், நீண்டுகிடந்த அந்த நிலப்பரப்பு, 1492ம் ஆண்டு கடலோடி கொலம்பஸ் கண்டுபிடிக்கும் வரை மனித சஞ்சாரமற்ற தரிசுநிலமாய், கன்னிநிலமாய் இருக்கவில்லை. புதிய உலகமான அமெரிக்காவை கண்டுபிடித்த 500ம் ஆண்டு கொண்டாட்டங்கள் நடைபெற்று வரும் வேளையில் கிறிஸ்தோபர் கொலம்பஸின், வாழ்க்கைச் சித்திரம் கார்ட்டூன் படங்களாக தொலைக்காட்சியில் வலம்வரும் வேளையில், உண்மைகளை நாமும் அறிந்து கொள்வோம்.



செவ்விந்தியர்களின் பூமிக்கு...

# 'ஒட்டகம் நுழைந்த கூடாரம்' கதை தான் கொலம்பஸின் வருகை!

● 1492 இல் அமெரிக்க கண்டத்தில் 1500 முதல் 2000 வகையான மொழிகளை பேசிய பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள் தங்கள் குடியிருப்பிடங்களை கொண்டிருந் தனர். பரந்த பண்பாட்டு மண்டலங்கள் முழுவதிலுமாக அவர்கள் சிதறிக்கிடந்தனர். அம் மண்டலங்களில் பல் வகை உயிரினங்களும் சமூக அமைப்புக்களும் இருந்தன.

இம் மக்கள் 16 000 கிலோமீட்டர் நீண்டுகிடந்த அமெரிக் காவின் பரந்த பெரும் நிலப்பரப்பின் மீது ஆதிக்கஞ் செலுத்த முடியவில்லை என்பது தெளிவானதே. அவ் வாறிருந்தும் நெடுந்தொலைவுகளை அவர்கள் கடக்க முடிந்திருப்பதாக தோன்றுகின்றது.

2 முதல் 2.5 கோடிமக்கள் மெக்சிக்கோவின் நடுப்பகுதி மேட்டுநிலத்தில் வாழ்ந்தனர். 1 முதல் 1.2 கோடி வரை யிலான மக்கள் இன்கா பேரரசின் குடிமக்களாக விளங் கினர்.

---

யுனெஸ்கோ கூரியர் ஜுலை 1992ம் இதழில் வெளிவந்த கட்டுரைகளில் இருந்து குறிப்புக்களாக தொகுத்து தரு பவர் குணா கலைதாஸ்

---

● நடு அமெரிக்காவில் சிறப்புடன் விளங்கிய மாயர்க ளின் பேரரசு கி.பி 250 க்கும், 900 க்குமிடையே பண் டைய கிரேக்க, ரோம பேரரசு காலத்தின் போது தன் அதிகாரத்தின் உச்சநிலையில் இருந்தது. மிகப் பெரும் நகரங்கள் கட்டப்பட்டன. இந்த நகரங்களின் கட்டிடக் கலை, புன்படைப்பியல் சிற்பங்கள், சுவர்கோல ஓவியங் கள் என்பவை குறிப்பிடத்தக்கவையாக இருந்தன. அதே காலத்தில் வான் ஆராய்ச்சி, கணிதம், ஆண்டு, நாள், நாழிகை கணக்குகள், மறைபொருள் குறியீடு, புனித எழுத்து வடிவமுறை ஆகியவை பேணிவளர்க்கப்பட் டன.

● ஆந்தீஸ் இன்காக்களையும், ஐமராக்களையும் போல, ஆஸ்டெக்கர்களும், மாயர்களும் மற்ற மெசோ- அமெரிக் கர்களும் திருந்திய தொன்மை நாகரிகங்களின் வழித் தோன்றல்களே. அவர்களின் பண்பாட்டு தாக்கம் கண் டத்தின் பெரும் பகுதியில் பரவியிருந்தது. அவர்கள் அனைவருமே பொதுவான கூறுகளை பெற்றிருந்தனர். அவர்கள் ஆழமாக சமயஉணர்வில் தோய்ந்தவர்களாக இருந்தனர். அவர்கள் தம் மண்ணை தாய்மையின் அடையாளமாக கருதியதால் அதன் மீது அதீத அன்பு செலுத்தினர். எல்லா உயிர்களுக்கும் ஆதாரமாகவும், ஒளியையும், இதத்தையும் வீசுகின்ற தந்தையின் அடை யாளமாக சூரியனை வணங்கினர். தொன்மை மாட்சியை மெய்யறிவின் கருவூலமாக கருதி முதியவர்களை அவர் கள் மதித்தனர். இயற்கையுடனும், அதன் அனைத்து உயிர்களுடனும், அவை தாவரங்களாயினும், விலங்குக ளாயினும், மலைகளும்-ஆறுகளும்-ஏரிகளும்- கடலுமா யினும் அவற்றுடன் முற்றிலும் இணைந்து வாழவே முயன்றனர்.

● மெசோ-அமெரிக்கா அல்லது செமனாஹுலாக், அரண்மனைகளும் கோயில்களும், நினைவுச்சின்னங்க ளும், ஓவியங்களும், பொறிப்புக்களும், எழுதுவதற்காக பாடஞ்செய்யப்பட்ட அத்திமரப்பட்டையில் அல்லது மான்தோலில் நூல்கள் எழுதப்பட்ட பள்ளிகளும் வள மாக நிறைந்திருந்த பெருநகரங்களை கொண்டதாக ஆயிரக்கணக்கான ஆண்டு பெருமைகொண்ட ஒரு நாகரிகத்தின் தொட்டிலாக இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப் பெருநகரங்களுடன் இரண்டுகோடி சதுரகிலோமீட்டருக்கும் மேற்பட்ட இந்த மண்டலத்தில் பல்வேறு அரசுகள் செழித்தோங்கின. அவை ஒவ்வொன்றும் உண்மையிலேயே தனக்கேயுரிய அரசியல் பொருளியல் சமயவியல் மையங்களை கொண்டிருந்த ஒரு பேரரசாகவே இருந்தது.

மெசோ-அமெரிக்கர்கள் தனிச்சிறப்பு வாய்ந்த வேளாண்மையாளர்களாக இருந்தனர். 7000 ஆண்டுகளுக்கு முன்பே மக்காச்சோளத்தை வீட்டு பயன்பாட்டுக்குரிய தாக்கியதோடு அதைப்பெரும்பாலும் எல்லா மண்டலத்திற்கும் தட்பவெப்பநிலைக்கேற்ப பழக்கப்படுத்தவும் செய்தனர். ஆனால் சோளம் மட்டும்தான் உலகிற்கு அவர்கள் அளித்த ஒரே ஒரு கொடை என்பதன்று. தென்னையும், நிலக்கடலையும், மரவள்ளிக்கிழங்கும், தக்காளியும், மிளகாயும், புகையிலையும், பல்வேறு சுரைக் கொடிகளும், பருத்தியும், தார்பூசணி, பப்பாளி, பெரிய பேரிக்காய், கொய்யா, மஞ்சள்ஆப்பிள் போன்ற பழவகைளும் மெசோ-அமெரிக்காவிலிருந்தும், கரீபியனில் இருந்தும் வந்தவைதான்.

● அஸ்டெக் நிலங்களுக்கு வடக்கே மற்றபல தொகுதியினர் பெருஞ்சமவெளிகளில் ஆறுகளுக்கும், ஏரிகளுக்கும் அருகில் அல்லது இரு பெருங்கடல்களின் கடலோரங்களில் வாழ்ந்து வந்தனர். இந்த "இந்தியர்கள்" அக்கண்டத்தின் தெற்குப்பகுதியில் இருந்தவர்களை விடவும் எண்ணிக்கையில் குறைவானவர்களே.

அவர்கள் தற்போது எது கனடாவாகவும், அலாஸ்காவாகவும் உள்ளதோ அந்த இடத்தின் உறைபனிப்பிராந்தியத்தில் இருந்து கலிபோர்னியா, அரிசோனா ஆகிய கடும்வெப்பபாலைவனங்கள் வரையிலும், எல்லாவித தட்பவெப்ப நிலைக்கும் வாழ்வைமாற்றி அமைத்து சமாளித்து வந்தனர். இன்றைய இனூயிட் (எக்சிமோக்கள்) அத்தபாஸ்கான்கள், ரோகுயோரிக்கள், அல்கான்குயின்கள் ஆகிய பனிப்பிரதேச பழங்குடிகள் அனைவருமே இம் மக்களின் வழிவந்தோரே. இவர்கள் பதினைந்



கோடக்ஸ் 'புளோரண்டினோ' என்ற நூலின் 16ஆம் நூற்றாண்டுப் பதிப்பில் சித்திரிக்கப்பட்டுள்ள நண்டக்கிழங்கு

* செவ்விந்தியர்
* ஆபிரிக்க கறுப்பர்
* அமெரிக்கர்.

கொலம்பஸை ஒரு சாகசவாதியாக, வீரனாக, அமெரிக்காவைக் கண்டுபிடித்தவனாகக் காட்டிவந்த மேனாட்டு வரலாற்றாசிரியர்களின் கட்டுக்கதைகள் ஒவ்வொன்றாக தகர்க்கப்பட்டு விட்டன. அதற்கு முக்கிய காரணிகளாக இருந்தவை அவனே எழுதி வைத்த குறிப்புகள், ஓவெய்டோ, பேன்ஸோனி போன்றவர்களின் வரலாற்றுக்குறிப்புக்கள், எல்லாவற்றுக்கும் மேலாக பார்த்தலோமியோ டி வா காஸாஸ் ( *Bartalomeo De La Casas* ) என்ற கிறிஸ்துவப் பாதிரியார் எழுதிய நூல் ஆகியவையாகும். அந்தப் பாதிரியார் தான் கொலம்பஸூம் பிற ஸ்பானியர்களும் இழைத்த கொடுமைகளைப் பதிவு செய்து வரலாற்றிடம் ஒப்படைத்துச் சென்றிருக்கிறார். எனவே அவரைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்வது இன்றியமையாதது.

கத்தோலிக்கச் சமயத்தின் டொமினிகன் சபையைச் சேர்ந்த லா காஸாஸ், 1502 ஆம் ஆண்டு முதன்முதலாக ஹிஸ்பானியோலாவுக்குச் சென்றார். அத்தீவின் ஆளுநராக நியமிக்கப்பட்ட ஓவாண்டோவுடன் அவர் அங்கு சென்று கிறிஸ்துவ மதத்தை செவ்விந்தியர்களிடம் பரப்புவது அவரது நோக்கம். அங்கு அவருக்கு நிலம் மானியமாகக் கிடைத்தது. செவ்விந்திய அடிமைகளை வைத்துக் கொள்ளும் உரிமையும் தரப்பட்டது. அங்கு ஸ்பானியர்கள்செவ்விந்தியர்களுக்கு இழைத்த கொடுமைகளையும் அநீதிகளையும் கண்டு கண்ணீர் வடித்த அவர், 1514 ஆம் ஆண்டில் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த தங்கச் சுரங்கங்கள், நிலங்கள், ஆகியவற்றைத் துறந்து தன்னிடம் வேலை பார்த்து வந்த அடிமைகளை விடுதலை செய்தார். 1515 முதல் நான்கு முறை அவர் ஹிஸ்பானியோலாவுக்கும் ஸ்பெயினுக்குமாகப் பயணம் செய்து இந்தியர்கள் சார்பில் முடிமன்னனிடமும் அவனது அரசவையினரிடமும் முறையீடு செய்தார். 1555 ஆம் ஆண்டு ஸ்பெயின் அரசனிடம், 'புதிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாம் நூற்றாண்டின் இறுதியாண்டுகளில் இருந்தே (கொலம்பஸின் வருகையின் பின்) ஸ்பானியர்களினதும், அதற்குபின் ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், டச்சுக்காரர் ஆகியோரின் அத்துமீறலை, ஆக்கிரமிப்பை பொறுத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர்.

● 'பகலைப் போன்றே அவர்கள் அம்மணமாக பிறந்தனர். கட்டமைப்பான உடல்களுடனும், எழில்மிகு முகங்களுடனும், குதிரையின் பிடரி போன்ற அடர்த்தியான ஆனால் வெட்டப்பட்ட தலைமுடியுடனும் கூடிய அழகிய ஆண்கள் வெள்ளையாக இல்லை; கருப்பாகவும் இல்லை'. இவ்வாறு தான் குவானாஹனி தீவில் தம்மை சந்திக்கவந்த உள்ளூர் மக்களைப் பற்றி தன் கடற்பயண முதற்கட்டத்தில் கிறிஸ்தோபர் கொலம்பஸ் விவரித்துள்ளார். அத்தீவுக்கு அவர் சான் சல்வடார் எனப் பெயரிட்டார். இந்தியத் தீவுகளை தாம் நெருங்கிவிட்டதாக நிறைவுற அறிந்ததும்; அவர் அவர்களை "இந்தியர்கள்" என்றே வழங்கினார்.

● 'ஈடன் தோட்டம்' என்ற புகழ்ந்துரையில் ஐரோப்பிய களஞ்சியங்களை நிறைக்க புதிய உலகின் தங்கவளம் சுரண்டப்படுகின்றது என்ற உண்மை கறுப்பர் புனைந்துரையில் புதைந்து கிடந்தது. "ஐரோப்பாவின் வாணிப ஆதிக்கத்துக்கு இந்தத் தங்கமே ஆதாரம். வாணிக மனப் போக்கினை உருவாக்கியதும் இந்தத் தங்கம் தான். லயான்ஸ், அண்ட்வேர்ப், அம்ஸ்டர்டாம், ஃபிராங்பர்ட், செவில் போன்ற இடங்களில் வங்கிகளும் பங்குமாற்று அங்காடிகளும் நிறுவப்படுவதற்கும் இத்தங்கமே காரணமாக அமைந்தது. ஐரோப்பாவின் தலைவிதியையே மாற்றி அமைத்த தீவிரவாணிப மற்றும் தொழில் முனைவு நடவடிக்கைகளுக்கும், இத்தங்கமே காரணமாயிற்று. இத் தங்கத்தையும் வெள்ளியையும் தோண்டியெடுப்பதில் செவ்விந்தியர்கள் பெருமளவில் கொல்லப்பட்டதை மக்கள் கண்களில் இருந்து மறைக்கப்பட்டு விட்டது.

● 1492 இல் இரண்டு உலகங்களும் தொடர்பு கொண்ட போது அவர்கள் எவ்வளவு தொகையினராக இருந்தார்கள் என்பது சரியாக தெரியவில்லை. ஆயினும் அவ்வேளைகளில் இருந்த அமெரிந்தியர்களின் எண்ணிக்கையை பல கோடி என புள்ளிவிபரம் குறிப்பிடுகின்றது. உறுதியாக எது தெரிகின்றதெனில், அந்நியர் ஆக்கிரமிப்பாலும், பண்பாட்டு நிலைகுலைவினாலும், அதற்குமுன் அறிந்திராத நோய்கள் பரவியதாலும் அமெரிந்திய மக்கள் தொகையை பத்திலொரு பங்காக குறைத்து விட்டது. ஆனால் அவர்கள் ஒரேயடியாக அகற்றிவிடப்படவில்லை. அவர்களின் வழித்தோன்றல்கள் தங்கள் பண்பாடுகளையும், மொழிகளையும் உயிரோடு வைத்திருப்பதற்காக தீவிரமாக இன்னும் போரிட்டுக் கொண்டுதானிருக்கின்றனர்.

இன்றைய அமெரிக்காவில், 500 ஆண்டுகளின் பின் தங்கள் படைப்புதிறனின் வலிமைக்கும் தங்கள் விடா உறுதிக்கும், தங்கள் வீரத்திற்கும் நடமாடும் சான்றாக அமெரிந்திய கால்வழியினர் நாற்பதுலட்சம் மக்கள் உள்ளனர்.

* செவ்விந்தியர் * ஆபிரிக்க கறுப்பர் * அமெரிக்கர்.

உலகத்தி`லுள்ள அவனது சாம்ராஜ்யத்தைத் துறந்துவிடுமாறும் இந்தியர்களை அந்தக் கொடூரமான அதிகாரத்திலிருந்து விடுவித்து அவர்களுக்கு சுதந்திரம் கொடுக்குமாறும் வற்புறுத்தினார். இந்தியர்கள் அழிக்கப்பட்டது குறித்த சுருக்கமான வரலாறு, "இந்தியர்களை ஒழித்துக் கட்டிய கொள்ளை நோய்க்கு எதிரான பதினாறு நிவாரணங்கள் குறித்து" ஆகிய நூல்களை எழுதி கொலம்பஸ் போன்றவர்களும், ஸ்பானிய அரசும் இழைத்த குற்றங்களைப் பதிவு செய்தார். ஆனால் 1520 இல் அவர் முன்வைத்த ஒரு ஆலோசனை மற்றொரு பேரழிவுக்கு இட்டுச் சென்றது. மேற்கிந்தியத் தீவுகளில் ஸ்பானியர்கள் ஆக்கிரமித்துக் கொண்ட நிலங்களில் கொத்தடிமைகளாக உழைக்குமாறு செய்யப்பட்ட செவ்விந்தியர்கள் வெகு சீக்கிரத்தில் மடிந்து விடுவதைக் கண்டு வருந்திய லா காஸாஸ், மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள தட்பவெப்பநிலைக்கு ஈடுகொடுத்துக் கடுமையாக உழைக்கக் கூடியவர்கள் ஆப்பிரிக்கர்கள் என்பதால் அவர்களை அங்கு வரவழைக்கலாம் என்று கூறினார். அதன்படியே ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகள் கொண்டு வரப்படுவது தொடங்கியது. அதற்கு முன்பே அடிமைமுறை, அடிமை வாணிபம் ஆகியன உலகில் இருந்திருக்கின்றன. ஆனால் ஆப்பிரிக்கக் கறுப்பர்கள், செவ்விந்தியர்கள் போன்ற சில இனத்தவர்கள் அடிமைகளாக இருப்பதற்குத் தான் தகுதியானவர்கள் என்ற இனவாதச் சித்தாந்தத்தை முதலில் உருவாக்கியவன் கொலம்பஸ்தான்.

ஆப்பிரிக்காவிலிருந்து ஏராளமான அடிமைகள் போர்த்துக்கீசிய வணிகர்களால் ஸ்பெயினுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து அவர்கள் மேற்கிந்தியத் தீவுகளுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களது குருதியால் விளைந்த கரும்புகளிலிருந்து கிடைத்த சர்க்கரை ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டது. பின்னர் ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகளை நேரடியாக அனுப்பும் வழக்கம் தொடங்கியது. தனது ஆலோசனையால் ஏற்பட்ட தீய விளைவுகளைக் கண்டுணர்ந்த லாஸ் காஸாஸ் மேற்கிந்தியத் தீவுகள் பற்றி சுருக்கமான வரலாற்றில் தன்னைத் தானே நொந்து கொள்கிறார். "செவ்விந்தியர்களுக்குள்ள உரிமைகளைப் போன்றவைதானே கறுப்பின மக்களுக்குள்ள உரிமைகளும்" என்பதைத் தான் உணராமல் போனதற்காக மனம் வெதும்புகிறார். அவரைப் போன்ற நல்ல உள்ளங்களைப் பொருட்படுத்தாது காலனியாதிக்கம் தனது வெற்றிச் சுழலுக்குள் முப்பெருங் கண்டங்களையும் இழுத்துக் கொண்டு வந்துவிட்டது. இன்று நவகாலனியமாகத் தொடர்ந்து நீடிக்கிறது. 1992 அக்டோபர் 12 ஆம் திகதியன்று தனது ஐநூறாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறது.

*எஸ்.வி.இராஜதுரை ( கொலம்பஸின் வெறியாட்டம் கட்டுரையிலிருந்து....)*
சுபமங்களா நவம்92 இதழிலிருந்து நன்றியுடன் மறுபிரசுரமாகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## - குவாத்தமாலா -

' கிறிஸ்தோபர்- கொலம்பஸ் அத்திலாண்டிக் பெருங்கடலைக்கடந்த பின்னான 500 வருடங்களாக நாங்கள் கொடுமைகளையே அனுபவித்து வருகிறோம்' என்கிறார் நோபல் பரிசு பெற்ற (1992) குவாத்தமாலாவின் மக்கள் தலைவி செல்வி ரிகோபெர்டா மெஞ்சு.

குவாத்தமாலா பழங்குடி செவ்விந்தியரின் போராட்டம் முப்பதுவருடங்களுக்கு மேலாகத் தொடரப்பட்டு வருகிறது. மொத்த குடிசனத் தொகையில் 55% மானவர் செவ்விந்தியர். இந்த நீண்ட இனஅழிப்புப் போரில் லட்சம் பேருக்குமேல் பலியாகியும், ஊனமுற்றும் போயுள்ளனர்- சில லட்சங்கள் அண்டைநாடுகளுக்கு குறிப்பாக மெக்சிக்கோவுக்கு புலம்பெயர்ந்து விட்டனர்.

தென் ஆபிரிக்கா போன்றே குடியேறிய சிறுபான்மை வெள்ளையர் நடாத்தும் கொடூர இராணுவ ஆட்சியில் அழிவுறும் பூர்வ குடிகளைக் கொண்ட நாடு குவாத்தமாலா.

உலகச்சந்தைக்கு கோப்பி, பருத்தி, வாழைப்பழம், சீனி, உணவுஎண்ணை, புகையிலை போன்ற பொருட்களை வழங்கும் நாடு குவாத்தமாலா என்றால் வியப்பாக இருக்கலாம்!

1523-24 களில் செவ்விந்தியர்களின் இந்நாட்டை ஸ்பெயின் காலனியாக்கியது. 1821ல் சுதந்திர நாடாகிய மத்திய அமெரிக்க கூட்டமைப்பு நாடுகளின் மையமாகத் திகழ்ந்தது. 1839ல் தனித்துவமான சுதந்திரநாடாகியது. 19ம், 20ம் நூற்றாண்டுகளில் இயல்பான பொருளாதார புனரமைப்புகளுடன் சுயாதீனமாக இயங்கியது.

பழைமைவாத இராணுவச்சதி 1954ல் U.S. இராணுவ ஒத்துழைப்புடன் நிகழ்ந்து பழங்குடி மக்களின் உணர்வுகளுக்கு சாவுமணி அடித்தது. தொடர்ந்தும் இவ்வகையான U.S.ஆதரவு பொம்மை ஜனநாயக(!) ஆட்சியாளர்களே குவாத்தமாலாவின் சிம்மாசனத்தினை அலங்கரிக்கிறார்கள். இந்த இடைப்பட்ட காலகட்டத்தில் குவாத்தமாலாவின் பூர்வகுடியினரின் எழுச்சிப்போராட்டம் படிமுறையாக வளர்ந்து மேலெழுந்துள்ளதைக் காணலாம்.

தகவல்:- ஃபேடினன்ஸ்

## எப்படிப் போவது?

மழை என்றால்
ஒரு தொப்பியை,
வசதியென்றால்
குடையொன்றை,
மழையோடு
குளிருமென்றால்
கழுத்தை சுத்தி
துணியொன்றை,
காலுக்கு சப்பாத்தும்
கோட்டும் போட்டு
பள்ளிக்கு
செல்லலாம்
தம்பியோடும்
தங்கையோடும்.

குண்டு விழும்
"செல்" துளைத்த
தெருக்களில்,
விசக் கத்தியை
துவக்கு முனையில்
செருகிக் கொண்டு
திரியும்
அவர்களை கடந்து
எப்படிப் போவது
எம்
குழந்தைகள்

என் தேசத்தில்
பள்ளி திறக்க
புதுப்பாடம்
தொடங்க.....

நாகதிலகன் (சுவிஸ்)
01-01-1993





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செவிவழிக்கதை

# புதுமை - அநாமிகன்

ராஜபுரி என்ற வளமான நாடு. வினோதவர்மன் என்ற அரசன் அரசோச்சிய காலம். பெயருக்கேற்பவே புதுமைகளை செய்ய நாட்டங்கொண்ட தலைமகன். இதனாலோ என்னவோ அவன் பெயர் காரணப் பெயராகவே அமைந்துவிட்டது!

வினோதங்களில் தான் எத்தனை வகைகள்! அதில் இவ்வரசன் ஆடைவிநோதங்களில் தனி நாட்டங் கொண்டிருந்தான். 'அரசன் எவ்வழி மக்கள் அவ்வழி'. கேட்கவா வேண்டும்? வித்தியாசமான ஆடைகளை அணிவதிலும்- அறிமுகம் செய்து பிரபல்யப்படுத்துவதிலும் ராஜபுரி சுற்றியுள்ள சிற்றரசுக்களிலும், பேரரசுகளிலும் அதிகம் பேசப்பட்டு வந்தது.

புதிய ஆடை அறிமுகங்கள் செய்து பரிசுகள் பெறவும், இதனை வேடிக்கை காணவும் மக்கள் கூட்டம் அலைமோதின. ராஜபுரியின் அரண்மனையில் தினமும் இதே வேலையாகிவிட்டது. சாதாரண ராஜபணிகள் தடைப்பட்டன. வினோதவர்மனுக்கும், அரசி வினோதினிக்கும் இப்பிரச்சனையைத் தீர்க்க வழிதெரியவில்லை. மந்திரி மதிதூதனன் அழைக்கப்பட்டு ஆலோசனை கோரினார் அரசர்.

மதிதூதனன் தன் அறிவின் பால் கர்வம் கொண்டவர். ராஜாவுக்கும், ராணிக்கும் புதியதும், இதுவரை அறியப்படாததுமான புதுமையான ஆடையை அறிமுகம் செய்பவருக்கு பரிசு 1000 பொற்காசுகள் என்றும், ஆனால் ஏற்கனவே அறியப்பட்ட ஆடையைக் காட்டுபவர் சிறை செய்யப்படுவார் என்றும் புதிய விதிமுறையை மந்திரி மதிதூதனன் வகுத்தார்.

புதிய நடைமுறை பற்றி ராஜபுரியிலும், சுற்றியுள்ள ஊர்களிலும் பறை சாற்றப்பட்டது. மக்கள் திகைத்துவிட்டனர்! கூட்டம் திடீரென்று தடைப்பட்டு விட்டது. அங்கொன்றும் இங்கொன்றுமாக வருபவர்களும் சிறை சென்றனர். நாடு அமைதியாகிவிட்டது.

சுமார் 6 மாத இடைவெளியின்பின் இரு நாடோடிகள் ராஜபுரி அரண்மனைனயில் நுழைந்தனர். தாம் இதுவரையில் அறியாத புதுமையான ஆடையைத் தயாரித்துத் தருருவதாகவும் அதற்கு தயாரிப்புக்காலம் ஒரு மாதமும், தனிமையான இடமும் வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தனர். ராஜாவும், ராணியும் ஆவலுடன் ஆவன செய்வதாக வாக்களித்தனர்.

நீண்டகாலத்தின்பின் ஏற்பட்ட 'புதுமை' என்பதால் அரண்மனை முழுவதுமே ஆவல் பொங்கியது. நாடோடிகளும் வித்தியாசமாகவே நடந்து கொண்டனர். பிறகென்ன ஊர்முழுவதும் செய்தி பரவியது. நாடோடிகளுக்கான வீட்டின் வெளியே மக்கள்கூடி அதிசயம் பற்றி ஏதோ சொல்லி செல்வதும், கலைவதுமாக ராஜபுரி மீண்டும் களைகட்டியது. தையல் இயந்திரத்தின் ஒலி அந்த வீட்டிற்கு வெளியே செல்வோரின் செவிகளுக்கு ஏதோ புதுமையைச் சொல்வதாக கிளுகிளுப்பூட்டின.

அரண்மனையில், மந்திரியின் மனம் தடுமாறியது. விநோத உடையை எப்படியாவது முன்கூட்டியே அறியவேண்டுமென்று மனம் உந்தியது. ஒருநாள் நாடோடிகளின் விருந்தினர் மாளிகைக்கு சென்றார் மந்திரி- உள்ளே சென்ற மந்திரியைக் கவனியாதவாறு நாடோடிகள் இருவரும் தீவிரமாக தையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

தையல் நடந்தபோதும் 'சட்டையை' மந்திரிக்கு காணமுடியவில்லை. குழப்பத்துடன் மந்திரி 'என்னப்பா ஏதுமே தெரியவில்லையே?' எனக் கேட்டுவிட்டார்.

அப்போதுதான் நிமிர்ந்து பார்த்த நாடோடிகளில் ஒருவன் மந்திரியைப் பார்த்து புன்சிரிப்புடன் வரவேற்றுவிட்டு, 'எமது ஆடை அறிவாளிகளின் கண்களுக்கே தெரியும்' என்றான்.

அதிர்ச்சியுற்ற மந்திரி சங்கடத்துடன் ஒருவாறு சமாளித்துவிட்டு, 'ஆடை மிகவும் நன்றாக எடுப்பாக புதுமையாக இருப்பதாக' ஓகோவென புகழ ஆரம்பித்து விட்டார்.

மந்திரி சும்மா இருக்கவில்லை. ராஜசபையில் வந்து புதிய ஆடைபற்றி ஓகோவென புகழத் தொடங்கி விட்டார். 'இவ்வாடை அறிவாளிகளுக்கு மட்டுமே தெரியும்'என்ற தகவலைச்சொல்லி 'ராஜா இதுவரை காணாத புதிய ஆடையைப் பெறப்போகின்றார் என்பதையிட்டு தான் பெருமிதம் கொள்வதாக' மார்தட்டினார்.

ராஜாவுக்கும், ராணிக்கும் இருப்புக் கொள்ளவில்லை. ராணியிடம் சொல்லிவிட்டு ராஜா விருந்தினர் மாளிகைக்கு ரகசியமாகச் சென்றார். வழமைபோல் ஆடைதயாரிப்பு வேலைகளில் நாடோடிகள் மும்முரமாக இருந்தனர்.

சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்த ராஜாவுக்கு எதுவுமே தெரியவில்லை. ஐயோ பாவம்! தன் அறியாமையை எண்ணி ராஜா வருந்தினார். மந்திரிக்கு தன்னைவிட அறிவு அதிகமுள்ளதை ராஜாவால் ஒத்துக் கொள்ளமுடியாதே! ஒருவாறு தன்னிலைமையைப் புரிந்த ராஜா ஆடையை பார்த்ததாக கூறி நாடோடிகளைப் பாராட்டினார்.

அற்புதமான ஆடைஎன்று ராஜாவே வர்ணித்தபின் நாடோடிகள் பெரிதும் மகிழ்ந்தனர்.

அரண்மனை திரும்பியதும் ராணிஉட்பட அனைவருக்குமே புதிய ஆடைபற்றி ஓகோவென்று ராஜா புகழ்ந்து தள்ளினார். தகவல் காட்டுத்தீபோல் சுற்றியுள்ள ஊரெல்லாம் பரவியது.

அரண்மனையைச்சுற்றி கூட்டம் கூட ஆரம்பித்து விட்டது. மீண்டும் ராஜபணிகள் மேற்கொள்ள தடையேற்பட்டன. மக்களின் ஆவலை ஈடுசெய்ய ராஜாவும், ராணியும் புதிய ஆடைகளை அணிந்து நகர் வலம் வருவார்களென அறிவிப்பு செய்யப்பட்டது. குறிப்பிட்டதினம், வீதி இருமருங்கிலும் ஒரே கூட்டம். ராஜாவும், ராணியும் புதிய ஆடையுடன் சிறப்பாக யானைமீதேறி நகர்வலம் வந்தனர். மக்கள் வாயடைத்து விக்கித்துப் போயினர். நகரினை வலம் வந்து கொண்டிருந்த ராஜாவும்,ராணியும் பெருமிதத்தால் குதூகலித்தனர்.

ஊரின் புறத்தே ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. தெருவழியே விளையாடிய சிறுவர்களுக்கு உற்சாகம் பொங்கியது. ராஜா, ராணியைப் பார்க்க விரைந்து முன்வரிசைக்கு வந்தனர். ராஜாவையும், ராணியையும் பார்த்த ஒரு சிறுவன் "அங்கே பாராடா ராஜாவும், ராணியும் எங்களைப் போலவே அம்மணமாக வருகிறார்கள்" என்றான்.

ராஜாவுக்கும், ராணிக்கும் வார்த்தைகள் ஏதோ பொறிதட்டியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கறுப்பர்கள்

## - திரிகோணத்தாக்கம்


- ஆத்மன்

### 1

பொலிஸ் காவல்நிலையத்தினுள் சுடும்கருவி எதனையும் கையாளக்கூடாது என பிரான்சின் சட்டவிதி கூற ஆபிரிக்காவின் ஷாயிர் (ZAIRE) நாட்டைச் சேர்ந்த பதினேழுவயது இளைஞன் ஒருவன் பொலிஸ்நிலையத்தினுள் சுடப்பட்டு இறந்து போனான். பாரிஸ் நகர் கூறு பதினெட்டில் நிகழ்ந்த சம்பவம் மட்டுமல்லாமல், பிரான்சின் வேறொரு பகுதியிலும் பொலிஸ்காவலர்களால் இருவர் இறந்து போயினர். இவர்களும் வெளிநாட்டவர்களே.

இதனால் தோன்றிய முறுகல் நிலமை பாரிஸின் சில நகர்கூறுகளை அமைதியிழக்கச் செய்தது. பாரிஸ்நகர்கூறு பதினெட்டாம் பகுதி கண்ணீர்ப்புகை மூட்டத்தாலும், உடைந்த கண்ணாடித்துண்டுகளாலும் மூடப்பட்டுகிடந்தது.

புதிய அரசுபதவியேற்ற பத்துநாட்களுக்குள் இடம்பெற்ற சம்பவங்கள் அவ்வரசின் வெளிநாட்டாருக்கெதிரான கடும்போக்கினை புலப்படுத்தியுள்ளது. இங்கு பொதுமக்களால் அறியப்படாமல் இருந்த BAC எனப்படும் புதிய பொலிஸ் படைப்பிரிவினர் வெளிநாட்டவருக்கெதிரான குற்றச்செயல் தடுப்பு நடவடிக்கைகளில் முதன்முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளனரென்பது குறிப்பிடத்தக்தது.



மார்ச் மாதத்தில் பிரான்சில் இடம்பெற்ற தேர்தலில் ஆளும் கட்சியான சோஷலிசக்கட்சி தோல்வியை தழுவ வலதுசாரிகளின் கூட்டணி வெற்றிபெற்ற போதே வெளிநாட்டாரிடையே அச்சம் பரவ தொடங்கியது.

வலதுசாரிக் கூட்டணி தனது தேர்தல்பிரச்சாரத்தில், குடிவரவை கட்டுப்படுத்தி, சட்டவிரோத வெளிநாட்டாரை வெளியேற்றி 'பிரான்சை சுத்தப்படுத்துதல்'பற்றி வாக்குறுதிகள் வழங்கியிருந்தது.

வாக்குறுதியை செயலாக்கும் வகையில் 86-88ம் ஆண்டு காலத்தில் 'உள்ளூர் விவகார அமைச்சராய்' இருந்து கடும்போக்கை கொண்டவர் எனப்பெயரெடுத்த CHARLS PASQUA அவர்களை 'உள்ளூர் விவகார அமைச்சராய்' வலதுசாரிக்கூட்டணி அரசு நியமித்துக் கொண்டது.

அமைச்சரின் ஆலோசனையில் 'சுத்தப்படுத்தும்பணி' மேற்கொள்ளப்பட்ட போதே பொலிஸ்காவலர்களால் மூவர் இறந்து போயினர். ஊர்வலங்களும், ஒன்று கூடுதலும் தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் வந்து கொண்டிருக்கும் நீண்டபகலைக் கொண்ட கோடையில் தடைகள் மீறப்பட்டு புழுக்கம் அதிகமாகலாம் என்ற அச்சம் அவதானிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2

'கறுப்பு' செய்திகளை எழுதுவது தவிர்க்க முடியாதுள்ளது. நிற ஒதுக்கலுக்கெதிராய் போராடும் ஆபிரிக்க தேசியகாங்கிரஸின் முன்னணித்தலைவர் ' CHRIS HANI ' கொலை செய்யப்பட்டிருப்பது உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.


நெல்சன் மண்டேலாவிற்கு அடுத்ததான செல்வாக்கும், புகழும் கொண்டவராய் விளங்கிய CHRIS HANI தென்னாபிரிக்க கறுப்பின இளைஞர்களின் 'வழிபடும் நாயகனாய்' மதிக்கப்பட்டவர்.

தென்னாபிரிக்க கம்யூனிட் கட்சியின் பொதுச்செயலாளரும், ஆபிரிக்க தேசிய காங்கிரசின் இராணுவப்படையணி பொறுப்பாளருமான CHRIS HANI, காரில் பயணம் செய்துகொண்டிருக்கையில் வீதியில் வைத்து துப்பாக்கி சூட்டிற்கு பலியானார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



A.W.B. எனப்படும், தென்னாபிரிக்க வலதுசாரி வெள்ளையரின் இரகசிய அமைப்பின் உறுப்பினனான போலந்து நாட்டைச்சேர்ந்தவன் கொலையாளியென கைதுசெய்யப்பட்டுள்ளான்.

றொடீசியாவின் விடுதலைப்போராட்டத்திலும் பங்கெடுத்த CHRIS HANI 1987ம் ஆண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரசின் படையணியான 'UMKHONTO' வின் தளபதியாக பொறுப்பேற்று செயல்பட்டார். 1991ல் தென்னாபிரிக்க அரசுடனான சமாதானபேச்சுவார்த்தைகளின் பின் சட்டப்படி நாடுதிரும்பிய அவர் 'நான் இப்போது சமாதானத்தின் போராளி' என தன்னை பிரகடனம் செய்துகொண்டார். ஒருகாலத்தில் தென்னாபிரிக்க வெள்ளையர் அரசால் 'சாத்தான்' என வர்ணிக்கப்பட்ட அவரது மரணம், தென்னாபிரிக்காவில் ஒய்ந்துகிடந்த போராட்ட மெளனம் புயலாக மீளக்கிளம்பியுள்ளது.

### 3

இந்த ஏப்பிரல் மாதத்தை கறுப்பரின் மாதமெனலாமா?

பாரிசின் அமைதியிழப்பும், தென்னாபிரிக்காவின் கொலையும், செய்தித்தலைப்புகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்க, லொஸ் ஏஞ்சல் நகரம் மீண்டும் எரியாவண்ணம் தற்காப்பு நடவடிக்கையில் அமெரிக்க அரசு ஈடுபட்டிருப்பதனையும், செய்திகளில் படிக்க முடிந்தது.

ஏழுவார காலமாய் விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருந்த றொண்டிக்கிங் என்னும் கறுப்பரை பொலிசார் தெருவில் வைத்து தாக்கிய வழக்கின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பும் ஏப்பிரல் மாதத்தின் இரண்டாம் வாரத்தில்தான் எதிர்பார்க்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றம், றொண்டிக்கிங்கின் முறையீட்டை ஏற்று பொலிசாரை குற்றவாளியாக கண்டு மூன்றுவருட சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

இதில் அமெரிக்காவை குலுக்கிய 80 செக்கன் வீடியோ நாடா முக்கிய சாட்சியமாக ஏற்கப்பட்டது.

பாரிஸ், தென்னாபிரிக்கா, லொஸ் ஏஞ்சல் என முக்கோண பிரச்சனைப்புயலில் லொஸ் ஏஞ்சல் அடங்கிவிட்டது. தென்னபிரிக்கா தொடர்கின்றது. பாரிஸ்.....?

## அதற்காகத்தானே

காட்டிலும் மேட்டிலும்
கல்லறைகளைக் கண்டது யார்?
புதையுண்டீர்கள்
விழுந்த இடத்திலேயே

உங்கள் மீது நாளை
எத்தனையோ காலடிகள்
அச்சமின்றி
அமைதியாக வைக்கப்படும்
நீங்கள் போரிட்டதும்
புதையுண்டதும்
அதற்காகத் தானே

கடலின் ஆழத்தில்
கரைந்து கடலும் ஆனீர்கள்
நாளை
புதிய வசந்தங்களில்
புதிய பாடல்கள்
யாருக்காகவும்
கவிதையை மாற்றிக் கொள்ளாத
குரல்கள்
அதற்காகத் தானே
மரணத்தை
மடியிலும் மூச்சிலும்
வைத்திருந்தீர்கள்.

-கனிவண்ணன்-
தமிழ்நாடு

## குட்டிக்கதை

அந்தப் பெண்மணியின் இல்லம் செல்லும் போதெல்லாம் எனக்கு குற்ற உணர்வும் வேதனையும். மரணமாகிவிட்ட தன் கணவன் பற்றியும் - அவர் சசியின் மேல் கொண்டிருந்த நேசம் பற்றியும் கூறுவா. சசி அப் பெண்ணின் மகள். நான் சார்ந்த அமைப்பின் உறுப்பினர்.

அப் பெண்ணின் கணவனான அப் பொலிஸ் அதிகாரியை சுட்டது நாங்கள் தான் என்று அப் பெண்மணிக்கு தெரிய நியாயம் இல்லை.

ஒரு வெள்ளிக் கிழமை. சசியைத் தேடிச் சென்றிருந்தேன். வழக்கம் போல் குசலம் விசாரிப்பு. புறப்படும் வேளையில் அப் பெண்மணி;
" தம்பி நாளை சசியின் அப்பாவின் திவேஷம். கட்டாயம் வர வேண்டும்." என் இதயத்தை முட்செருப்புக் கொண்டு மிதிப்பது போன்ற உணர்வு. மௌனமாகி விட்டேன்.

"தம்பி எனக்கு எல்லாம் தெரியும். சசியின் அப்பாவை....."

நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை.
எனது கால்கள் நடந்து கொண்டிருக்கின்றன.....


- துடைப்பான்

மட்டக்களப்பு
1984. ஏப்பிரல் . 10



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேவை - மறுசிந்தனை

அநாமிகன்

ஐம்பதுகள், அறுபதுகள், எழுபதுகள், எண்பதுகளுமாகி, தொண்ணூறுக்கும் வந்தாயிற்று. நாம் ஆரம்ப அடிச்சு வடியில் தான் இருக்கின்றோமோ! 'தேசத்தின் வரலாற்றுக்கு வருடங்கள் நிமிடங்கள் போல' யாரோ சொன்னது நினைவுக் கோட்டுக்குள்.

நான் பிறந்து, தவழ்ந்து, உருண்ட மண்ணை நினைக்கும் போது ஏனோ நெஞ்சை அடைக்கிறது.

தசாப்தங்கள் கரையக்கரைய எத்தனை புதிய வரவுகள். எமது அடுத்தடுத்த சந்ததியினரும் விளையாட்டாக்கி தூள்பறக்கடிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள். நான் சொல்ல வருவது தமிழுக்கு புதிய சொற்களைத்தான்! A.K.47, G 3, கிளாமர், R.P.G, சாம் 7..... என பல்வேறு 'மனித நாசினிகள்' நாவில் புகுந்து இடம்பிடிக்க விடுதலை, ஜனநாயகம், புரட்சி, தீர்வு, மனிதம்........ எல்லாமே பழையனவாகி உடப்பில் போட்டாயிற்றோ?

பழையன கழிதலும் புதியன புகலும் காலத்தின் நியதியல்லவா!

கொழும்பில்தான் எவ்வளவு மாற்றங்கள். இன்று அகதிகளாகப் புலம்பெயரும் நடுத்தர மற்றும் மேல்தட்டு வகுப்பினருக்கு ஓர் திறந்த புகலிடமாகிவிட்டது. கடந்த ஒரு தசாப்தமாக வீதியில் இறங்கப் பயந்திருந்த முருகனும் காலிவீதியில் ஆடிவேல் பவனியாக வந்துவிட்டார். தவிர கோவில் விழாக்கள், இசை நிகழ்ச்சிகளென தலைநகரில் அடிக்கடி தமிழ்ஓசைகள்.

எல்லாவற்றுக்கும் மேலாக தீர்வு காணவேண்டி தெரிவுக் குழு நடாத்திய நீண்ட சந்திப்புத்தொடர், வித்தியாசமான ஜனாதிபதியாக பிரேமதாஸவை உலகு அரங்கிற்குக் காட்டியதில் வியப்பில்லை.

இந்தியாவில் தங்கியிருந்த தமிழ்க்குழுக்களும் புலம்பெயர்ந்து தெரிவுக்குழுமுன் ஆலோசனைப் பகிர்வென கொழும்பில் சமரசம் கொள்ளவும்; மிகியந்தலைப் படுகொலை சம்பவங்கள் தொடர்பாக இராணுவத்திற்கெதிராக வழக்குத்தொடர்ந்தும்; சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் போன்ற உலகஅமைப்புகள் நாட்டினுள் புகுந்து செயல்பட வழிசமைத்துக் கொடுத்தும்; இந்தியா சென்ற அகதிகளை இந்தியா மூர்க்கமாகத் திருப்பி அனுப்ப அவர்களை மீளக்குடியமர்த்தல் என வரவேற்றும் U.N.P அரசு இனவாதப் போக்கற்றதாக தன்னைக் காட்டி நிற்கிறது.

'என்னதான் கிளியை பேசப்பழக்கி பக்குவப் படுத்தினாலும் பூனையைக் கண்டவுடன் கீச்...கீச்... எனுமாம்? அதுபோல் நாடகம் ஒத்திகை இல்லாமல் கச்சிதமாக நடைபெற்றாலும் அவ்வப்போது உள்நோக்குகள் வெளிப்படாமல் விடுவதில்லை.

பேச்சுவார்த்தை நாடகம் வெளியரங்கிற்கு வந்தாயிற்று. நாடகத்தின் கிளைமாக்ஸ் காட்சியில் திடீர் நகைச்சுவை மன்னர்களின் அதிரடி புரளிகளும் அரங்கேறிவிட்டன. ஆனால் ரசித்து மகிழ்வுறும் மனோநிலையுடனா தமிழர்கள் இருக்கின்றார்கள்.

ரஞ்சன் விஜயரத்தினா முதல் கொப்பேகடுவ..... இன்று லலித், பிரேமதாசா.... என படுகொலைகள். தனித்துவ எண்ண அபிலாசை கொண்ட ஒரு இனத்தின் உள்ளுணர்வுகளை துச்சமெனத் தூக்கியெறிந்துவிட்டு பெருந்தேசிய இனக் கொக்கரிப்பில் மிதந்த கொழும்பு அரசியல் படுகொலைகளாக விலைகொடுத்துக் கொண்டிருக்கிறது. மனித உயிர்கள் விலை பேசப்படுகின்றன. இந்தப் போக்கு எங்கே கொண்டு செல்லப்போகிறது?

கொழும்பில் புதுக்குடித்தனம் பெற்ற புலம்பெயர்ந்த தமிழர்கள் எவ்வளவு பயப்பிராந்தியுடனும், அசாம்பாவிதவேளைகளிலெல்லாம் இடியோசை கேட்ட நாகம் போல் பொந்துகளுள் பதுங்கிக் கொண்டிருப்பதையும் மறுக்கத்தான் முடியுமா?

தமிழ்பேசும் மக்கள்- ஒருபக்கம் இரண்டாம்தரப் பிரசைகளாக நிர்ப்பந்தித்த கொடூர அடக்குமுறைக்கெதிராக முகம் கொடுத்தவண்ணம் வாழ்வே போராட்டமாகிவிட்டது. மறுபக்கம் போர்ச்சூழலில் இருந்து தப்பிக்கவோ, வாழ்வு வழி தெரியாமல் பிசிறியோ புலம்பெயர்ந்தவர்களாக- மூன்றாம்தரப் பிரசைகளாக- வாயில் நுழையாத மொழிச்சூழலிலும் வாழத் தலைப்பட்டு விட்டார்கள்.

அண்மையில் எமது பூமியில் கடலைச் சிவக்கவைத்த கிளாலிச் சம்பவமும் அது கொடுத்த பிரதிபலிப்பும் தெளிவான சமிக்ஞைகளாக வெளிப்பட்டுள்ளன. மக்கள் காட்டுமிராண்டித்தனமாக அழிக்கப்பட்டுள்ளார்கள். முன்னர் குமுதினிப் படகினை அழித்த கொடூரம் மீண்டும் ஒரு முறை அரங்கேறியுள்ளது. தூரதிஷ்டம் பிடித்த தமிழர்களின் இந்த அழிவு சர்வதேச அரங்குகளில் பெரும்கவனத்தைப் பெறவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்வுக்கான முயற்சி கொழும்பிலும் தமிழர்கள் வாழலாம் என்று நாடகமாடும் யு.என்.பி. அரசின் மறுபக்கம் இச்சம் பவத்தில் மிகத்தெளிவான போக்கை காட்டி நிற்கின்றது. கொழும்பில் சமரசம் செய்தவர்களும் கையைப்பிசைந்து கொண்டு ,ஜால்ரா போட்டுக் கொண்டிருக்க, தமிழர் அழிப்பைத் தொடர்ந்தும் மேற்கொள்வதில் பலத்த வெற்றிகண்டுள்ளது.

ooo ooo ooo ooo ooo

'யுக்திய', 'லக்திவ' போன்ற பத்திரிகைகள் வாயிலாகவும் இவற்றின் சகோதரப்பத்திரிகை நண்பர்களான 'சரிநிகர்' வாயிலாகவும் வேறுசில போக்குகளும் இன்று பதிவாகி யுள்ளன. ஸ்ரீலங்காவில் இன்று நடக்கும் அனர்த்தங்க ளால் சுமார் 40 ஆயிரம் தமிழர்களும், 60 ஆயிரம் சிங் களவர்களும் பலியாகியுள்ளனர் என மதிப்பிட்டுக் கூறும் J.V.P கூட ஸ்ரீலங்காவின் பெருங்கட்சிகளான U.N.P , S.L.F.P மீது பழியைப்போட்டு மறுசிந்தனை தொடர்பாக கோடிகாட்டுகிறது.

'பலிக்களம்' பாரிசிலும் மேடையேறிவிட்டது. இப்படித் தான் அன்றொருநாள் யாழ் முற்றவெளியில் பெரிய அரங்கம் அமைத்து லட்சக்கணக்கான பார்வையாளர் மத்தியில் மேடையேறியது. 1971 ஏப்ரல் 5ம் நாள். திகதி யறிந்ததும் ஏதோ நினைவுக்கு வருமே. ஆம்! அந்த ஏப் ரல் J.V.P கிளர்ச்சி நடந்த தினம். யாழ் பொலிஸ் நிலை யத்தை தாக்க புத்தபிக்குகளாக- சுற்றுலாப்பயணி வடி வில் வந்திருந்த J.V.Pயினர் கூடியிருந்த ஜனத்திரளை கவனத்தில் எடுத்து தாக்குதலை ஒத்தியும் வைத்தனர். இதனால் பிசுபிசுப்போன செய்திகளால் பொலிசார் உசாராகி நாடக அரங்கில் பொருத்தப்பட்ட மின்னொ ளியையும் அவர்கள் மீது பாய்ச்சி பூண்டோடு அழித்தார் கள். 22 வருடங்கள் ஓடிவிட்டன. சம்பவம் பசுமையாக நினைவில் வருகின்றது.

ஒற்றைநாட்டிலேயே நாடுதழுவிய ஒரு அதிரடி மூலமே சகலபிரச்சனைகளையும் தீர்க்க முடியுமென J.V.P நம்புகின்றது. இதில் தமிழர்கள் பிரச்சனைகளும் அடக் கம். ஆயினும் தமிழர் சுயநிர்ணய உரிமை, பாரம்பரிய பிரதேசம், கலாச்சார பாரம்பரியம் பற்றிய புரிதலும் தெளிவும் எப்படியுள்ளது? இக் கேள்வி பெருமூச்சை மௌனமாக வெளிப்படுத்துகின்றது. ஆனால் அழிவுறும் தமிழ்மக்கள் மீது நியாயபூர்வமான கரிசனையை காட்டு கின்றார்கள்.

களந்த தேசப்பிரிய (யுத்திய): " தமிழர்களுக்கான சுயநிர் ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் எனச்சுலப மாக வார்த்தையாடிவிடலாம். ஆனால் இதை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதுதான் பிரச்சனை. பெரும்பான்மைத் தமிழர் வடகிழக்கில் வாழ்ந்தாலும், ஏனைய பகுதிகளிலும் வாழ்கின்றார்கள். இது தொடர் பாக பொறுமையாக ஆராய வேண்டும்."

சுனில்மாதவ (லக்திவ): " ஒரு சிறியநாடு துண்டுதுண்டா கப் பிரிவது பிரச்னைக்குப் பரிகாரமாகாது. வடகிழக்கு தமிழர்களுக்கான பாரம்பரிய பிரதேசம் என்பதை ஒத் துக்கொள்ள முடியாது. குறிப்பிட்ட பிரதேசத்தில் வர லாற்றில் சிங்களவரும், தமிழரும் அங்கேயும் இங்கேயு மாக வாழ்ந்துள்ளார்கள். பிரதேசங்களாக தமிழ், சிங்க ளமெனப் பாகுபடுத்தாமல் தமிழ் மக்கள், சிங்கள மக்கள் பேத உணர்வின்றி ஓர் ஐக்கியப்பட்ட போராட்டத்தின் மூலம் தீர்வுகாண முடியும்."

மறுசிந்தனைக்கான கருத்துக்கள் வெளிவந்து விட்டன. ஆனாலும் ஸ்ரீலங்காவில் முகிழ்ந்து வெடித்துள்ள இனமுறிவுப்போராட்டத்தின் முதன்மைப்பாத்திரம் குறித்தபார்வையில் இவர்களது தடுமாற்றம் தெளிவாகப் புலப்படுகின்றது.

சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதென்பதோ- வடகி ழக்கை பாரம்பரிய பிரதேசமாக ஏற்பதென்பதோ ஜீர ணிக்க முடியாததொன்றாய் வெளிப்படுத்துகின்றார்கள். இதே வார்த்தைகளை விழுங்கி வாக்கியமாக்குகின்றார் கள்.

தமிழ்பேசும் மக்கள் தென்மாவட்டங்களையா தமது பூமியாக கேட்டார்கள். ஆனால் இங்கு பரவிவாழ வழி சமைக்கலாமென பாதைகாட்டுகின்றார்கள். 1940 களி லிருந்து பரவிவாழ்ந்த மக்கள் பெற்ற அனுபவங்கள் மறந்தா போயிற்று. ஐக்கியம் முதலில் பெருந்தேசிய மனோநிலையையுடைய மக்களின் மனமாற்றத்தின் தெளிவினால் மட்டுமே ஏற்பட்டுவிட முடியாது. பாதிப் படைந்துவரும் சிறுபான்மைமக்களின் மனோபாவத்தைக் கவனத்தில் கொண்டு அவர்களது தீர்வுக்காக நடைமு றைப்படுத்தப்படும் செயல்களாலேயே உறுதியாக முடி யும்.

விபவி நிகழ்த்திய மூன்றுதின 'நிதர்சனம்' நிகழ்ச்சியில் துளிகூட தமிழுக்கு ஒதுக்கப்படவில்லை. 'நாங்கள் கேட் பது முழுஉணவு- நீங்கள் தருவதோ சோற்றுப்பருக்கை' எனச்சாடும் சரிநிகர் கூட இதுபற்றி தெரிவிக்கையில் 'இங்கு சோற்றுப்பருக்கை கூட கிடைக்கவில்லை' என விசனப்பட்டுள்ளது.

இங்கு பழைய சம்பவம் ஒன்று நினைவில் வருகின்றது.

வாளொந்திய சிங்கம்- சட்டென ஞாபகத்துக்கு வந்து விடும் ஸ்ரீலங்காவின் தேசியக்கொடி.

1947 இல் அப்போதைய அமைச்சர் ஈ.டி. சில்வா அறி முகப்படுத்திய வடிவம் இன்று சிறுசிறு வர்ண மாற்றங் களுடன் அசலாக அப்படியே இருக்கின்றது. ஆனால் இவ்வடிவம் நடைமுறைப்படுத்தப்பட்ட விவாதங்களை நினைவுகூறல் பொருத்தமே.

திரு.ஹண்டி பேரின்பநாயகம் முன்வைத்த 'சிவனொளி பாதமலை' சின்னம் கொண்ட தேசியக்கொடி யோசனை வழமைபோல் ஊதாசீனத்துக்குள்ளாதானது. இந்த யோசனை இலங்கை வாழ்மக்கள் அனைவரது கலாச் சார ஒருமிப்பிற்கும் பொருத்தமாக இருந்தது என அப் போது கருதப்பட்டது.

48ல் தேசியக்கொடிபற்றிய பிரேரணையில் சிங்களவ ருக்கு சிங்கக்கொடி, தமிழருக்கு நந்திக்கொடி, முஸ்லீம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்கு பிறைக்கொடியென மூன்று கொடி வேண்டுமென தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பிரேரித்தார். அப்போது உள்துறைஅமைச்சராக இருந்த சேர் ஒலிவர் குணத்திலக " இலங்கையின் கடைசிக்கோட்டை (கண்டிஇராச்சியம்) யைப் பிரித்தானியர் கைப்பற்றியபோது சிங்கக்கொடியே இறங்கியது. இச்சிங்கக்கொடி தவிர்ந்த வேறொருகொடியையும் அரசாங்கம் ஏற்கத்தயாராக யில்லை" என முற்றுப்புள்ளி வைத்தார்.

கொடிவிடயத்திலேயே தமிழர் தரப்பின் உணர்வுகளும், மாறுபட்டகருத்துக்களும் துச்சமாக மிதிக்கப்பட்ட பாரம்பரிய வரலாற்றை எப்படி மறக்கமுடியும்.

மறுசிந்தனை இன்று எல்லோருக்கும் தேவை. ஆனால் சிந்தனை அடிமூலம் எங்கிருந்து எத்தரப்பு மக்களின் மனதையொட்டி கிளம்ப வேண்டும்?

இலங்கையின் முதுபெரும் இடதுசாரி தலைவராக கருதப்படும் என்.எம்.பெரேரா 'ஒரு மொழியென்றால் இருநாடு- இரு மொழியென்றால் ஒரு நாடு' எனக்கூறியிருந்த பாரம்பரிய வழிவந்த இடதுசாரிகளே சரியான வழிபற்றிக்கூறமுடியுமா?

எது எப்படியாயினும் சிங்கள மக்கள்மத்தியில் யுத்திய, லக்திவ மூலம் தமக்கெனப்பட்ட கருத்துக்களை சுனந்தவும், சுனில்மாதவவும் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் U.N.P அரசின் கொடூர அடக்குமுறைகளுக்கு முகம் கொடுத்து முன்வைத்து வருகின்றார்கள். ஆனால் ஆரோக்கிய விவாதங்களாக கருத்துக்களை முன்மொழிந்து பகிர்வது இன்றைய தேவையல்லவா? முன்வருவீர்களா?

---

*"விமரிசகர்களுக்கு ஒரு வார்த்தை.*
*வேதாந்திகள் கைக்குள் சிக்காத*
*கடவுள் மாதிரித்தான் நான் பிறப்பித்து*
*விட்டவைகளும். அவை உங்கள் அளவு கோல்களுக்குள்*
*அடைபடாதிருந்தால் நான் பொறுப்பாளியில்லை."*

*ஏப்.25,1906*

# புதுமைப்பித்தன்

*ஜூன் 30,1948*

*.. ராஜமார்த்தாண்டன்..*

*(புதுமைப்பித்தன் ஆய்வில் தீவிரமாக ஈடுபட்டவர் இவர்- சென்னையில் வெளிவரும் தினமணி நாளேட்டின் உதவி ஆசிரியர்.)*

நவீன தமிழ்க் கவிதைக்கு வளம் சேர்த்ததில் பாரதிக்குண்டான பங்கு, சிறுகதைத் துறையில் புதுமைப்பித்தனுக்குண்டு. பாரதி ஒரு தீவிரமான நம்பிக்கைவாதி. புதுமைப்பித்தனோ அவருக்கு எதிர்மறையானவர்.

புதுமைப்பித்தனின் ஆரம்பகாலத்துச் சிறுகதைகள்- 1934-37 காலகட்டத்தில் எழுதப்பெற்றவை- உணர்ச்சி வேகம் மிக்க ஆவேச வெளிப்பாடுகள். கதைக்கருவின் வளர்ச்சி சீராக அமைந்து முழுமை பெறாமல், சமனப்படாமல் உணர்ச்சிகளின் குமுறல்களாக வெளிப்பட்டுள்ளன. சில கதைகளில் ஆசிரியரின் குறுக்கீட்டையும் காணலாம். உதாரணத்திற்குப் 'பொன்னகரம்' கதையின் கடைசிப்பகுதி. கதைக்கருவின் சீரான வளர்ச்சி ஆசிரியரின் கோபாவேசக் குறுக்கீட்டால் ('கற்பு கற்பு என்று கதைக்கிறீர்களே, இதுதான் ஐயா பொன்னகரம்!') சிதைவடைகிறது. இப்போக்கினை 'புதிய நந்தன்', 'கவந்தனும் காமனும்', 'நியாயந்தான்', 'வழி' போன்ற சிறுகதைகளிலும் தெளிவாகக் காணலாம். புதுமைப்பித்தனின் நேர்பாதி சிறுகதைகள் இக்காலகட்டத்தில் எழுதப்பெற்றவை என்று தெரிகிறது.

எனினும், இக் கதைகள் எவையும் பிரசார நோக்கம் சிறிதும் இல்லாதவை. சமுதாய முரண்பாடுகளை, மனித வாழ்க்கையின் சீரழிவுகளைக் கண்டு கோபம் கொண்ட ஓர் இளம் கலைஞனின் கோபாவேசமான வெளிப்பாடுகள். காரணம், புதுமைப்பித்தன் கலைப்படைப்பின் நோக்கங்களைத் தெளிவாக உணர்ந்திருந்த ஒரு கலைஞன். பிரசாரம் செய்வதோ, போதனை செய்வதோ, வாசகனுக்கு உகந்ததைக் கொடுத்துக் கிளுகிளுப்பூட்டித் தன் பக்கத்தில் இழுத்துக் கொள்வதோ என்றும் அவர் நோக்கமாக இருந்ததில்லை.

புழுதிபடிந்துபோன இந்த வாழ்க்கையின் யதார்த்தநிலைகளை எவ்விதத் தயக்கமுமின்றி நம் கண்முன் நிறுத்தி, 'எதையோ வாழ்க்கை என்று மயங்கி நிற்கிறீர்களே, இதுதானய்யா நம் வாழ்க்கை' என்று கேலியும் கிண்டலுமாகச் சுட்டிக்காட்டிவிட்டு நகர்ந்து விடுகிறவர். அந்தக் கிண்டலின் பின்புலம் ஆழ்ந்த வாழ்க்கை நோக்கும் ஒருவித சோகமும் நிறைந்தது. இத்தன்மை புதுமைப்பித்தனின் பிற்காலச் சிறுகதைகளில் கலை நேர்த்தியுடன் சிறப்பாக வெளிப்பட்டுள்ளது.

சுந்தர ராமசாமி குறிப்பிடுவது போன்று, "புதுமைப்பித்தனின் உலகம் ஆன்மீகம் சார்ந்ததல்ல; பொருள் சார்ந்தது". பொருளாதார ரீதியாகவும் சமூகரீதியாகவும் நலிவுற்றவர்கள், இரண்டுங்கெட்டான் நிலையிலான படித்த நடுத்தரவர்க்கங்கள், வயிற்றுப் பிழைப்புக்காகத் தொலைதூரக் கிராமங்களிலிருந்து பிடுங்கி நகரங்களில் நடப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வெளியீட்டாளர் குறிப்பு:

*'மௌனம்' முதல் இதழ் உங்கள் கைகளில்- காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சல்லவா? ஆனால் அறிவு மகிழ்வுறச் செய்யவில்லை. உங்கள் கருத்துக்களை, எண்ணங்களை, ஆலோசனைகளை, குறைகளை எதிர்பார்த்து மேலும் சிறப்புற காத்திருக்கின்றது.*

*மௌனம்- முத்திங்கள் சிற்றிலக்கிய இதழ். முதல்நான்கு இதழ்கள் விற்பனைச் சுற்றுக் கென்று இல்லாமல் நண்பர்களுக்காக, இலக்கிய ஆர்வலர்களுடன் கருத்தால் கைகோர்க்கும் பணியைத்தாங்கி வெளிவரத்திட்ட மிடப்பட்டுள்ளது. ஆனாலும் ஐரோப்பிய நாடொன்றில் ஒரு சிற்றிலக்கிய இதழை வெளிக்கொணர்வதிலுள்ள சிரமங்கள் அறியப்படாததொன்றில்லை. மௌனத்தின் வெளிப்பாட்டின் மீது ஆர்வமுள்ளோரிடமிருந்து அன்பையும், ஆதரவையும் நாடியுள்ளோம்-*

*மௌனம் குறைவான பிரதிகளாக வெளியிடப்படுவதால் இதழ் கிடைக்கப்பெறுவோர் தம்மைச்சுற்றியுள்ள நண்பர்கள், அன்பர்களது பார்வைக்கும் கொண்டுபோதலை பெரிதும் விரும்புகின்றோம்.*

*படைப்பாளிகள், ஆக்க இலக்கிய கர்த்தாக்கள், விமர்சகர்கள், வாசகர்கள், கருத்து முரண்பாடுடையவர்கள்..... என்று எல்லாத்தரப்பிலிருந்தும் ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். இதழ் மேலும் மேலும் கனதியாக செழுமையடைவதை நாம் விரும்புகின்றோம்.*

*பேச்சுச்சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம், விமர்சனச்சுதந்திரம் என எழுத்துலக கோட்பாட்டை மௌனம் தாங்கிவரும். கருத்து முரண்பாடுடையவர்களின் ஆக்கங்களையும், விவாதங்களையும் கலை இலக்கிய ரசனையுடன் வெளியிட மௌனம் தயாராகவுள்ளது. இந்த வகையில் கருத்துக்கள் அவ்வவ் ஆக்கங்களுக்குரியவ ரின் பொறுப்பாகிறது.*

*சிறந்த ஆக்கங்கள் பரவலாக்கப்படுவதை மௌனம் பெரிதும் விரும்புகின்றது. மௌனம் இதழிலிருந்து மறுபிரசுரம் செய்ய விரும்பினால் மூலம் பற்றிய குறிப்புடன் வெளியிடலாம்.*

*ஆதரவு நல்க:* *MR.* VIGNES Charles , *No 6, SQUARE DU ROULE , 92200 NEUILLY S/SEINE , FRANCE.*

மனித ஜீவன்களின் வாழ்க்கை நிலை, மனோபாவங்கள், சாதி, சமய, சமுதாயக் கட்டுப்பாடுகளின் சுமைகளை ஏற்றுக்கொள்ள முடியாமலும் வீசியெறிய முடியாமலும் அவதிப்படும் ஜீவன்களின் மன உழைச்சல்கள்- என்று விதவிதமான மனித உலகங்கள் இவர் கதைகளின் பொருளம்சங்களாக அமைந்துள்ளன. தம் சமகாலப் படைப்பாளிகள் பார்க்க விரும்பாத, புரையோடிப் போன சமுதாயத்தின் புண்களை ஆற்றல் வாய்ந்த தம் எழுத்தால் கீறி விட்டவர் புதுமைப்பித்தன். அவ்வகையில் இவரது வாழ்க்கைப் பார்வை மிகவும் தனித்துவம் வாய்ந்தது.

'என் எழுத்துக்களின் பொதுத் தன்மை நம்பிக்கை வறட்சி'என்று புதுமைப்பித்தன் குறிப்பிட்டுள்ளதையே திரும்பத் திரும்பச் சொல்லும் பல விமர்சகர்களும், 'எதிர்மறையான விஷயங்கள் இலக்கியத்துக்கு வலுக்கொடுக்குமா? என்று கேட்கலாம். அது ஏற்பவர்களின் மனப்பக்குவத்தைப் பொறுத்ததேயொழிய, எதிர்மறைபாவத்தின் விஷயத் தன்மையைப் பற்றியதல்ல' என்று தொடர்ந்து இவரே கூறியிருப்பதைப் பற்றிச் சிந்தித்ததாகத் தெரியவில்லை. மேலும் புதுமைப்பித்தன் ஒரு முன்னுரையில், 'நான் கேட்டது, கண்டது, கனவு கண்டது, காணவிரும்பியது, காணவிரும்பாதது ஆகிய சம்பவக்கோவைகள்தாம்' தம் கதைகள் என்று குறிப்பிட்டிருப்பதையும் கவனத்தில் கொண்டால், இவரது படைப்புலகம் குறித்த பல நுட்பங்கள் தெளிவு பெறும்.

மனிதன் அடிப்படையில் நல்லவன் தான் என்னும் நம்பிக்கை இன்றைய நடைமுறை வாழ்க்கையின் குரூரப் போக்கினால் சிதைந்து போய்விட்ட அவலத்தையே புதுமைப்பித்தன் கதைகள் பலவும் வெளிப்படுத்துகின்றன. எங்கும் எதிலும் பொய், பெறாமை, போலித்தனம், பித்தலாட்டங்கள் மலிந்துவிட்டதைக் கண்டு ஏற்பட்ட ஆத்மார்த்தமான கோபாவேசமே எதிர்மறைபாவமாவும் கிண்டலாகவும் சாட்டையடிகளாகவும் இவரது கதைகளில் வெளிப்படுகின்றது. இது மனிதனின் மீதான வெறுப்பால் அன்று; சிதைவின் மீதான வருத்தத்தாலும் கோபத்தாலும் ஆழ்ந்த மனிதநேயம் மிக்க ஒரு கலைஞனின் எதிர்மறையான கலை வெளிப்பாடாக இதனைக் கொள்ள வேண்டும். மனிதன் பால் எஞ்சியுள்ள நம்பிக்கையை இவர் கதைகளில் வரும் கள்ளங்கபடமற்ற குழந்தைகளிடம் மட்டுமே காணமுடிவதன் காரணமும் இது தான்.

மனிதனால் படைக்கப்பட்டு, இன்று மனிதனையே ஆட்படுத்திவிட்ட கடவுளரை நோக்கி மனிதன் லோகாயதமான கேள்விகளை வீசி அவர்களைத் தடுமாறவைக்கும் கதைகளையும் புதுமைப்பித்தன் எழுதியிருக்கிறார். மேற்குறித்த இலக்கிய மனோபாவம்தான் இதற்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரணம் 'சாமியாரும் குழந்தையும் சீடையும்' கதையின் பின்பகுதி வருமாறு: 'மனிதன் நல்லவன்தான்; தான் உண்டாக்கின கடவுளிடம் அறிவை ஒப்படைத்திருந்தால் புத்திசாலியாக வாழ்ந்திருக்க முடியும். அப்பொழுது அது தன்னிடமிருந்ததாக அவனுக்குத் தெரியாது. இப்பொழுது அறிவாளியாக அல்லல்படுகிறான்' இதுதான் இன்றைய மனிதனின் சோகமான கதை.

அறிவுபூர்வமான பார்வையினால் மட்டுமோ, உணர்ச்சி வேகம் கொண்ட அணுகுமுறையினால் மட்டுமோ வாழ்க்கையின் யதார்த்த உண்மையை- நிலையை- சரியாகப் புரிந்துகொள்ள இயலாது. உணர்ச்சி வேகம் சமன்பட்ட ஆழ்ந்த அனுபவப்பார்வையின் தேடலிலேயே வாழ்க்கையின் யதார்த்த உண்மை நிலையையும் அதன் எதிர்மறைத் தன்மையும் பிடிபடக்கூடும். இத்தகைய மனோபாவத்தின் வெளிப்பாடுகளாக, புதுமைப்பித்தனின் சாதனைக்குரிய சிறுகதைகளாக 'சிற்பியின் நரகம்', 'சாபவிமோசனம்', 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்', 'சித்தி', 'செல்லம்மாள்', 'நினைவுப் பாதை', 'அன்று இரவு', 'கயிற்றரவு', 'மகாமசானம்', 'மனக்குகை ஓவியங்கள்' போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நாவல், நாடகம், கவிதைகளும் இவர் எழுதியுள்ளார். சிறுகதையில் அடைந்த வெற்றியை இவற்றில் பெறவில்லை என்றாலும், புதுமைப்பித்தன் என்னும் கலைஞனது ஆளுமையின் சிதறல்களைப் பல இடங்களிலும் காணமுடியும். இவரது விமர்சனக் கட்டுரைகள் இன்றும் சிந்தனையைத் தூண்டும் வகையில் நுட்பமும் கூர்மையும் மிகுந்தவை.

ஆரம்பகாலம் முதலே கதைசொல்லும் முறையில், உத்தி-உருவ அமைப்பில், நடையில் பல்வேறு சோதனைகளைச் செய்தவர் புதுமைப்பித்தன். ஒவ்வொரு கதையும் ஒரு சோதனைக் கதை எனலாம்...! யதார்த்தம் தன் இயல்பு அழிந்து புனைவு கொள்ளும் புதிய எழுத்து முறைக்கான வேட்கையே நவீன இலக்கியப் பிரக்ஞை என்று சிலர் சொல்கிறார்கள். புதுமைப்பித்தனின் ஒரு சில கதைகளிலும் இத்தகைய தன்மையை காணமுடியும்.

புதுமைப்பித்தனின் கதைகள் இன்றும் புதுமையான அனுபவவீச்சைக் கிளர்விப்பதன் காரணம், இவரது தனித்துவமான வாழ்க்கைப் பார்வையும் அதை வெளிப்படுத்த இவர் கையாண்ட செறிவான, புதுமையான மொழிநடையும் தான். அடர்ந்த காட்டினுள் நுழைவது போன்ற புதுமையான அனுபவ உணர்வுகளைத் தோற்றுவிப்பன இவரது படைப்புகள். இதன் காரணமாகவே, அன்றும் இன்றும் இவரது படைப்புகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் தொடர்கின்றன. இதற்கெல்லாம் அன்றே பதில் சொல்வது போன்று, தன் படைப்புகள் குறித்து இவ்வாறு கூறியுள்ளார் புதுமைப்பித்தன்.

'வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரிதான் நான் பிறப்பித்து விட்டவைகளும். அவை உங்கள் அளவுகோல்களுக்குள் அடைபடாதிருந்தால் நானும் பொறுப்பாளியல்ல; நான் பிறப்பித்து விளையாடவிட்டுள்ள ஜீவராசிகளும் பொறுப்பாளிகல்ல'.

## புதுமைப்பித்தனை படிக்காதவர்கள் சிறுகதை எழுதக்கூடாது

சுஜாதா

ஒரு எழுத்தாளர் அமரத்துவம் (அ)சாகாவரம் பெற்று விட்டார் என்பதற்கு சில முக்கிய அடையாளங்களுண்டு. அவர் படைப்புகளை சாகித்ய அகாதமி போன்றோர் மொழி பெயர்த்து வெளியிடுவார்கள். மதுரை காமராஜ் போன்ற பல்கலைக்கழகங்கள் எம்.ஏ பாடப்புத்தகமாக வைத்து 'இருபது வரிகளுக்கு மேற்படாது இவருடைய கற்பனைத் திறமை பற்றி எழுதுக' என்று பரீட்சைத் தாளில் கேள்வி கேட்பர். இதெல்லாம் நடந்தால் அவரை ஜனங்கள் மறந்து கொண்டிருக்கிறார்கள் என்பது உத்தரவாதம்.

பிறந்த தினம் அல்லது இறந்த தினம் மட்டும்தான் ஞாபகத்தில் இருக்கும் சில கிழவர்கள் மயிலை சாஸ்திரி ஹாலில் பேசும்போது, இந்த மறதி முழுமை பெறுகிறது.

பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் அப்படித்தான் ஆகிக்கொண்டிருக்கிறது. மு.வ. இந்தப் பட்டியலில் எப்போதோ சேர்ந்துவிட்டார். அண்மையில் நா.பார்த்தசாரதி அவர்களைப் பற்றி உருக்கமான கட்டுரை வந்தது.

புதுமைப்பித்தனை அந்த மறதிக் கோஷ்டியில் எளிதில் சேர்க்க முடியாது. காரணம் ஒவ்வொரு தலைமுறையும் கண்டு பிடிப்பதற்கு அவரிடம் ஏராளமான சரக்கு இருக்கிறது. என்னை வந்து சந்திக்கும் ஆரம்ப எழுத்தாளர்கள் பலர் மேசைமேல் தெருக்கோடி காக்கா கடையில் வாங்கிய ஆப்பிள்களை வைத்ததும் கேட்கும் கேள்வி " என்னென்ன புக்ஸ் படிக்கணும் சார் எழுத்தாளனாவதற்கு" எல்லோருக்கும் தவறாமல் "புதுமைப்பித்தன் படிங்க" என்பேன்.

சிலர் படித்துவிட்டு மனமொடிந்து "நான் செய்ய நினைச்சது எல்லாமே அவர் செய்து விட்டாருங்களே இனிமே எழுத ஏதும் பாக்கியில்லைங்க; உஜாலா விளம்பரத்தைத் தவிர" என்று எழுதி ஆட்டோமொபைல் டிப்ளமா படிக்கத் தீர்மானித்து விட்டேன் என்று முடிப்பார்கள். நான் மௌனமாகப் புன்னகைப்பேன், தமிழன்னையை மற்றுமொரு எழுத்தாளரிடமிருந்து காப்பாற்றிய திருப்தியில்.

புதுமைப்பித்தனைப் படித்தும் சுதந்திரமாக அவருடைய பாதிப்பு இல்லாமல் எழுதுவதற்கு தைரியம் வேண்டும். இன்றைக்கு நன்றாக எழுதுபவர்கள் பட்டியல் ஒன்று கைவசம் வைத்திருக்கிறேன். அவர்கள் அனைவரிடமும் புதுமைப்பித்தனின் நடையின் சாயல் இருப்பதை எந்தக்கோர்ட்டிலும் நான் சாட்சி சொல்லத்தயார்.

நன்றி: சுபமங்களா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*வேறுள்ள குழுவை யெல்லாம் மானுடம் வென்றதம்மா. - கம்பன்*

# மௌன உடைவுகள்

*கி.பி.அரவிந்தன்*

அகதியென பதிவுபெற்று ஆண்டுகளும் கடந்து விட்டது. அதுவும் அண்டைநாட்டிலல்லாமல் ஆறாயிரம் மைல் களுக்கப்பால் ஐரோப்பிய தேசமொன்றில்...

நான் இங்குவந்து சேர்ந்தது 'நிர்ப்பந்தமானது', 'தவிர்க் கமுடியாதது', 'விருப்பமில்லாதது', 'தற்செயலானது' என எத்தனையோ சொற்றொடர்களில் விளக்கம் கூறி திருப்தியுற்றாலும், உள்மனநெருடலை தணிக்கத்தான் முடியவில்லை.

வெள்ளையர் தேசம் செல்லுதல் என்னும் கனவு, விருப் பம் நமக்கு இருந்ததே இல்லையா?
அரசியலும், போராட்டமும் என்ற சூழல் தோற்றம் பெறவில்லையானால் ஊரிலேயே நாம் வாழ்ந்திருப் போமா?

அதுவும் யாழ்ப்பாணத்தார்! பொய்சொல்கிறோம் என்றே கருதுகின்றேன்.

மலாயன் பென்சனிமார் சங்க கட்டிடங்கள் வெளிநாடு செல்லுதலின் அசலான சாட்சியங்கள்.
உரும்பிராயில், வட்டுக்கோட்டையில், மானிப்பாயில் மலாயன், சிங்கப்பூர் பணவரத்தாளர்கள் காட்டிய பவுசு களும், எடுப்புகளும், அட்டம் அயலாரை ஏங்கி பெருமூச் செறிய வைத்திருக்கும் என்பதை, சிதைந்து கிடக்கும் அந்த நாற்சார் கல்வீடுகளில், தடித்த மதிற்சுவர்களில் இன்றைக்கும் காணலாம். தமிழர்களின் தந்தை எனச்சி றப்பிக்கப்படும் சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்கள் மலேசியாவில் பிறந்த குடிமகன்தான். மலேசிய பென்ச னிமார் பரம்பரைதான்!

ஆனால் இவை திரைகடலோடி திரவியம் தேடுதல் எனும் முதுமொழி அளவுகோலுள் அடங்கக்கூடியது.

இந்த 'லண்டன் கனவு' அப்படிப்பட்டதல்ல. யாழ் குடா நாட்டுசமூகத்தின் கனவு அது. வாழ்வின் முக்திபெறு நிலையது. ஒற்றைக்கால் தவமது. யாழ்ப்பாணக்குடாநாட் டின் மேற்குகரையை அண்டிச் சிதறிக்கிடக்கும் தீவுகளி லொன்றில் வாழ்ந்த சிறுவன் ஒருவன்மண்ணில் விர லால் கீறிய உலகவரைபடத்தில் இங்கிலாந்து எனும் கோட்டின்மேல் உட்கார்ந்து கொண்டு 'அம்மா நான் லண்டனில் இருக்கின்றேன்' என கூவி பெருமிதம் கொண்டானாம். இப்படி கனவுகண்டே லண்டன்போய் சேர்ந்த அப்பையனை சுட்டிக்காட்டி என்வயதொத்தவர் கள் சிறுவர்களாய் இருக்கையில் தந்தையர் புத்திசொல்லி வழிகாட்டியதன் மூலம் பரவிய கதை இது.

இந்த லண்டன் கனவின் நீட்சியும்தான் இன்றைய ஐரோப்பிய அகதிவாழ்வு என்றால் மிகையல்ல.
கசக்கும், சுடும் உண்மை இது.

சிறப்புக்கல்வி பெற லண்டன் வெளிநாடு செல்லுதல் எனும் நிலைமாறி, நாட்டைவிட்டு தப்பித்தல், வெளிநாட் டில் குடியேறுதல் என்பதற்காய், கல்விகற்று லண்டன் பரீட்சைக்கு தோற்றுதல், யாழ்ப்பாண மேட்டுக்குடியின ரின் வாழ்க்கை நெறியானது எழுபதாம் ஆண்டுகளின் பின்பல்ல.

*படிப்படியே கல்வி வளர்ச்சியும் மலேசியா, சிங்கப் பூர் போன்ற கிழக்காசிய நாடுகளுக்கான பொரு ளாதாரப் புலப் பெயர்வுகளும் அதிகரித்தன. யாழ்ப்பாணத் தமிழனுக்கு தென்னிலங்கையில் பல்வேறு அரசு, தனியார்துறை உத்தியோக வாய்ப் புகளும் முதலீடுகளும் அதிகரித்தன. இப்படி வெளிவாரியாகத் தேடப்பட்ட செல்வம் யாழ்குடா நாட்டினுள் புகுந்தமை இயல்புக்குமாறான அள வில் நடுத்தர வர்க்கத்தை விரிவடையச் செய்தது. தொடர்ச்சியாக இடம்பெற்ற நடுத்தர வர்க்க வளர்ச்சியும் நகராக்கமும் வேறொரு விதத்தில் யாழ்குடாநாட்டின் வாழ்வையும் சுற்றுச் சூழலையும் பாதித்தது.*

*சூழலியலும் தமிழ்ப்பிரதேசங்களும்.....*
- வ.ஐ.ச.ஜெயபாலன் நன்றி- வீரகேசரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கைத்தீவின் சுதந்திரத்தின் முன்னாலேயே லண்டன் பயணம் தொடங்கிவிட்டது.

யாழ்ப்பாணக்குடாநாடு இலங்கைத்தீவின் ஏனைய பகுதிகளை விடவும், பாரிய அளவிலதான பாடசாலைகளையும், கல்லூரிகளையும் கொண்டிருந்தது. அத்துடன் மேலேத்தேய கல்வி போதனா முறையும், பாடவிதானங்களும் கொண்டியங்கின இக்கல்லூரிகள். யாழ்ப்பாணத்தாரின் கல்விப்பாரம்பரியம் பற்றி இன்றைக்கும் பலர் புளகாங்கிதம் அடைவதுண்டு. சமூகத்தை வளப்படுத்தும் மூளைவிருத்திக்கான கல்வியாய் இல்லாமல், கறிக்குதவாத ஏட்டுப்படிப்பும், அடிமைச்சேவகம் செய்யும் கல்விப்பாரம்பரியமும் தான் இது என்பது புளகாங்கிதமடைவோர் அறியாத ஒன்று.

இத்தனை புகழ்மிக்க கல்விச்சேவையிலிருந்து பறந்து செல்லவும், தப்பிக்கவும், லண்டன்கனவை வாழ்க்கை நெறியெனக் கொள்ளவும் யாழ்ப்பாணத்தார்க்கு காரணம் இல்லாமலா இருந்திருக்கும்.

க.அருமைநாயகம் அவர்கள் எழுதிய 'ஈழத்தமிழ் சமுதாயத்தில் சாதியத்திற்கெதிரான போராட்டம்' எனும் சமூக ஆய்வில் இருந்து கீழே தரப்படும் பகுதியை படிப்பீர்களாயின் உண்மை புரியக்கூடும். 1930ம் ஆண்டில் யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பை, அதன் விளைவுகளை க.அருமைநாயகம் அவர்கள் சான்றாதாரங்களுடன் விபரிக்கின்றார். (பெட்டித்தகவல் காண்க)

ஆறுபது ஆண்டுகளுக்கு முன்னான யாழ்ப்பாணக் குடாநாட்டு நிலமை இப்படித் தான் படம் பிடிக்கப்படுகின்றது. பாடசாலைகள் நடைபெறாமலும், மூடப்பட்டும் இருந்தன என்பதை அறிய கவலையாகத்தான் இருக்கிறது. மலினமான, சாதாரண, தீண்டத்தகாத மக்கள் சமஆசனம் கொள்ளும், போட்டியிடும் மலினப்பட்ட கல்வி யாருக்கு வேண்டுமென்று தான் லண்டன் கல்வியும், லண்டன் கனவும், கொழும்புக்கான புலப்பெயர்வும் உருப்பெறத்தொடங்கியது.

## சம ஆசனம்

*ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரது முயற்சியினாலும், பின்னர் சைவர்களது பிரயத்தனங்களினாலும் பல பாடசாலைகள் தாபிக்கப்பட்டன. இவைகளில் பெரும்பாலானவை அரசாங்க நன்கொடை பெறும் பாடசாலைகளாகவும் விளங்கின. இவைகளில் சிலவற்றில் ஹரிஜனர் படித்து வந்தாலும் உயர்சாதிப் பிள்ளைகளுடன் சரிநிகர் சமானமாக ஆசனமமைத்துப் படிக்க முடியவில்லை. தரையிலமர்ந்து அல்லது வகுப்புக்கு வெளியே நின்றுதான் பாடம் கேட்க வேண்டியிருந்தது. அரசாங்க நன்கொடை பெறும் பாடசாலைகளில் இந்நிலை நீடிப்பதை விரும்பாத அரசாங்கம் 1929 ஆம் ஆண்டு கல்விப் பணிப்பாளரது பிரமாணம் ஒன்றின் மூலம் அரசாங்க, அரசாங்க உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளனைத்தும் இன,மத,சாதி,தேசிய வேறுபாடின்றி சகல பிள்ளைகளுக்கும் சரியாசனம் கொடுக்க வேண்டுமெனப் பணித்தது. இப்பிரமாணம் யாழ்ப்பாணம் முழுவதும் பெருங்கொந்தளிப்பை ஏற்படுத்தியது.*

*சினங்கொண்ட சாதியபிமானிகள் பதினைந்துபாடசாலைகளைத் தீக்கிரையாக்கினர். துன்னாலை, புத்தூர், உரும்பிராய் போன்ற இடங்களில் நடைபெற்ற வன்முறைச் சம்பங்களைத் தடுப்பதற்காக பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவுகள் தாபிக்கப்பட்டன. உயர் சாதியினரது பயமுறுத்தல்களால் தாழ்ந்த சாதியினர் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பவில்லை. வேளாளரும் கல்விப்பணிப்பாளரது பிரமாணத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்முகமாக தமது பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பவில்லை. இதனால் ஏழாலை, கோப்பாய் தவிர்ந்த ஏனைய கிராமங்களில் பாடசாலைகள் ஒழுங்காக நடைபெறவில்லை. வேறுசிலர் அரசாங்க உதவி நன்கொடைகளைப் பெறாத பாடசாலைகளை தாபித்துநடத்தினர். 1930 இல் அரசாங்கம், நன்கொடைபெறாத 12 பாடசாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கியது. இவ்வாண்டுகளில் பாடசாலைகள் ஒழுங்காக நடைபெறவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக பிள்ளைகளது பாடசாலைவரவு ஒழுங்கீனம் சம்மந்தமாகத் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையிலிருந்து அறிந்து கொள்ளலாம். 1929 ஆம், 1930 ஆம், 1931 ஆம், 1932 ஆம் ஆண்டுகளில் முறையே 5376, 9447, 8098, 14286 வழக்குகள் தொடரப்பட்டன. கல்விப்பணிப்பாளரது பிரமாணத்திற்கு எதிராக மக்கள்காட்டிய எதிர்ப்பும் பயமுறுத்தல்களுமே இப்பெருந்தொகை வழக்குகளுக்கு பிரதான காரணமென வடமாகாண அரசாங்க அதிபர்கள் தமது அறிக்கைகளில் சுட்டிக்காட்டியுள்ளனர். வழக்கு தொடரப்படும் எனத்தெரிந்திருந்தும் பாடசாலைகளுக்கு வராதோரின் எண்ணிக்கை அதிகரித்ததற்கு உரிய பொறுப்பு குற்றவாளிகளுக்கு கிராமச்சங்கங்கள் காட்டிய ஆதரவாகும். கிராமச்சங்கங்கள், தாமே சமஆசனத்திற்கு எதிராக இருந்த காரணத்தினால் இவ்வழக்குகளில் அவ்வளவு உற்சாகம் காட்டவில்லை. இதனாலேயே பாடசாலை வழக்குகளை பொலிஸ் நீதிமன்றத்திற்கு மாற்றக்கூடிய சட்டத்திருத்தமொன்று அவசியமென அரசாங்க அதிபர் ஒருவர் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்தார். அரசாங்கம் தனது கொள்கையை தீவிரமாக கடைப்பிடித்தபொழுதிலும் பாடசாலைமுகாமையாளர்களும், கிராமபொலிஸ் விதானைமாரும் தொடர்ந்து தாழ்ந்த சாதியினரை பயமுறுத்திக்கொண்டிருந்தனர். இத்தகைய பயமுறுத்தல்களினால் சிறுப்பிட்டியில் உள்ள அரசாங்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை தனது பதிவை இழந்தது. உதவி நன்கொடை பெறுவதற்காகப் பாடசாலைகள் மாணவரிடையே பாரபட்சம் காட்டப்படுவதில்லை என்ற உறுதிப்பத்திரத்தை அரசாங்கத்திற்குக் கொடுத்தாலும் நாலாம் ஐந்தாம் தசாப்தம் வரையும் சில பாடசாலைகள் ஹரிஜனப்பிள்ளைகளுக்கு அனுமதிவழங்கவில்லை. அக்காலப்பாடசாலை முகாமையாளரது மனப்பான்மிற்கு எடுத்துக்காட்டாக ஹண்டிப்பேரின்ப நாயகம் விவரித்த நிகழ்ச்சியொன்று இதற்குச் சான்றுபகிர்கின்றது. 1944 ஆம் ஆண்டு ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் பதவிக்கு நடைபெற்ற நேர்முகப்பரீட்சையின் போது அக்கல்லூரியின் முகாமையாளர் திரு..வி. சுப்பிரமணியத்திடம் தெரிந்து கொள்ள விரும்பிய பிரதான விடயம் அவர் பாடசாலையில் ஹரிஜனப்பிள்ளைகளுக்கு இடமளிப்பாரா என்பது தான். கிறிஸ்தவப்பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில் பெரும்பாலும் இரண்டாம் மகாயுத்தம் முடிவுற்ற பின்னரேயே ஹரிஜனப் பிள்ளைகளுக்குப் படிக்கும் வாய்ப்பேற்பட்டது.*

*பாடசாலைகளில் மாத்திரமின்றி பஸ்களிலும், வாடகைக்கார்களிலும் ஆசனவசதிகிடைக்காததினால் யாழ்பாண ஒடுக்கப்பட்ட தமிழர் சேவைச் சங்கத்தை( Jaffna Depressed Tamil Service League) சேர்ந்தவர்கள், வாடகை வாகனங்களில் தமக்கு சம ஆசனவசதி செய்துதர வேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர். இவர்களுடைய கிளர்ச்சியினால் வேளாள பஸ் சாரதிகள் 1933 ஆண்டில் வேலை நிறுத்தம் செய்தனர்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்நாட்டிலும் இதே காலகட்டத்தில் பிராமணர் எதிர்ப்பியக்கம் வீச்சுபெறத் தொடங்கியிருந்தது.'தந்தை பெரியார்' என சிறப்பிக்கப்படும் ஈ.வெ.ராமசாமி அவர்களின் தலைமையிலான சுயமரியாதை இயக்கமும்- பின்னாளில் பெயர் மாற்றம் பெற்ற திராவிடர் கழகமும், இந்த மதம் கற்பிக்கும் நால் வர்ண பேதமுறைக்கும் (சாதிமுறைமை) வர்ண ஆச்சிரம கல்விமுறைக்கும் எதிரான கிளர்ச்சிகளைத் தொடங்கியது.

இதனால் யாழ்ப்பான உயர்சாதியினரைப்போல் கல்வி கேள்வியை தம்கையப்படுத்தி வைத்திருந்த பிராமண சமூகத்தினர் தமிழ்நாட்டை விட்டுத்தப்பிக்கவும் குடிபெயரவும் தலைப்பட்டனர். ஏனெனில் பெரியார் ஈ. வெ.ரா *'பாம்பையும், பார்ப்பானையும் கண்டால் பார்ப்பானை முதலில் அடி'* எனச்சூத்திரருக்குக் கற்பிக்கத் தொடங்கியிருந்தார். பெரியாரின் இவ் எதிர்ப்பு இயக்கம் தான் தமிழ்நாட்டு 'உயர்குடியினரான' பிராமணரின் *'அமெரிக்க கனவை'* தோற்றுவித்த முக்கியகாரணம் எனலாம். அமெரிக்காவில் குடியேறிய பிராமணர்களின் இரண்டுங்கெட்டான் வாழ்க்கை முறையை மையமாய்க் கொண்ட நகைச்சுவைத் தொடர்நவீனம் தான் சாவியின் 'வாசிங்டனில் திருமணம்'. படித்து சுவைக்கக்கூடியது, நகைக்க கூடியது. ஆனால் *'அமெரிக்கக் கனவு'*தமிழ் நாட்டை பெரிதும் பாதித்ததில்லை. அதற்கு காரணங்கள் பல. இதை தனியாக ஆராயவேண்டும்.

இங்கே ஒருநகைச்சுவைச் சம்பவமொன்று என்நினைவுக்கு வருகின்றது. இரண்டாம் உலகமகாயுத்தம் உக்கிரமாக நடந்தவேளை, சென்னையில் கூடிய *'பிராமணாள் சங்கம்'* ஒன்று ஹிட்லர் மாபெரும் வெற்றியடையப் போகின்றார் நாம் இப்போதே ஜேர்மன் கற்க ஆரம்பிப்பது நல்லது என தீர்மானம் எடுத்திருந்தனராம்! இந்தத் தகவல் திராவிட கழகமேடைகளில் பார்ப்பணரைப்பற்றிய அனல்பறக்கும் பேச்சுக்களில் எல்லாம் இடம்பெறும். கொழும்பில் நீண்டகால வதிவிடவாசிகளான 'சிலோன் டமில்ஸ்' எண்பதியேழு ஒப்பந்தம் வந்தவேளையில் இனிநாமெல்லாம் ஹிந்தி படிப்பதுதான் நல்லது என ப்பகிர்ந்த உள்மனவெளிப்பாட்டை இங்கு ஒப்பிடாமல் இருக்க முடியவில்லை.

நம்மவர்களின் லண்டன் கனவு அப்படியல்ல. யாழ்ப்பாண சமூகத்தையே உலுக்கியது. லண்டன் சென்ற யாழ்ப்பாணத்தார் பெண் எடுக்கவென்றும், வயதான பெற்றோரை பார்க்க வேண்டுமென்றும், மேலதிக சொத்து விவகாரங்களைத் தீர்க்க வேண்டுமென்றும் அத்துடன் 'லண்டன் பவுசை' காட்டவேண்டுமென்றும் ஊரில் தலைகாட்டினர். யாழ்ப்பாணத்து ஆண்டபரம்பரைப் பெண்களும் லண்டன் மாப்பிள்ளை வேண்டி கௌரி விரதம் இருந்து 'பவுத்திரம்' காத்தனர். லண்டன் மாப்பிளை வாங்குவதற்காகவே கறள்பிடித்த ரங்குப் பெட்டிக்குள் பணமும் தங்கமும் தூங்கிக் கிடந்தன. துண்டாடப்பட்ட தோட்டக்காணிகளில் பணப்பயிரும், மணியோடர் பண வரத்தும் கொண்ட யாழ்ப்பாணக்குடாநாட்டின் கொஞ்சநெஞ்ச பொருளாதாரமும் லண்டனுக்கே திசைதிருப்பப்பட்டது. லண்டன் மாப்பிள்ளைகளாக-லண்டன் வாசிகளாக- திரும்பியவர்கள் எல்லோரும் இஞ்சினியர்களாகவும்(!), டாக்டர்களாகவும்(!), அக்கவுண்டன்களாகவும்(!) இருந்தார்கள் என்பதுதான் இதில்முக்கியமான விடயம்.

இந்தியாவின் பிரமராகவிருந்து படுகொலையான திரு. ராஜீவ் காந்தி தனது பேட்டியொன்றில் "நான் லண்டனில் படித்தபொழுது எனது கைச்செலவுக்கு தியேட்டரில் ஐஸ்கீறிம் விற்றிருக்கின்றேன்" என்று கூறியிருந்தார். அவரது மனைவியரான இத்தாலியப்பெண்மணி திருமதி.சோனியாகாந்தி தன்கணவன் பற்றி அண்மையில் வெளியிட்ட நினைவுமலரில் தாங்கள் காதலித்தவேளையில் தன்னைக் காண்பதற்கு லண்டனில் இருந்து இத்தாலிக்கான விமானசீட்டு பணத்துக்காக ஒருநாளைக்கு பத்துமணித்தியாலம் வீதம் கட்டிட நிர்மாணவேலை செய்து உழைத்து ராஜீவ் பணம் சேமித்தார் என நினைவுகூர்ந்துள்ளார். இப்படி பலரும்..... வெளிநாடுகளில் படிக்கச் சென்றவர்கள் உழைப்பதென்பது சாதாரண விடயம். ஆனால் இந்த யாழ்ப்பாணத்தார் லண்டனில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பிய பொழுது, லண்டன் தங்கள் நிர்வாகத்தின் கீழ் இருப்பதாக பீற்றிக்கொண்டார்கள். ஆனால் இவர்கள் உணவுவிடுதிகளில், வைத்தியசாலைகளில், சவக்காலைகளில், பெற்றோல் நிரப்பு நிலையங்களில், பேக்கரிகளில், தொழிலாளிகளாக, சிற்றூழியர்களாக இருந்தார்கள் என்பதனை கெட்டித்தனமாக மறைத்தார்கள். சிலர் படித்தார்கள், இன்னும் சிலர் உழைத்துப் படித்தார்கள். பலர் உழைத்தார்கள். யாழ்ப்பாணம் வந்தபோதோ இவர்கள் அனைவரும் படித்து பட்டம் பெற்றவர்களாய் இருந்தார்கள்! பால் பொயின் பேனாவும், சென்மைக்கல் சேர்ட்டும், சொக்கலேட்டும் கொணர்ந்து சுற்றார்க்கு அன்பளித்த போது பாடசாலைகளில் லண்டன் கனவு கிசுகிசுவென விரிந்தது. அறுபதுகளின் பிற்பகுதியில் மேடையேற்றப்பட்ட நகைச்சுவை நாடகமான 'லண்டன் மாப்பிள்ளை' யாழ்ப்பாண மனப்போக்கின் கிண்டல் வடிவமான வெளிப்பாடெனக் கொள்ளலாம். 'வாசிங்டனில் திருமணம்' நகைச்சுவைத் தொடருக்கு முந்தியது இந்நாடகம். நாடகத்தின் வசனத்தொடர்கள் எதுவும் நினைவுக்கு வரவில்லை. யார் எழுதியது, நடித்தது என்ற விபரமும் தெரியவில்லை. இன்றைக்கு நினைக்கையில் அந்தக் கலைஞர்கள் சரியான சமூகவிமர்சகர்களாகவே தெரிகின்றனர்.

> *யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் பெற்ற உயர்சாதி நிலவுடைமையாளர்கள் கிராமியக் கலைகளை இழிசனர் வழக்காக ஒதுக்கி தென்னிந்திய உயர் கலைகளான கர்நாடக சங்கீதம், நாதஸ்வரம், தவில், பரதநாட்டியம் என்பனவற்றைப் பேணினர். நமது கலாச்சாரம் வேரோடியிருந்த கிராமியக் கோவில் வழிபாடு மரபையும் சிதைத்து கோவில்களையும் தெய்வவழிபாட்டையும் பிராமணர் தலைமையில் ஆகமவழிப்படுத்தினர். இவ்வாறு தான் யாழ்ப்பாணம் கலாசாரப்பாலைவனமாயிற்று.*
>
> சூழலியலும் தமிழ்ப்பிரதேசங்களும்.....
> - வ.ஐ.ச.ஜெயபாலன் நன்றி- வீரகேசரி

லண்டன் கனவின் வியாபகத்தினால், ஊரில் உழைக்கலாம், சமூகத்தை மேம்படுத்தலாம் என்ற எண்ணங்கள் கைவிடப்பட்டும், மண்ணுடன் இணைந்த வாழ்வும், உணர்வும் முறிபட்டும் போகும் நிலையை உய்ந்துணர்ந்த சாமானியக் கலைஞர்களின் வெளிப்பாடான 'வெளிக்கிடடி விஸ்வமடுவுக்கு' என்ற நாடகமும் குறிப்பிடத்தக்கதே.

துள்ளலிசைப்பாடகர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு எழுபதுகளில் பிரபல்யம் பெற்ற துள்ளல் இசைப்பாடல்களில் சமூக எண்ணங்கள் விரவிக்கிடப்பதனை 'ஈழத்துப் பாடல்கள்' ஒலிநாடாவில் கேட்கையில் தெரியவரும். துள்ளல் இசைப்பாடலொன்று இப்படியாக அமைந்துள்ளது.

*லண்டனிலே மாப்பிள்ளையாம்*
*பொண்ணு கேக்கிறாங்க*
*ஆயிரமாயிரமாய் சீதனமும்*
*அள்ளிக் கொடுக்கிறாங்க*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எத்தனையோ பொம்பிளைங்க
ஏமாந்து போனாங்க
இன்னும் சில பொம்பிளைங்க
ஏமாறப் போறாங்க

ஐயையோ வெட்ககேடு
யாருக்கு தெரியும்
இந்த நாட்டிலின்று நடப்பதென்ன
யாருக்கு புரியும்.

இந்தப் பாடல்கள், நாடகங்கள் பற்றியெல்லாம் யாழ்ப்பாண சமூகம் பெரிதாக அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.
இன்றைக்கும் அந்தக் கனவு தணிந்தபாடாய் இல்லை.

இந்தக் கனவின் உந்துதல் யாழ்ப்பாண குடாநாட்டில் எழுத்தறிவு பெற்ற எவருக்காவது இல்லாமல் இருந்திருக்குமாயின் அவர்கள் விதிவிலக்கானவர்கள், அல்லது இயலாதவர்கள்.

எழுபதாம் ஆண்டுகளின் பின் உருப்பெற்ற 'பெடியன்களின்' போராட்டம்தான் தம்காவிய வாழ்வை, கனவு இருப்பை குலைத்தது, சிதைத்தது எனக் கூறுபவர்கள், குற்றம் சுமத்துபவர்கள் சமூக ஓட்டத்தை புரியாத லாடான் பூட்டிய குதிரைப்பார்வை உடையவர்களே.

ஈழத்தமிழரின் புலம்பெயர் வாழ்வுக்கு போராட்டமும், அரசியலும் ஒரு காரணமே தவிர அதுவே முழுமுதலானதல்ல.


ஒருவேளை முல்லைத்தீவில், திருகோணமலையில், மட்டக்களப்பில், அம்பாறையில் உள்ளோர் அங்கிருந்து புலம்பெயர்ந்தோர் அரசியலையும், போராட்டத்தையும் தம்நிலைக்கு முழுமுதல் காரணமென குற்றஞ்சாட்டலாம்.

லண்டன்கனவை யாழ்ப்பாண சமூகத்துள் விதைத்து, மண்மாதாவை புறந்தள்ளிய கறுத்த உடலும் வெள்ளை மண்டையுமான (BLACK BODY WITH A WHITE HEAD) ஆண்டபரம்பரையினர், 'லண்டன் டமில்ஸ்'களான (LONDON TAMILS) யாழ்ப்பாணத்தார்தான் இன்றைய ஈழத்தின் அவலவாழ்வின் பொறுப்பாளிகள் என்றால் மிகையல்ல. இதை ஆழமாக ஆராயவேண்டுமல்லவா?

## மௌன உடைவுகள்


நன்றி
இதழ் வெளிவர ஒத்துழைத்த சாம்சன், லிங்கம், மனோகரன், அதியமான், பரணி
முன்அட்டை: RALPH GIBSON
பின்அட்டை: REFUGEE
முன்உள்அட்டை: MONDE et VOYAGE
பின்உள்அட்டை: LARMES(TEAR) 1930-33 photograph by MAN RAY
மற்றும் உள்ளே இடம்பெற்ற பல்வேறு படங்களுக்குரியவை.


COMMENT — THE INDEPENDENT — TUESDAY 20 APRIL 1993




யூகோஸ்லாவியாவின் நிலைதான்
இலங்கையிலும்.....


www.tamilarangam.net

உயிரே, நினது பெருமை யாருக்குத் தெரியும்?
நீ கண்கண்ட தெய்வம்.
எல்லா விதிகளும் நின்னால் அமைவன.
எல்லா விதிகளும் நின்னால் அழிவன.
உயிரே,
நீ காற்று, நீ தீ, நீ நிலம், நீ நீர், நீ வானம்.
தோன்றும் பொருள்களின் தோற்ற நெறி நீ.
மாறுவனவற்றை மாற்றுவிப்பது நின் தொழில்.
பறக்கின்ற பூச்சி, கொல்லுகின்ற புலி, ஊர்கின்ற புழு,
இந்தப் பூமியிலுள்ள எண்ணேயில்லாத உயிர்த் தொகைகள்-
இவை யெல்லாம் நினது விளக்கம்.
மண்ணிலும், நீரிலும், காற்றிலும் நிரம்பிக் கிடக்கும் உயிர்களை
கருதுகின்றோம்.
காற்றிலே ஒரு சதுர அடி வரம்பில் லஷக்கணக்கான சிறிய
ஜந்துக்கள் நமது கண்ணுக்குத் தெரியாமல் வாழ்கின்றன.
ஒரு பெரிய ஜந்து; அவற்றுள்
இன்னுஞ் சிறியவை - இங்ஙனம் இவ்வையக முழுதிலும்
உயிர்களைப் பொதிந்து வைத்திருக்கிறது.
மஹத் - அதனிலும் பெரிய மஹத் - அதனிலும் பெரிது - அதனிலும் பெரிது-
அணு - அதனிலும் சிறிய அணு - அதனிலும் சிறிது - அதனிலும் சிறிது -
இரு வழியிலும் முடிவில்லை; இருபுறத்திலும் அநந்தம்.
புலவர்களே, காலையில் எழுந்தவுடன் உயிர்களை யெல்லாம் போற்றுவோம்.

"நமஸ்தே, வாயோ,த்வமேவ ப்ரத்யஷம் ப்ரஹ்மாஸி."

வசன கவிதை

- பாரதியார் -



www.tamilarangam.net

